Vol.5, Issue 12 | Annual Subscription ₹ 480

@NewsRotary

/RotaryNewsIndia

மே 2023

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

ADVT.


PROMISE OF HEALTH AND HAPPINESS
SAY IDHAYAM • SPELL HEALTH
Mantra
SATISFACTION 100% GUARANTEED
IDHAYAM
SESAME OIL
Mantra
GROUNDNUT OIL
• Unmatchable Quality and Colour • Abundant Flavour While Cooking
• Wonderful Taste • Endless Health Benefits
IDHAYAM | www.idhayam.com | office@idhayam.com | Whatsapp : 9944766661

# உள்ளே


12
கிருஷ்ணகிரியில் மாற்றத்தை உருவாக்கிய நீர்மேலாண்மைத் திட்டம்

20
நிஜ வாழ்க்கை பஜ்ரங்கி பைஜான் கதை

28
உலகில் நம்பிக்கையை உருவாக்குங்கள்

34
RIPE மெக்கினலியை ஆச்சரியப்படுத்திய சென்னை ரோட்டராக்டர்கள்

38
பொகாரோ அருகிலுள்ள கிராமத்தை உருமாற்றும் ரோட்டேரியர்கள்

44
ரேகா ஷெட்டி: என்றும் புன்னகைக்கும் தலைவர்

46
மும்பையில் பார்வையற்றோருக்கான ஒரு சினிமா விருந்து

48
ரோட்டரி அமைதிப் பணியில் கேரளத்திலிருந்து லடாக் வரை

52
எகிப்து: பாரோக்கள் மற்றும் பிரமிடுகளின் நாடு

62
மாற்றுத்திறனாளி தம்பதிகளுக்கு திருமணம்

66
வெப்பத்தை வெல்ல குளுமையான வழிகள்

68
ஷங்கர்-ஜெய்கிஷன்: பாலிவுட் இசையில் தடம் பதித்தவர்கள்

74
குடல் சீராக இருந்தால்தான் உடல் ஆரோக்கியமாக இருக்கும்

76
போர் காலக் கதைகள்




## சிறப்பாகத் தொகுக்கப்பட்ட ஏப்ரல் இதழ்

*ரோட்டரி நியூஸ் ஏப்ரல் 2023 இதழைப் படித்து மகிழ்ந்தேன். அதற்கு முக்கியக் காரணம், எங்கள் சங்கத் திட்டம்பற்றிய ஒரு கட்டுரை அதில் இடம்பெற்றிருந்தது. நான் எப்போதும் இந்த இதழை விரும்பிப் படிக்க இரண்டு காரணங்கள்: ஒன்று, அதன் அழகான, ஈர்ப்பான வழங்குதல்; இரண்டு, ரோட்டரியன்கள், மற்றவர்கள் என அனைவருக்கும் ஏற்ற மிகச் சிறந்த தகவல்களைக் கொண்ட கட்டுரைகள். இந்த இதழும் அதேபோல்தான் அமைந்திருந்தது. இளம் பரிமாற்ற மாணவர்களை வியக்கவைத்த வடகிழக்கு இந்தியா என்ற கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. புனே ரோட்டரியன்கள் RYE மாணவர்களைச் சிரமப்பட்டு வடகிழக்குக்கு அழைத்துச் சென்று, அந்தப் பகுதியின் வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்தியதை அறிந்து மகிழ்ந்தேன்.*

*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் தன்னுடைய பத்தியை RYE மாணவர் அன்னீலா கர்ரசெடோ-வுக்கும் ரோட்டரி இளைஞர் வலைப்பின்னல் திட்டத்தின் தொடக்கத்துக்கும் வழங்கியது எதிர்பாராத புதுமை. அந்தக் கட்டுரை ஆர்வமூட்டும்வகையில் அமைந்திருந்தது.*

*நிறைவாக, புகழ் பெற்ற இசை அமைப்பாளர் நௌஷத் பற்றிய அழகான கட்டுரை என் நெஞ்சைத் தொட்டது. எளிமையான பின்னணியிலிருந்து வந்த அவர் இந்திய இசைத் துறைக்கு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளார். அவரைப்பற்றிப் படிப்பது மிகச் சிறந்த அனுபவமாக இருந்தது.*

*ரோட்டரி இதழ் ஒன்றில் ரோட்டரியுடன் தொடர்பில்லாதவர்களைப் பற்றிய கட்டுரைகள் ஏன் பதிப்பிக்கப்பட வேண்டும் என்று நான் பல நேரங்களில் யோசித்ததுண்டு. ஆனால், இப்போது, அது ஒரு நல்ல பழக்கம் என்று நான் உணர்கிறேன். ஏனெனில், அது இதழுக்கு ஆர்வத்தைக் கூட்டுகிறது, விரும்பிப் படிக்கவைக்கிறது, அறிவை வளர்க்கிறது.*

*நாராயண சக்ரிதயா*
*RC மும்பை பாண்டுப் — D 3141*




*பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதற்கு RI மாவட்டம் 3212 நடத்துகிற யாதுமானவள் நிகழ்ச்சியில் கிராமப்புறப் பள்ளி மாணவி ஒருவர் கலந்துகொள்ளும் புகைப்படத்தைக் கொண்டிருந்த ஏப்ரல் இதழின் அழகான அட்டைப் படத்தைக் கண்டு நான் மகிழ்ந்தேன். பெண்களுக்கு ஆற்றல் அளிக்கவும், அவர்களுடைய வாழ்க்கையில் எதிர்வரக் கூடிய எந்தவொரு சவாலையும் சந்திக்க அவர்களுக்கு உதவவும் இந்த மாவட்டம் செய்யும் மிகச் சிறந்த பணியை நான் மிகவும் பாராட்டுகிறேன். இளம் பெண்களை ஊக்குவிக்கவும், குறைந்த சுய மதிப்பை எதிர்க்கவும் RID 3212 மற்றும் DG முத்து செய்து வரும் பணி பாராட்டவேண்டியது. பெண் சக்தி கதைகளும் உண்மையும் எதார்த்தமும் என்கிற ஆசிரியர் குறிப்பு, பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதற்குப் பாலினச் சமநிலை மற்றும் சமூகத்தின் ஆதரவுடைய முக்கியத்து வத்தைத் தெளிவாகக் காண்பிக்கிறது.*

*நம் உலகை இன்னும் தூய்மையாக, இன்னும் பசுமையாக ஆக்குவதில் மரம் நடுவதன் முக்கியத்துவத்தை RID மகேஷ் கோட்பாகி விளக்குகிறார். வெவ்வேறு திறன் கொண்ட ரோட்டரியன்களுடைய எதிர்பார்ப்புகளை எட்டுவதில் நெகிழ்வுத் தன்மையின் முக்கியத்துவத்தை RID A S வெங்கடேஷ் வலியுறுத்துகிறார். ரோட்டரியன்கள் இயற்கையை நேசிக்கவேண்டும், அதன் அழகைப் பாதுகாக்க வேண்டும் என்று TRF அறங்காவலர் தலைவர் இயான் ரைஸ்லி ஊக்குவிக்கிறார்.*

*பஞ்சாயத்துப் பள்ளி மாணவர்கள் உருவாக்கிய தொலைநோக்கி, பெண் ஓட்டுநர்களுக்குப் பயிற்சியளித்த ரோட்டரி, இளம் பரிமாற்ற மாணவர் களை வியக்கவைத்த வடகிழக்கு இந்தியா, HIV பாதிப்பு கொண்டோர் தங்கள் ஆன்மத் தோழர்களைச் சந்திக்கிறார்கள், சேரிப் பெண்களுக்கு சந்தித்த சவால்களை அவர் நினைவுகூர்ந்தார்.*

K M K மூர்த்தி
RC செகந்திராபாத் — D 3150

### நௌஷாதுக்குப் பொருத்தமான பாராட்டுரை

இசை அமைப்பாளர் நௌஷாத் பற்றிய கட்டுரை, இந்தித் திரை இசைக்குப் பங்களிப்போரைப் பற்றி S R மது எழுதி வரும் பாராட்டுரைகளில் மிகச் சிறந்த ஒன்றாகும். லதா மங்கேஷ்கர், கிஷோர் குமார் அல்லது முகம்மது ரஃபி பற்றிய பாராட்டுரை ஒன்றை எழுதுவது எளிது. ஆனால், நௌஷாத் அல்லது கய்யாமின் அறிவாற்றலைப் பதிவு செய்ய நிறைய முயற்சி தேவை. கய்யாம் பற்றி S R மது ஒரு கட்டுரை எழுதவேண்டும் என்று ரஷீதா கோருவார் என்று நம்புகிறேன். அதைப் படிக்க நான் ஆவலாக உள்ளேன்.

சம்பத்குமார், முன்னாள் ஆசிரியர்
தி இந்து பிஸினஸ்லைன்

ஏப்ரல் இதழில் தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் தன்னுடைய பத்தியை ரோட்டராக்டராக இருந்து இன்டராக்டராக மாறிய அன்னீலா கர்ரசெடோ-வுக்கு வழங்கியது பாராட்ட வேண்டியது.
நோய்ப் பரவல் நேரத்தில் தான்

### ஊக்கமளிக்கும் திட்டம்

ரோட்டரி நியூஸ் ஏப்ரல் இதழ் உண்மையில் ஊக்கம் அளித்தது. வாய் பகுதியில் பழங்குடியின வீடுகளுக்கு ஒளியளித்த சூர்யா திட்டம் ஒரு மிகச் சிறந்த ரோட்டரி வெற்றிக் கதை.

நாடுமுழுவதும் உள்ள பழங் குடியின மக்கள் பல சிரமங்களைச்

*ஓர் MHM திட்டம், துருக்கியில் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிய RID 3000 ரோட்டரியன்கள் மற்றும் உள்ளடக்கிய ஓர் இசைத் திருவிழா ஆகிய மற்ற அனைத்துக் கட்டுரைகளும் சிறப்பாக அமைந் திருந்தன. அத்துடன், பாலிவுட் இசையின் வைரமாகிய நௌஷாத் பற்றிய கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன்.*

*ஃபிலிப் முலப்பொனெ M T*
*RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

*ஏப்ரல் இதழின் வளமான உள்ளடக் கத்துக்கு மிகுந்த பாராட்டுகள். நான் அனைத்துக் கட்டுரைகளையும் முழுமையாக ரசித்தேன். இந்த இதழில் ஒவ்வொரு படமும் மிகவும் மகிழ்ச்சியான படம்.*

*நான் எப்போதும் ஆசிரியர் குறிப்பைப் படிப்பேன், நேரடியாக இதயத்திலிருந்து எழுதும் அவருடைய வெளிப்பாட்டுப் பாணியால் ஊக்கம் பெறுவேன். பெண் ஆற்றல் கட்டுரையின் நிறைவுப் பத்தியில் நான் என்னைக் காண்கிறேன்.*

*TCA ஸ்ரீனிவாச ராகவனுடைய LBW பத்தியை நான் விடாமல் படிக் கிறேன். அவருடைய நுட்பமான நகைச்சுவை உணர்வு மிகச்சிறந்தது!*

*சந்திரிகா ரகு*
*இன்னர் வீல் — D 318*

சந்திக்கிறார்கள். சிலர் அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் வாழ் கிறார்கள். சதாரா மாவட்டத்தின் வாய் வட்டத்தில் இப்படி ஒரு தேவை எழுந்த போது, ரோட்டரியன்கள் துள்ளி எழுந்து செயல்பட்டார்கள், சூரிய ஒளியில் இயங்கும் விளக்குகள், தெரு விளக்குகளை அமைக்கிற ஓர் எளிய செயல், அந்தப் பழங்குடியின மக்களைக் காட்டு விலங்குகளிடமிருந்து பாது காத்துள்ளது, அந்தச் சமூகத்தில் ரோட்டரியின் தோற்றத்தை மிகவும் உயர்த்தியுள்ளது. மதிய உணவுத் திட்டத்தை விரிவாக்கி, அதன்மூலம், தேவையுள்ளோர் மீது நேரடியாகத் தாக்கம் கொண்டுவரும் தீர்மானம் ஒரு திட்டத்தை நிறை வேற்ற மிகச் சிறந்த வழியாகும். சங்கங்களின் இதுபோன்ற மிகச்சிறந்த செயல்கள் ரோட்டரியை நம் நாட்டின் ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டுசெல்லும் என்று நம்புகிறேன்.

டாக்டர் ஜெயசேகரன் V P
RC பையனூர் — D 3204

மார்ச் இதழில், ஜப்பானியத் தேநீர் வல்லுனர், RC க்யோட்டோ-சவுத்-ஐப் பதிவு செய்ய உதவியவர், RC க்யோட்டோ-வின் முன்னாள் தலைவர், RID 2650, ஜப்பானின் PDG ஜென்ஷித்சு சென்-ஐச் சந்தித்ததுபற்றிய தன் அனுபவங் களைத் தலைவர் ஜோன்ஸ் எழுதியுள்ளார். சென் ஒரு மிகச் சிறந்த மனிதர் என்றும், அவரைச் சந்திப்பது ஒரு பெருமை என்றும் அவர் உணர்ந்தார். ஒவ்வொரு மாதமும், தான் செல்லும் நாடுகளில் ‘தனக்குமேல் சேவை’யில் சிறந்து விளங்கும் ரோட்டரியன்களைப்பற்றி ஜோன்ஸ் பேசுகிறார். ரோட்டரியைப் பற்றியும், அதன் வளர்ச்சிக்குப் பங்களித்தவர்களைப்பற்றியும் மேலும் தெரிந்துகொள்ள நமக்கு உதவும்.

S முனியாண்டி
RC திண்டுக்கல் — D 3000

## வெறுப்பின் ஆட்சி இன்னும் தொடர்கிற இடம்

ஆர்வமூட்டும் தகவல்களுடன் நன்றாக எழுதப்பட்டுள்ள அன்பு வெறுப்பைத் தோற்கடிக்கும்போது என்ற மார்ச் ஆசிரியர் பக்கத்தை நான் படித்தேன். இது ஒரு நல்ல கட்டுரை!

நான் RC சிக்மகளூர் RID 3182 உறுப்பினர். எங்கள் சங்கத்தில் 87 உறுப்பினர்கள் உள்ளார்கள். நாங்கள் இரண்டு வாட்ஸாப் குழுமங்கள் நடத்துகிறோம்: ரோட்டரி சங்கமாக ஒன்று, ‘அதிகாரப்பூர்வமற்ற ரோட்டரி’யாக இன்னொன்று. துரதிருஷ்டவசமாக, ‘அதிகாரப்பூர்வமற்ற குழு’வில் இஸ்லாமிய ரோட்டரியன்கள் சேர்க்கப்படவில்லை. உங்கள் ஆசிரியர் பக்கம் இதுபற்றி என் கண்களைத் திறந்தது. எங்கள் சங்கத்தில் எல்லாரும் இதைப் படிக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்!

G L வெங்கடேஷ் மூர்த்தி
RC சிக்மகளூர் — D 3182

## திருத்தம்

ஜனவரி இதழில், ரோட்டரியன் களுக்கு வாழ்க்கைகளை மாற்றும் ஆற்றல் உண்டு என்ற கட்டுரையில், RILM திட்டத்தின் உதவித்தொகை $1 பில்லியன் மதிப்பு கொண்டது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அது உண்மையில் $1 மில்லியன் (ரூ.8.2 கோடி) ஆகும். பிழைக்கு வருந்துகிறோம்.

— ஆசிரியர்

அட்டையில்: குப்பாச்சிப் பாறையில் RC மெட்ராஸ் கோரமண்டலின் நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர்வாரப்பட்டு நீர் நிரம்பி உள்ள ஒரு ஏரி.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் ***rushbhagat@gmail.com*** அல்லது ***rotarynewsmagazine@gmail.com*** என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் ***www.rotarynewsonline.org*** என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

# பரிவு மிக்க செயல் வீரர்கள்

நம் உலகில் துணிவான, வீரமான, நோக்கம் கொண்ட தலைமைக்கான நேரம் வந்து விட்டது என்று நான் நம்புகிறேன்.

சென்ற மாதம் இந்தப் பத்தியில் நீங்கள் என் அன்பு நண்பர் அன்னியெல்லா கர்ராசிடோவுடன் பேசினீர்கள். அவர் நம்முடைய ரோட்டரி குடும்பத்தின் மிகச் சிறந்த உறுப்பினர், முன்னாள் இன்டராக்டர், இந்நாள் ரோட்டரியன்.

அன்னி அச்சத் தாக்குதலைச் சமாளிப்பதுபற்றிய தனிப்பட்ட கதை ஒன்றைப் பகிர்ந்துகொண்டார், இதை நானும் சந்தித்துள்ளேன். இந்தக் கதை பெற்றுள்ள வரவேற்பு, பதில்களைப் பார்க்கும்போது, நாம் நம்முடைய வலிமைகளை மட்டுமின்றி, நாம் ஆபத்துக்கு இடமாகக்கூடிய விஷயங்களையும் ஒப்புக்கொள்ளவேண்டும் என்பதன் முக்கியத்துவம் புரிகிறது.

நாம் ஒருவருக்கொருவர் ரோட்டரிக்குள் வசதி மற்றும் பராமரிப்பை உருவாக்குவதுபற்றிப் பேசும்போது, அன்னி பகிர்ந்து கொண்டது போன்ற விஷயங்களைப் பகிர்ந்துகொள்வதில் நாம் எல்லாரும் வசதியாக உணர்கிற, ஒருவரை ஒருவர் ஆதரிக்கிற ஒரு சங்க அனுபவத்தை நாம் விவரிக்கிறோம். வாழ்க்கையில் நாம் எதைச் சந்தித்தாலும் சரி, நாம் தனியாக இல்லை என்பதை நாம் அறியும் இடமாக ரோட்டரி இருக்கும்.

நாம் நம்முடைய உலகுக்கு உதவுவதற்கு நிறைய நேரம் செலவிடுகிறோம். எடுத்துக்காட்டாக, இளம்பிள்ளைவாதத்தை முடிக்கப் பணியாற்றுதல், சுற்றுச்சூழலைத் தூய்மைப்படுத்துதல். இதனால், சில நேரங்களில், நம்முடைய சக உறுப்பினர்கள், சேவைக் கூட்டாளர்களுக்கு நம்முடைய ஆற்றல் மற்றும் அக்கறையில் சிறிதளவு வழங்க வேண்டிய தேவையை நாம் மறந்துவிடக்கூடும்.

நம் உறுப்பினர்களுடைய வசதியுணர்வும் பராமரிப்பும்தான் உறுப்பினர் மன நிறைவு மற்றும் தக்கவைத்துக்கொள்ளுதலைத் தூண்டும் மிகப் பெரிய அம்சமாகும். இதற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் கிடைப்பதை நாம் உறுதிசெய்யவேண்டும், மன நலச் சிகிச்சையை நாடுவதில் இருக்கும் களங்க உணர்வைக் குறைக்க உதவும் சேவையைச் செய்வதன்மூலம் நாம் இந்தப் பிணைப்புகளை மேலும் உறுதியாக்கவேண்டும், பராமரிப்பு அணுகலை விரிவாக்கவேண்டும்.



RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் RIPE கார்டன் மெக்கினலி மற்றும் ஹெதருடன் ஜனவரியில் நடைப்பெற்ற RI மாநாட்டில்.

அதனால்தான், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கார்டன் மெக்கினலி அவர்கள் ரோட்டரி உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி, நாம் சேவை செய்யும் சமூகங்களுக்கெனவும் பன்னாட்டு மன நல அமைப்பை மேம்படுத்த உதவும் மிகச் சிறந்த பார்வையைக் கொண்டிருப்பது கண்டு நான் நெகிழ்கிறேன்.

நாம் மன நலத்தில் கவனம் செலுத்தவிருப்பதை ஃப்ளோரிடாவில் உள்ள ஒர்லாண்டோ-வில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான பன்னாட்டுச் சந்திப்பில் கார்டன் அறிவித்தபோது, பிறருக்கு உதவுவதன் மூலம் அழுத்தம் குறைகிறது, நம் மன நலன் மேம்படுகிறது என்று அவர் நமக்கு நினைவுபடுத்தினார்.

மன நலத்தில் நாம் காண்பிக்கும் புதிய கவனத்தைச் சரியாகச் செய்யச் சிறிது நேரமாகும். எனினும், நாம் செயல் வீரர்கள். அந்தச் செயலுக்குப் பின்னால் அக்கறை, இரக்கம், பரிவு, உள்ளடக்குதல் ஆகியவை உள்ளன.

மன நல வெற்றியாளர்களாக ஆவது சரியான விஷயம், அன்பான விஷயம்மட்டுமில்லை, கார்டன் தலைவராகச் சேவையாற்றவுள்ள எதிர் வரும் ஆண்டுக்கான ஊக்கமளிக்கும் கருப்பொருளாகிய உலகில் நம்பிக்கையை உருவாக்குதலை நிறை வேற்றக்கூடிய ஒரு கருவியும்கூட.

நாம் நம்முடைய உறுப்பினர் களுக்குச் சேவையாற்றினால், நம் சமூகங்களுக்குச் சேவை யாற்றுகிறோம். மக்கள் எங்கு உள்ளார்களோ அங்கு நாம் அவர்களைச் சந்தித்துத் தூக்கி விட்டால், அவர்கள் ரோட்டரியை ஒரு புதிய ஒளியில் காண்பார்கள், நம் மதிப்பு, நம் அளவற்ற சாத்தியத்தை முழுமையாகப் புரிந்துகொள்வார்கள்.

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்



# நிஜவாழ்க்கையில் அனைவரும் ஹீரோக்கள்தான்!

இந்தியாவில் தொலைந்துபோன பாகிஸ்தானைச் சேர்ந்த காது கேளாத, வாய்பேசமுடியாத சிறுமி முன்னி என்கிற ஷாஹிதாவை ஹனுமன் பக்தரான பஜ்ரங்கி என்கிற பவன்குமார் (நடிகர் சல்மான்கான்) எப்படி பெற்றோரிடம் சேர்க்கிறார் என்பதே பஜ்ரங்கி பைஜான் திரைப்படத்தின் கதை. இந்த கதைக்கு மதமோ, நிறமோ கிடையாது.

தேவதை போன்று தோற்றமளித்த அந்த சிறுமியால் பேசவோ அல்லது விவரங்களையோ தெரிவிக்க முடியாத நிலையில் ஹனுமன் பக்தரான பஜ்ரங்கி, பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரின் கோபத்துக்கு ஆளாகி, சவாலாக அந்த சிறுமியை பாகிஸ்தான் எல்லைக்குள் அழைத்துச் செல்கிறார். இந்த விவகாரத்தில் அவருக்கு பத்திரிகையாளர் ஒருவர் உதவி செய்கிறார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு உத்தரப்பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டு பின்னர் மாற்றுத் திறனாளி என்பதால் சாலையில் கைவிடப்பட்டு, ஆட்டோ டிரைவர் ஒருவரால் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் அரசு விடுதியில் தவிக்கும் மாற்றுத்திறனாளி இந்திய இளைஞர் சுபாஷ் நாடு திரும்ப வங்கதேச பத்திரிகையாளரும் பனானி டாக்கா ரோட்டரி சங்க உறுப்பினருமான ஷம்சுல் ஹூதா, உதவிய செய்தியை படித்தபோது மேற்குறிப்பிட்ட படம்தான் எனது நினைவுக்கு வந்தது. இது தொடர்பான கதையை நீங்கள் இந்த இதழில் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

சுபாஷ் வீடு திரும்பி தனது பெற்றொரிடம் சேர்ந்ததற்கு வங்கதேசத்தைச் சேர்ந்த ஹூதா, RID 3060-க்கு உட்பட்ட குஜராத்தின் மேற்கு பகுதியைச் சேர்ந்த பாரூச் ரோட்டரி சங்கத்தின் ரிஸ்வானா ஜமீன்தார் ஆகிய இரு ரோட்டேரியன்களின் ஆழமான அர்ப்பணிப்பு நிறைந்த ஈடுபாடுதான் காரணமாகும். இவர்களின் செயல்பாடுகள் மனித குலத்தின் மீதான நம்பிக்கையை மீட்டெடுக்கிறது. ஹூதா மற்றும் ரிஸ்வானாவின் தொடர் விடாமுயற்சியும், ஆர்வமும் பல தடைகளைக் கடந்து சுபாஷ் வீடு திரும்ப உதவியது நினைத்தாலே பிரமிக்கவைக்கிறது. இதில் நகைமுரண் என்னவென்றால் மனநலம் குன்றிய அவர், தனது குடும்பத்துடன் ஒன்றிணைவதற்கு உதவியவர்களுக்கு முறையாக நன்றி கூட சொல்ல முடியவில்லை. இந்த மனிதாபிமான, சவாலான பணிக்கு வழிகாட்டியாக இருந்தவர் PRID கமல் சங்விதான். இறுதியில் சுபாஷ் தனது குடும்பத்தினருடன் மீண்டும் இணையும் நிகழ்வு கடந்த மார்ச் மாதம் இந்திய-வங்கதேச எல்லையில் நடந்தபோது அதில் அவர் நேரில் கலந்துகொண்டார்.

ஹூதா மற்றும் ரிஸ்வானாவைப் போலவே ரோட்டரியிலும் அதற்கு வெளியிலும் நம்மைச் சுற்றி நிஜவாழ்க்கை ஹீரோக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனாலும் சிலரின் செயல்கள் வெளியுலகத்திற்கு தெரிவதில்லை. ரயில்வரும் நேரத்தில் நடைமேடையிலிருந்து தவறி தண்டவாளத்தில் விழுந்துவிட்ட ஒருவரை, கீழே குதித்து இமைப்பொழுதில் காப்பாற்றும் மற்றொருவரை தூண்டுவது எது என்பது யாருக்கும் தெரியாது. இதேபோல தீப்பற்றி எரியும் வீட்டிற்குள் சிக்கித் தவிக்கும் குழந்தை அல்லது செல்லப் பிராணிகளை சிலர் காப்பாற்றிய சம்பவமும் நடந்துள்ளது. இந்த முடிவுகள் ஒரு நொடியில் எடுக்கப்படுகின்றன. ஏனெனில் அங்கு சிந்திக்க நேரம் இல்லை. ஒரு மனிதரின் உள்ளுணர்வுதான் அவன் நல்லவன் என்பதை நிரூபிக்கிறது.

ஆனால், சுபாஷ் வீடு திரும்பிய அதே நேரத்தில் உலகம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான ரோட்டோரியன்கள் RID 3232-க்கு உட்பட்டவரும் PDG-யுமான ரேகா ஷெட்டிக்கு கண்ணீர் மல்க விடை கொடுத்தனர். எப்போதும் புன்னகையுடன், ஆளுமை மிகுந்த, புதுமையை புகுத்துவதில் திறன்பெற்ற, தெளிவான, துடிப்பான, ரோட்டரியில் பல்வேறு பதவிகளை வகித்த, அனைவருக்கும் உதவும் எண்ணம் கொண்ட, தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றியவர் ரேகா ஷெட்டி. அவரது திடீர் மறைவு செய்தி கேட்டு சமூக வலைத்தளங்களில் இரங்கல் செய்திகள் குவிந்தன. ஒரு பிரபலமான பெண் வீராங்கனையை இழந்து விட்டதை அப்போதுதான் ரோட்டரி உலகம் புரிந்துகொண்டது. ரோட்டரியில் பெண் தலைவர்கள் குறைவாக இருக்கும் சூழலில், ரேகாவின் மறைவு பெரிய இழப்பாகும். ஒரு சிறந்த பெண் தலைமையை நாம் தவறவிட்டுவிட்டோம் என்று தான் சொல்ல வேண்டும்!

ரஷீதா பகத்

**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேன்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஸ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரன்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா

துகார் டவர்ஸ், 3-வது தளம், மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை-8. முகவரியில் இயங்கும் ரோட்டரி நியூஸ் டிரஸ்டுக்காக, P T பிரபாகரால், "ராசி கிராபிக்ஸ் P Ltd., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14" என்ற முகவரியில் அச்சிடப் பட்டு வெளியிடப்படுகிறது.
**ஆசிரியர்:** ரஷீதா பகத்.

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக் களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரை களை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

# RI இயக்குநர்

## லட்சியத்தின் முக்கியத்துவம்



நமது வாழ்க்கையை வடிவமைப்பதில் இலக்குகள் முக்கியமானவை, மேலும் நமது செயலுக்கு திசையையும் நோக்கத்தையும் அவை வழங்குகின்றன. தனிப்பட்ட, தொழில்முறை அல்லது ரோட்டரி என எதுவாக இருந்தாலும், இலக்குகளை அமைப்பது நமது நேரத்தையும் வளங்களையும் முதன்மைப்படுத்தவும், விரும்பிய முடிவை அடைவதில் நமது முயற்சி களை மையப்படுத்தவும் உதவுகிறது. இலக்குகள் இல்லையேனில், நாம் உந்துதல் மற்றும் நோக்கமின்றி அலைந்து திரிவோம்.

ஒரு இளைஞனாக, நான் நேரத்தை நிர்வகிக்க போராடினேன் மற்றும் அத்தியாவசிய பணிகளை அடிக்கடி தாமதப்படுத்தினேன். நான் குறிப்பிட்ட இலக்குகளை அமைக்கத் தொடங்கிய பிறகுதான் எனது கல்வி மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் உண்மையான முன்னேற்றத்தைக் கண்டேன். நான் பெரிய பணிகளை சிறிய, சமாளிக்கக் கூடிய பணிகளாக பிரித்தேன், இதனால் அவைகளை எளிதாக செய்ய முடிந்தது. எனது தொழில் வாழ்க்கையிலும், இலக்குகளை நிர்ணயித்தது மிகவும் முக்கியமான செயல்களில் கவனம் செலுத்த எனக்கு உதவியது.

இலக்குகள் உங்களுக்கு வாழ்க்கையில் வழிகாட்டுதலை வழங்கு கின்றன, மேலும் உண்மையிலேயே முக்கியமானவற்றைத் தொடர தெளிவு, நோக்கம் மற்றும் உந்துதலை வழங்குகின்றன. இது உங்கள் மதிப்புகள், நம்பிக்கைகள், உணர்வுகள் மற்றும் ஆர்வங்களுடன் உங்களை ஊக்குவித்து சீரமைக்கிறது. அவற்றை அடைய உங்களை உற்சாகமாகவும், ஈடுபாட்டுடனும், உறுதியுடனும் இருக்க செய்கிறது. இது நிறைவேறும் போது உங்களுக்கு நிறைவையும் திருப்தியையும் தந்து, தன்னம்பிக்கை மற்றும் சுயமரியாதையை அதிகரிக்கிறது.

இலக்குகள் மனதைரியத்தை வளர்க்க உதவுகின்றன. நோக்கம், திசை மற்றும் கட்டுப்பாட்டு உணர்வைக் கொடுக்கின்றன, இது கடினமான நேரங்களை எதிர்கொள்ளவும், துன்பங்களைச் சமாளிக்கவும் உதவும்; கவனம், நம்பிக்கை மற்றும் உறுதியுடன் இருக்க உங்களுக்கு உதவுகின்றன. இலக்குகள் தன்னம்பிக்கையை மேம்படுத்துவதோடு, புதிய திறன்களைக் கற்றுக்கொள்வதற்கும், வளர்ப்பதற்கும் உங்களுக்கு வாய்ப்புகளை வழங்குகின்றன.

சமீபத்திய லக்ஷ்யா நிகழ்ச்சி, வரவிருக்கும் ரோட்டரி ஆண்டிற்கான அர்த்தமுள்ள இலக்குகளை கவனமாக அமைக்க, உள்வரும் தலைவர்களுக்கு கற்றுக் கொடுத்தது. உங்கள் மாவட்டங்களில் மாவட்ட மாநாடு மற்றும் பல பயிற்சி நிகழ்வுகள் நடக்கின்றன. சரியாக திட்டமிடுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன். பெரிதாக சிந்தித்து செயல்படுங்கள். நம் சங்கங்கள் சேவையின் ஆத்மாக்கள்.

மகேஷ் கோட்பாகி
RI இயக்குநர், 2021–23

# நமது உறுப்பினர்களைத் தக்கவைப்போம்



இந்த ரோட்டரி ஆண்டு இறுதியை நெருங்க, இரண்டு செயல்பாடுகள் மிகவும் துடிப்பான சங்கங்களின் நிகழ்ச்சி நிரலை ஆக்கிரமித்துள்ளன. ஒன்று, காலக்கெடு, நிதி திரட்டுதல் மற்றும் அவற்றிற்குப் பொறுப்பான குழுக்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வரும் ஆண்டிற்கான திட்டம். மற்றொன்று உறுப்பினர்களாகத் தொடர வாய்ப்பில்லாத உறுப்பினர்களின் மதிப்பீடு மற்றும் அவர்களைத் தக்கவைப்பதற்கான வழிகள்.

சங்கங்களின் இந்த இரண்டாவது நடவடிக்கையில் நான் கவனம் செலுத்த விரும்புகிறேன். உறுப்பினர்களைத் தொடர்ந்து செயல்படத் தூண்டும் இந்தப் பயிற்சியைச் செய்வது அவசியமானாலும், ஒரு வருட இறுதியில் நடக்கும் இந்த செயல்பாட்டைக் காட்டிலும் ஆண்டு முழுவதும் இதில் கவனம் செலுத்துவது அவசியம். புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதில் நம் பிராந்தியம் முன்னணியில் உள்ளது. ஒவ்வொரு சங்கங்களும் அவர்களின் முயற்சிகளுக்கு வாழ்த்த தகுந்தவர்களானாலும், ஒவ்வொரு ஆண்டும் வெளியேறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பார்ப்பது வருத்தமளிக்கிறது. இந்த பிரச்சினையை பற்றி நிறைய பேசியுள்ளோம், இருப்பினும் இதன் தாக்கத்தை ஒருபோதும் மிகைப்படுத்த முடியாது! நாம் கதவுகளைத் திறக்கும்போது, பின் கதவு மூடப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஓரிரு வருடங்கள் கழித்து வெளியேறுவதற்காக யாரும் ரோட்டரியில் சேருவதில்லை. பயனுள்ளதாக மற்றும் பொருத்தமாக இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான சில எதிர்பார்ப்புகளுடனும் நம்பிக்கையுடனும் தான் அனைவரும் ரோட்டரியில் இணைகிறார்கள். அனைவரும் சங்கத்திற்கு செலுத்தும் சந்தா நன்கொடை அல்ல, கட்டணம். பதிலுக்கு எதையாவது எதிர்பார்க்கும் கட்டணம்.

ஆண்டு முழுவதும் இந்த அம்சத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்பது சங்கத்தலைவர்களுக்கு எனது வேண்டுகோள். ஒவ்வொரு உறுப்பினரின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொண்டு அவர்களின் அனைத்து நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை உருவாக்கவேண்டும். அடுத்த ஆண்டிற்கு நாம் திட்டமிடும்போது, ஒவ்வொரு உறுப்பினரும் ரோட்டரியில் முதலீடு செய்ய அவர்களுக்கு ஆர்வமுள்ள சில பங்குகள் இருப்பதை உறுதி செய்வோம். குறைந்தபட்சம் இது நம்மால் செய்யக்கூடியது.



A S வெங்கடேஷ்
RI இயக்குநர், 2021–23


அறங்காவலர் குழுவினர்

| | |
|---|---|
| A S வெங்கடேஷ் RI இயக்குநர் மற்றும் RNT தலைவர் | RID 3232 |
| Dr மகேஷ் கோட்பாகி RI இயக்குநர் | RID 3131 |
| Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |
| **RI இயக்குநர் தேர்வு** | |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| TN சுப்ரமணியன் | RID 3141 |

செயற்குழு
உறுப்பினர்கள் (2022–23)

| | |
|---|---|
| Dr துஷ்யந்த் சௌத்ரி தலைவர், ஆளுநர் குழு | RID 3070 |
| வெங்கடேஷ் H தேஷ்பாண்டே செயலாளர், ஆளுநர் குழு | RID 3170 |
| Dr N நந்தகுமார் பொருளாளர், ஆளுநர் குழு | RID 3232 |
| தினேஷ்குமார் சர்மா ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3100 |



**ஆசிரியர்**
ரஷீதா பகத்


**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

இதழ்

# நம் எல்லையற்ற சாத்தியம்



“உங்களால் இயன்ற நேரம் வரை உங்களால் இயன்ற வழிகள் அனைத்திலும் உங்களால் இயன்ற அனைவருக்கும் உங்களால் இயன்ற அனைத்து நல்லவற்றையும் செய்யுங்கள்.

பரவலாக மேற்கோள் காட்டப்படும் இந்தப் பொன்மொழியை யார் சொன்னார்கள் என்று நமக்குத் துல்லியமாகத் தெரியாது. ஆனால், ரோட்டரி மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் பொருளை இது நன்கு தொகுத்துச் சொல்கிறது: நாம் நிறைய நல்லவற்றைச் செய்கிறோம், உலகெங்கும் உள்ள மக்களுக்குப் பல வழிகளில் சேவையாற்றுகிறோம், இதை நாம் நெடுங்காலம் தொடர்ந்து செய்வோம்.

தன்னார்வலர்களாகிய நாம் நம்முடைய பெரும்பாலான திட்டங்களுக்கு நிதியளிக்கிறோம். அத்துடன், அவற்றை நடத்துவது, செயல்படுத்துவதற்குக் குறிப்பிடக்கூடிய அளவு நேரத்தையும் தன்னார்வத்துடன் பங்களிக்கிறோம். நம் தொண்டின் “பகுதி அலுவலகங்கள்”, ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்கள்தான். நாம் செயல்படுகிற 200க்கும் மேற்பட்ட நாடுகள், புவியியல் பகுதிகளில் நம்முடைய நம்பகமான, சிறந்த கூட்டாளர்கள் இவர்கள்தான். ஏதேனும் ஒரு பகுதியில் நமக்குத் திறமை இல்லாவிட்டால், உலக சுகாதார அமைப்பு போன்ற வெளி அமைப்புகளுடன் நாம் இணைந்து பணியாற்றுகிறோம், அவர்கள் நம்மை நம்பிக் கை கோக்கிறார்கள், நாம் களத்தில் பலன்களை அளித்து உயிர்களை உண்மையாக மாற்றுகிறோம்.

சில தொண்டு நிறுவனங்கள் மனிதத்தன்மைப் பணிக்குப் “பாராசூட் அணுகுமுறை”யைப் பின்பற்றுகிறார்கள். நாம் அவ்வாறு செய்வதில்லை. நாம் நீடித்திருக்கும் தீர்வுகளின்மூலம் பிரச்சனைகளைத் தீர்க்கிறோம். எந்தவோர் அறக்கட்டளைத் திட்டத்தையும் தொடங்குவதற்குமுன் நாம் சமூகத் தேவைகளை மதிப்பிடுகிறோம், அந்தச் சமூகத்தின் உறுப்பினர்களுடன் நெருங்கிப் பணியாற்றுகிறோம். தேவையான நேரங்களில் அறக்கட்டளை விரைவாகவும் செயல்படுகிறது. எடுத்துக் காட்டாக, சமீபத்தில் துருக்கி, சிரியா-வில் ஏற்பட்ட நிலநடுக்கங்களின்போது நம் பேரிடர் எதிர்வினை நல்கைகள் பெரும் உதவி புரிந்தன.

ரோட்டரியில் உள்ள நாம், நம்முடைய நல்கைகளை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துகிறோம். நம்முடைய நிதியில் பெரும்பகுதி மனித குல ஆதரவுக்குச் செல்கிறது. ஒப்பீட் டளவில் மிகக் குறைந்த பங்குதான் நல்கை நிர்வாகச் செலவுகளுக்குச் செல்கிறது. அதனால்தான், Charity Navigator ஒவ்வோர் ஆண்டும் ரோட்டரி அறக்கட்டளைக்குத் தன்னுடைய மிக உயர்ந்த மதிப்பீட்டைத் தொடர்ந்து தந்துவருகிறது.

உங்களால் இயன்ற அனைத்து நல்லவற்றையும் செய்ய ஒரு வழியைத் தேடினால், ரோட்டரி அறக்கட்டளைதான் உங்களுக்கான இடம். உலகின் மிகச் சிறந்த தொண்டு நிறுவனங்களில் ஒன்றான இந்த அறக்கட்டளை, உங்களுக்குச் சொந்தமானது.

**இயன் ரிஸ்லி**
TRF அறங்காவலர் தலைவர்



# நம் அறக்கட்டளைக்குத் தாராளமாகப் பங்களியுங்கள்



இந்த ரோட்டரி ஆண்டின் கடைசிச் சுற்று தொடங்கும் இந்த நேரத்தில், TRFக்கு நம்மை மீண்டும் அர்ப்பணித்து கொள்வோம், அதற்கான நம் முயற்சிகளை இன்னும் கூடுதலாக்குவோம். உலகில் தொடர்ந்து நன்மைகளைச் செய்யவேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம். அறக்கட்டளையின் மாவட்ட மற்றும் உலக நல்கைகளின் வழியாக இதை நன்கு சாதிக்கலாம்.

நாம் இளம்பிள்ளைவாதம் இல்லாத உலகை மிகவும் நெருங்கிவிட்டோம். நாம் நம்பிக்கையோடு முன்னேறிச் சென்று, இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைக்கப் பணியாற்றுகிற இந்த நேரத்தில், இளம்பிள்ளைவாத ஒழிப்பு நிதியை ஆதரிப்பது முன்பு எப்போதையும் விடக் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. ரோட்டரியன் களுடைய பங்களிப்புகள் இல்லாமல், இளம்பிள்ளைவாதம் இல்லாத உலகம் என்னும் நம்முடைய கனவை நம்மால் நிறைவேற்ற இயலாது. ரோட்டரியன்கள் ஒவ்வொரு வரும் இளம்பிள்ளைவாத நிதிக்குப் பங்களிக்க வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நன்கொடை நிறுவல் நிதி என்பது, நம் அறக்கட்டளையின் எதிர்காலமாகும். நாம் நன்கொடை நிறுவல் நிதியில் முதலீடு செய்தால், ரோட்டரியன்களின் வருங்காலத் தலைமுறைகள் ரோட்டரியின் நல்ல பணியை முன்னெடுத்துச் செல்வது உறுதியாகும்.

ரோட்டரியன்களாகிய நாம், நம் சமூகங்களை மீண்டும் கட்டமைக்க, மீண்டும் வடிவமைக்க, மீட்க உதவலாம். அதைச் செய்வதற்கு ஒரு நல்ல வழி, TRF வழியாக உதவுதல். நாம் ஒருவரோடொருவர் இணையும்போது, நமக்கு முன்னால் புதிய வாய்ப்புகள் திறக்கும்போது, அறக்கட்டளையைத் தொடர்ந்து ஆதரிப்போம். நாம் ஒன்றாகச் சேர்ந்தால் உலகை மாற்றலாம், நாம் அதைச் சாதிப்போம்.

உங்கள் தாராள மனமும், பிறருக்கு உதவும் அர்ப்பணிப்பும் உண்மையில் ஊக்கம் அளிப்பவை. உலகில் நல்லவற்றைச் செய்வதற்கு உங்கள் அர்ப்பணிப்புக்கு நன்றி.

**பரத் பாண்ட்யா**
அறங்காவலர், TRF 2022–26

# Rotarians!

Visiting Chennai for business?

Looking for a compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 37,005 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,210 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 19,266 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 12,796 |
| ரோட்டரியினர் | : | 1,197,735 |
| ரோட்டராக்டர்கள் | : | 174,355 |
| இன்டராக்டர்கள் | : | 438,118 |

As on April 17, 2023

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on April 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 136 | 6,413 | 7.48 | 71 | 462 | 55 | 255 |
| 2982 | 82 | 3,736 | 6.96 | 30 | 719 | 126 | 76 |
| 3000 | 132 | 5,519 | 10.24 | 103 | 1,624 | 327 | 215 |
| 3011 | 123 | 4,735 | 28.43 | 82 | 2,662 | 145 | 37 |
| 3012 | 151 | 3,757 | 23.10 | 73 | 1,275 | 95 | 61 |
| 3020 | 86 | 4,981 | 7.29 | 41 | 1,180 | 168 | 350 |
| 3030 | 101 | 5,494 | 14.98 | 122 | 2,171 | 381 | 383 |
| 3040 | 115 | 2,613 | 15.77 | 59 | 800 | 95 | 190 |
| 3053 | 67 | 2,885 | 16.36 | 35 | 569 | 55 | 128 |
| 3054 | 172 | 7,060 | 19.79 | 107 | 1,498 | 209 | 577 |
| 3060 | 102 | 5,034 | 14.90 | 67 | 2,415 | 81 | 144 |
| 3070 | 127 | 3,479 | 16.53 | 47 | 556 | 64 | 59 |
| 3080 | 108 | 4,360 | 12.82 | 120 | 2,211 | 215 | 116 |
| 3090 | 104 | 2,450 | 5.22 | 46 | 615 | 151 | 164 |
| 3100 | 107 | 2,281 | 13.55 | 15 | 137 | 39 | 151 |
| 3110 | 143 | 3,951 | 12.33 | 16 | 126 | 33 | 106 |
| 3120 | 89 | 3,709 | 15.77 | 35 | 398 | 36 | 55 |
| 3131 | 142 | 5,759 | 24.83 | 140 | 3,116 | 266 | 145 |
| 3132 | 91 | 3,682 | 12.95 | 37 | 514 | 127 | 168 |
| 3141 | 111 | 6,234 | 26.84 | 149 | 6,297 | 239 | 170 |
| 3142 | 103 | 3,913 | 21.21 | 90 | 3,006 | 149 | 88 |
| 3150 | 112 | 4,408 | 13.18 | 151 | 2,023 | 163 | 128 |
| 3160 | 78 | 2,747 | 9.17 | 32 | 233 | 26 | 82 |
| 3170 | 149 | 6,837 | 15.85 | 105 | 1,846 | 275 | 178 |
| 3181 | 87 | 3,666 | 10.23 | 37 | 442 | 224 | 117 |
| 3182 | 88 | 3,656 | 10.12 | 44 | 194 | 132 | 107 |
| 3190 | 169 | 7,079 | 20.36 | 222 | 5,282 | 294 | 74 |
| 3201 | 169 | 6,636 | 9.92 | 133 | 2,001 | 118 | 91 |
| 3203 | 94 | 4,958 | 7.83 | 76 | 1,003 | 244 | 39 |
| 3204 | 75 | 2,560 | 7.23 | 23 | 206 | 33 | 13 |
| 3211 | 157 | 5,184 | 8.47 | 9 | 132 | 37 | 133 |
| 3212 | 127 | 4,791 | 11.46 | 85 | 3,527 | 303 | 153 |
| 3231 | 97 | 3,502 | 8.31 | 37 | 411 | 99 | 417 |
| 3232 | 172 | 6,909 | 20.29 | 132 | 7,159 | 246 | 101 |
| 3240 | 109 | 3,678 | 16.86 | 71 | 1,433 | 206 | 226 |
| 3250 | 103 | 3,923 | 21.18 | 68 | 1,035 | 85 | 188 |
| 3261 | 91 | 3,302 | 19.93 | 17 | 61 | 27 | 45 |
| 3262 | 125 | 3,866 | 14.64 | 75 | 742 | 662 | 277 |
| 3291 | 153 | 4,037 | 25.07 | 135 | 2,045 | 111 | 706 |
| **India Total** | **4,547** | **173,784** | | **2,937** | **62,126** | **6,341** | **6,713** |
| 3220 | 72 | 2,151 | 16.09 | 98 | 5,096 | 145 | 77 |
| 3271 | 171 | 3,426 | 18.68 | 168 | 2,595 | 304 | 28 |
| 3272 | 162 | 2,237 | 15.33 | 70 | 947 | 22 | 48 |
| 3281 | 312 | 7,372 | 18.08 | 280 | 2,230 | 157 | 207 |
| 3282 | 183 | 3,667 | 10.23 | 203 | 1,735 | 50 | 47 |
| 3292 | 156 | 5,899 | 18.82 | 184 | 4,951 | 149 | 135 |
| **S Asia Total** | **5,603** | **198,536** | | **3,940** | **79,680** | **7,168** | **7,255** |

*Source: RI South Asia Office*

# கிருஷ்ணகிரியில் மாற்றத்தை உருவாக்கிய நீர்மேலாண்மைத் திட்டம்

ஜெய்ஸ்ரீ

*தமிழ்நாட்டில், கிருஷ்ணகிரியில் குப்பாச்சிப்பாறை ஊராட்சியில் தரிசாக இருந்த நிலத்தை நபார்டு மற்றும் NAF அமைப்புகளுடன் இணைந்து ரோட்டரி விளைநிலமாக மாற்றியுள்ளது. இந்த கூட்டு முயற்சிக்கு முன்பாக கிராம மக்கள் வறுமையினாலும் போதிய தண்ணீர் இல்லாமலும் விவசாயம் செய்ய முடியாமல் வேறு இடங்களுக்கு வேலைதேடி இடம்பெயரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.*

சென்னையிலிருந்து சுமார் 270 கி.மீ. தொலைவில் உள்ள கிருஷ்ணகிரில் உள்ள இந்த கிராமங்கள் இப்போது பசுமையாக காட்சியளிக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர் விவசாயிகள் போதிய தண்ணீர் இல்லாமல், விவசாயம் செய்ய முடியாத நிலையில் தரிசாக கிடந்த நிலமா இது என்பதை கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை.

ஆனால், சென்னை கோரமண்டல் ரோட்டரி சங்கம், RID 3232, நார்வேயின் ஸ்டாவாங்கர் இன்டர்நேஷனல் ரோட்டரி சங்கம் மற்றும் TRF ஆகியவற்றின் கூட்டு முயற்சியால்தான் தண்ணீர் இல்லாமல், விவசாயம் செய்யமுடியாமல் இருந்த நிலம் இப்போது விளைநிலமாக பசுமையாக காட்சியளிக்கிறது. இதற்கு காரணம் நபார்டு மற்றும் என்.ஏ.எஃப் (NAF). ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் நிறைவேற்றப்பட்ட நீர்மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்தான். இதன் மூலம் 2,800 குடும்பங்களைச் சேர்ந்த 15,000 கிராம மக்கள் பயனடைந்துள்ளனர் என்கிறார் திட்டத்தின் தலைவர் G பாலசுப்பிரமணியம் என்கிற பாலா.


இப்போது இந்தப் பகுதி நம்பிக்கையின் அடையாளமாக வாழ்க்கையின் விடிவெள்ளியாக திகழ்கிறது. ஒரு பொதுவான நோக்கத்திற்காக மக்கள் ஒன்றிணைந்து உழைத்தால் எதையும் சாதிக்கலாம் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

### ஆதியாகமம்

2011-ஆம் ஆண்டில் சென்னை கோரமண்டல் ரோட்டரி சங்கம் யுனிசெப் கூட்டுமுயற்சியுடன் இந்தப் பகுதியில் உள்ள 2 கிராமங்கள் மற்றும் குப்பாச்சிப்பாறையில் 150 வீட்டுக் கழிவறைகளை கடிக்கொடுத்தது. இவை ஒவ்வொன்றும் ரூ.10,000 செலவில் கட்டித்தரப்பட்டன. இதில் யுனிசெப் 50 சதவீத செலவை ஏற்றுக்கொண்டது. பஞ்சாயத்து தலைவர் கிருஷ்ணன், மேலும் சில கிராம மக்களுடன் சேர்ந்து கொண்டு 40 சதவீத செலவை ஏற்றுக்கொண்டார். மீதமுள்ள 10 சதவீதம் செலவுதொகையை ரோட்டரி சங்கம் செய்ததாக பாலா கூறினார். சென்னையில் உலக இசை நிகழ்ச்சி நடத்தி ரூ.15 லட்சம் நிதி திரட்டினோம். பிறகு சங்க உறுப்பினர்கள் R ஜீவா இந்த திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டார். நாங்கள் பணத்தை வழங்கினோம். கழிப்பறைகள் கட்டப்பட்டன.

ஒரு வருடம் கழித்து, இந்த திட்டம் கிராம மக்களுக்கு எப்படி பயன்தருகிறது என்று பார்க்க பாலா குப்பாச்சிப்பாறை





RC மெட்ராஸ் கோரமண்டல் சரி செய்துள்ள ஏரியின் அருகே சங்கத் தலைவர் ரமேஷ் அனந்த் மற்றும் ஒரு கிராமவாசி.

1. *சங்கம் அளித்துள்ள பசு மாட்டுடன் ஒரு பெண்.*
2. *குப்பாச்சிப்பாறை கிராமவாசி ப்ரமீளா அவர்களுடன் சங்கத்தின் தலைவர் ரமேஷ் அனந்த் மற்றும்* R *ஸ்ரீதர்.*
3. G *பாலசுப்ரமணியன்,* RC *மாநகர் கிருஷ்ணகிரி செயலாளர்* G *ஆனந்த் ஆகியோரும் உள்ளனர்.*
4. *நீர்மேலாண்மை திட்ட முடிவு நிகழ்ச்சியில்* RID 3232 DG N *நந்தகுமார், ரமேஷ் அனந்த் பாலசுப்ரமணியன்,* RID 2982 DG P *சரவணன் மற்றும்* PDG N *அசோகா.*






சென்றார். ஆனால், அவருக்கு அங்கு அதிர்ச்சியே காத்திருந்தது. அந்த கழிப்பறைகள் பொருள்கள் வைக்கும் இடமாக மாறியிருந்தன. கழிவறைகளைப் பராமரிக்க போதிய தண்ணீர் இல்லாததே அதற்கு காரணம். 800, 900 அடிகளில்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. இதையடுத்து கிராம மக்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைப் பதற்கான நடவடிக்கைகளை பாலா மேற்கொண்டார். சென்னையில் உள்ள தேசிய வேளாண் அறக்கட்டளை (National Agro Foundation-NAF) தலைவரும் சென்னை கிழக்கு ரோட்டரி சங்க உறுப்பினருமான S ராஜசேகருடன் தொடர்பு கொண்டார். NAF அவரது தந்தையும் மறைந்த முன்னாள் மத்திய அமைச்சருமான C சுப்பிரமணயத்தால் உருவாக்கப்பட்டது. 2013-ஆம் ஆண்டு குப்பாச்சிப்பாறையில் என்.ஏ.எஃப். ஆய்வு மேற்கொண்டது. அந்த கிராமங்களில் மழை பெய்வது மிக குறைவு என்றும் மலைப் பிரதேசமாக இருப்பதாலும், மண்ணின் கடினத்தன்மை காரணமாகவும் மழைநீரை சே மிக்க முடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். தேசிய ஊரக வேளாண் வளர்ச்சி வங்கி (நபார்டு) மூலம் நீர்மேலாண்மை திட்ட்த்தை மேற்கொள்ள என்.ஏ.எப். பரிந்துரைத்தது.

இதைத் தொடர்ந்து சங்கம், நபார்டு வங்கியை தொடர்பு



3


4


2

கொண்டது. மேலும் கார்ப் பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப் புணர்வு திட்ட நிதியுதவியையும் ஏற்றுக்கொண்டது. அதே சமயத்தில் என்.ஏ.எப். திட்டத்தை செயல் படுத்தும் முகவராக இருந்தது. எனினும் மாநில வேளாண் துறையிலிருந்து ஆட்சேபணை இல்லை என்னும் சான்றிதழ் பெற்றுவருமாறு சங்கத்திற்கு அறிவுறுத்தியது. இந்த சான்றிதழ் பெற ஏறக்குறைய ஒருவருடம் ஆனது. அதுவும் வேலூர் கோல்டன் சிட்டி ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் சங்கரசுப்பிரமணியன் உதவியுடன்தான் பெறமுடிந்தது. அப்போது அவர் தர்மபுரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக இருந்தார் என்றார் பாலா.

இத்திட்டத்திற்கான முன்னேற் பாடுகள் முடிவுற்ற நிலையில், நார்வேயின் ஸ்டாவாங்கர் இன்டர்நேஷனல் ரோட்டரி சங்கம் சர்வதேச பங்காளியாக இருக்க முன்வந்தது. ஆனால், நீர் மேலாண்மை திட்டத்துக்கும் மேலாக விரிவுபடுத்த விரும்பியது. நபார்டு நீர்மேலாண்மை திட்டத்தை மட்டும் செயல்படுத்தி வந்ததால் ரூ.30 லட்சத்தில் பால்பண்ணை மற்றும் பெண்களுக்கான தையல் பயிற்சி உள்ளிட்ட வளர்ச்சித் திட்டங்களும் இதில் சேர்க்கப்பட்டன என்றார் சங்கத்தின் தலைவர் ரமேஷ் ஆனந்த். திட்டச் செயல்பாட்டின்போது மூன்று கிராமங்கள் எட்டாக விரிவடைந்தது. திட்டத்துக்கான மொத்த மானியத் தொகை 189,142 டாலர் (ரூ.1.25 கோடி) மற்றும் நபார்டு பங்களிப்பு ரூ.1.15 கோடி.

### கிராமங்களுக்கு தண்ணீர் வசதி

முதல் கட்டமாக குன்றின் மீது இருந்த 1,600 ஹெக்டேர் பரப்பளவுள்ள ஏறி, நபார்டின் நிபுணத்துவத்துடன் தூர்வாரப்பட்டது. பின்னர் வண்டல் மண் ஏரிக்கு எதிரே இருந்த வயல் வெளிகளில் தூவிவிடப்பட்டது. இதையடுத்து அந்த இடம் நெல் விளையும் பூமியாக மாறியது. பாதைகளில் இருபுறங்களிலும் பழமரங்கள் நடப்பட்டன.

நீர்மேலாண்மை திட்டத்தில் இரண்டு தடுப்பணைகள், 21 தளர்வான பாறாங்கல் தடுப்பணை கள், 6,000 குளங்கள், பண்ணைக் குட்டைகள், 4,300 குட்டைகள் மற்றும் 1,000 மழைநீர் உறிஞ்சும் அகழிகள் அமைக்கப்பட்டன. மண் அரிமானத்தைத் தடுக்க 10,000 மரக்கன்றுகள் நடப்பட்டன. 110 ஹெக்டேருக்கு மேல் உளி உழவு செய்யப்பட்டு மற்றும் 5,800 கன மீட்டருக்கு கரைகள் அமைக்கப் பட்டன என்றார் பாலா. இந்த வசதி செய்துகொடுக்கப்பட்டதால் கிராமங்களில் உள்ள மக்களுக்கு போதுமான குடிநீரும், பாசனத்துக்கு தண்ணீரும் கிடைக்கிறது. அங்கு நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்தது. என்.ஏ.எப். திட்ட அலுவலகத்தில் அறிவியல் வேளாண் நடைமுறைகள் குறித்து நபார்டு விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. விவச ாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு மற்றும் சுழற்சி முறையிலான பயிர் நடவுகள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைக்கப் பட்டது என்றார் என்.ஏ.எஃப் நிர்வாகி மகேஷ்.

இத்தகைய மாற்றத்தால் ஊராட்சித் தலைவர் கிருஷ்ணன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

இந்த திட்டத்தின் மூலம் 90 சதவீத கிராம மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரமும் மேம்பட்டுள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

### மகளிர்க்கு அதிகாரம் அளித்தல்

இந்த கிராமங்களில் உள்ள பெண்கள், தங்களிடம் அதிகம் பசுக்கள் இருப்பதற்காக இத்திட்டத்தை நினைவில் வைத்திருப்பார்கள். பால் பண்ணை தொழில் மூலம் அவர்கள் கையில் பணம் புரளும் என்றார் பாலா. சுமார் 300 கறவை பசுக்கள் அவர்களுக்கு வழங்கப் பட்டன. என்னிடம் மூன்று பசுக்கள் உள்ளன. அவற்றில் இரண்டு கர்ப்பமாக இருக்கிறது. ஒவ்வொரு பசுவும் தினமும் 20 லிட்டர் பால் தருகிறது என்கிறார் குப்பாச்சிப்பாறை மகளிர் குழுவைச் சேர்ந்த பரிமளா. ஆவின், ஆரோக்யா, நந்தினி மற்றும் தோட்லா ஆகிய பால் நிறுவனங்கள் அவர்களின் வாடிக்கையாளர்களாக உள்ளனர்.

பரிமளாவின் மூத்த மகன் மருத்துவப் பட்டமேற்படிப்பில் நீட் தேர்வு எழுதத் தயாராகி வருகிறார். சிதம்பரம் மருத்துவக் கல்லூரியில் அவர் எம்.பி.பி.எஸ். முடித்துள்ளார். இளையமகன் வேளாண் பட்டதாரி. அவர் அரசுத் தேர்வுகளுக்கு தயாராகி வருகிறார். அந்த குடும்பத்தினருக்கு தற்போது கிராமத்தில் சிறிய நிலம் உள்ளது. பாலாவுக்கு நன்றி தெரிவித்த பரிமளா கூறுகையில், எங்களுக்கு கிடைத்ததை குழந்தைகளுக்கு சாப்பிட கொடுத்துவிட்டு நானும் எனது கணவரும் இரவு தண்ணீர் மட்டும் குடித்துவிட்டு படுக்கைக்கு சென்ற கடினமான நாட்களை எண்ணிப்பார்க்கிறேன். இன்று பால் விற்பனை மூலம் கணிசமான வருவாய் வருகிறது. நிலத்திலிருந்தும் விளைச்சல் கிடைக்கிறது. இன்று நாங்கள் நல்ல நிலையில் இருக்கிறோம் என்றார். கிராமத்தில் வளர்ந்த, வறண்ட பூமியையே பார்த்து வந்த எங்களுக்கு பாலா சார்தான் வளமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுத்தார் என்று கண்ணீர்மல்க, கூப்பிய கரங்களுடன் நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

என்.ஏ.எஃப். பெண்களை தொழில்நுட்ப ஆர்வலராக வளர்த்தெடுத்தது. அவர்கள் இப்போது தங்கள் வங்கிக் கணக்கு விவரங்களை செல்லிடைப்பேசியின் (மொபைல்) மூலமே தெரிந்து கொள்கிறார்கள். பால் நிறுவனங்கள் சப்ளை செய்யப்பட்ட பால் உள்ளிட்ட விவரங்களை அன்றைய தினமே செல்லிடைப் பேசியில் பதிவு செய்கிறது. பாலின் கொழுப்பளவு, எவ்வளவு லிட்டர் பால் சப்ளை என்ற விவரங்கள் தெரிவிக்கப்பட்டு அதற்கான பணம் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது.

கால்நடைகளுக்கு இயற்கையான மேய்ச்சல் புல்வெளிக்கு வழி இல்லாத நிலையில் கோடைகாலத்தில் அவற்றுக்கு தேவையான தீவனங்கள் சேமிப்பு, மண்புழு உரம் தயாரிப்பு போன்றவை குறித்து கிராம மக்களுக்கு சொல்லித்தரப் பட்டது. அவர்களிடையே சுய உதவிக் குழுக்கள் அமைக்கவும் ஊக்குவிக்கப்பட்டது. மேலும் குப்பாச்சிப்பாறையில் ஆடை தயாரிப்புக்காக ரோட்டரி சார்பில் பயிற்சி மையமும் ஏற்படுத்தப்பட்டது. அங்கு தொழில் ரீதியிலான தையல் இயந்திரங்கள் மூலம் பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதுவரை 100 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளதாக கிருஷ்ணன் தெரிவித்தார். அவர்கள் கிருஷ்ணகிரி-ஹோசூர் பகுதிகளில் உள்ள ஆடை





*செழிப்பான வயலில் ரோட்டரியனருடன் கிராமவாசிகள்.*

தயாரிப்பு நிறுவனங்களில் பணி புரிகிறார்கள். இந்த பெண்கள் சமீபத்தில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 700 குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடைகள் தைத்து கொடுத்துள்ளனர்.

சில பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் வழங்கிய கடன்கள் மூலம் தையல் இயந்திரங்களை வாங்கி தங்கள் வீடுகளில் இருந்துகொண்டே தையல் வேலை செய்து வருகிறார்கள். நான் வாரத்திற்கு குறைந்தபட்சம் ரூ.600 முதல் ரூ.700 வரை சம்பாதிக்கிறேன். இதன் மூலம் ஏதோ ஒரு வழியில் எனது குடும்பத்திற்கு பங்களிக்க முடிகிறது என்று கூறுகிறார் இரண்டு குழந்தைகளுக்கு தாயான மௌஃப்பாஸா. இரண்டு கிராமங்களில் 20 சூரிய சக்தி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.



இத்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கும் பொறுப்பு அருகில் உள்ள மாநாகர் கிருஷ்ணகிரி ரோட்டரி சங்கத்திடம் (RID 2982) ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த 8 அல்லது 9 வருடங்களாக எங்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் RCMC மற்றும் கிராம மக்களுக்கு பாலமாக இருந்துவந்துள்ளனர் என்கிறார் கிருஷ்ணகிரி சங்கத்தின் தலைவர் கார்த்திக். கிருஷ்ணனும் இதில் உறுப்பினராக உள்ளார்.

இந்த பத்தாண்டுகாலத் திட்டம் கடந்த மார்ச் மாதம் மாவட்ட ஆளுநர் N நந்தகுமார் (RID 3232) மாவட்ட ஆளுநர் P சரவணன் (RID 2982) முன்னிலையில் அதிகாரப்பூர்வமாக ஊராட்சிக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டது.

TRF அளித்த 60 சதவீத முன் பணத்தைக் கொண்டு திட்டத்தை பூர்த்தி செய்தோம். மீதமுள்ள 40 சதவீத தொகை அறக்கட்டளை யிடமே ஒப்படைக்கப்பட்டது. இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதற்காக நபார்டு மற்றும் என்.ஏ.எஃப்-க்கு நாங்கள் நன்றிசொல்ல கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் நீர் மேலாண்மை பற்றி கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர எனக்கு விவசாயம் பற்றி எதுவும் தெரியாது என்று பாலா புன்னகையுடன் கூறினார். அவர் எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருள்கள் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்.

இந்த திட்டம் RI-இன் குறிப் பிட்ட சாதனைக்கான விருதை வென்றுள்ளது. சிறந்த நீர் மேலாண்மைத் திட்டம் என்று நபார்டு வங்கியும் அங்கீகரித்துள்ளது. மேலும் ரூ.60 லட்சம் நிதியுதவி யிலான மற்றொரு புதிய பணியையும் எங்களிடம் கொடுத்துள்ளது. ஜெர்மனியின் KFW நிறுவனத்துடன் இணைந்து என்.ஏ.எஃப். இதைச் செயல்படுத்தும். இது மண் வளத்தை சீரமைத்தல், இயற்கை விவசாயம், நவீன தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய பருவநிலை மாற்றத்தை பின்பற்றிய திட்டமாகும். இதன் மூலம் வேளாண் நடவடிக்கை களுக்கான சில செலவுகளை குறைத்து விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் திட்ட மாகும் என்றார் பாலா. ■




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

# FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator

# District Wise TRF Contribution as on February 2023

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 33,399 | 566 | 0 | 1,184 | 35,149 |
| 2982 | 32,307 | 5,562 | 5,561 | 75,739 | 119,168 |
| 3000 | 52,509 | 4,844 | 0 | 100 | 57,454 |
| 3011 | 64,628 | 13,847 | 27,127 | 483,527 | 589,129 |
| 3012 | 16,424 | 752 | 75,335 | 309,160 | 401,671 |
| 3020 | 124,862 | 14,204 | 45,000 | 2,155 | 186,220 |
| 3030 | 98,520 | 5,132 | 10,000 | 2,791 | 116,444 |
| 3040 | 23,729 | 2,046 | 0 | 91,297 | 117,072 |
| 3053 | 58,970 | 136 | 0 | 40,757 | 99,862 |
| 3054 | 20,430 | 850 | 8,434 | 35,114 | 64,829 |
| 3060 | 110,985 | 5,013 | 1,000 | 160,906 | 277,904 |
| 3070 | 80,011 | 2,625 | 51,495 | 11,296 | 145,427 |
| 3080 | 36,940 | 9,558 | 0 | 80,262 | 126,761 |
| 3090 | 13,157 | 0 | 6,253 | 0 | 19,410 |
| 3100 | 65,740 | 500 | 25,012 | 0 | 91,252 |
| 3110 | 56,516 | 454 | 24,304 | 790,970 | 872,244 |
| 3120 | 33,076 | 411 | 0 | 0 | 33,488 |
| 3131 | 434,886 | 12,260 | 118,436 | 1,107,070 | 1,672,652 |
| 3132 | 46,739 | 7,693 | 50,000 | 5,602 | 110,034 |
| 3141 | 851,255 | 40,859 | 138,499 | 2,504,831 | 3,535,444 |
| 3142 | 257,370 | 4,430 | 28,669 | 250,407 | 540,876 |
| 3150 | 97,857 | 34,757 | 160,077 | 66,102 | 358,793 |
| 3160 | 13,823 | 3,453 | 0 | 3,675 | 20,951 |
| 3170 | 213,888 | 39,384 | 21,006 | 32,474 | 306,753 |
| 3181 | 112,219 | 1,205 | 25 | 4,096 | 117,546 |
| 3182 | 76,489 | 4,423 | 0 | 0 | 80,912 |
| 3190 | 175,935 | 14,187 | 108,411 | 381,511 | 680,044 |
| 3201 | 186,595 | 33,843 | 65,792 | 808,538 | 1,094,767 |
| 3203 | 31,797 | 14,508 | 7,049 | 76,209 | 129,563 |
| 3204 | 11,764 | 818 | 0 | 15,142 | 27,725 |
| 3211 | 168,748 | 6,065 | 20,000 | 2,399 | 197,212 |
| 3212 | 257,994 | 96,215 | 305 | 81,306 | 435,820 |
| 3231 | 62,227 | 23,506 | 32,278 | 11,569 | 129,579 |
| 3232 | 109,387 | 72,749 | 92,257 | 626,177 | 900,570 |
| 3240 | 111,221 | 19,080 | 1,000 | 3,850 | 135,151 |
| 3250 | 20,183 | 290 | 0 | 34,179 | 54,652 |
| 3261 | 21,330 | 917 | 0 | 5,277 | 27,523 |
| 3262 | 49,491 | 463 | 700 | 34,165 | 84,819 |
| 3291 | 80,083 | 1,986 | 64,981 | 11,346 | 158,395 |
| **India Total** | **4,313,484** | **499,590** | **1,189,006** | **8,151,184** | **14,153,263** |
| 3220 **Sri Lanka** | 51,922 | 10,843 | 4,000 | 226 | 66,992 |
| 3271 **Pakistan** | 127 | 25,715 | 0 | 250 | 26,092 |
| 3272 **Pakistan** | 6,555 | 12,687 | 0 | 6,000 | 25,242 |
| 3281 **Bangladesh** | 63,036 | 5,814 | 23,125 | 184,245 | 276,220 |
| 3282 **Bangladesh** | 48,866 | 6,701 | 2,000 | 10,320 | 67,887 |
| 3292 **Nepal** | 188,534 | 20,311 | 94,167 | 61,773 | 364,784 |
| **South Asia Total** | **4,672,524** | **581,660** | **1,312,298** | **8,413,998** | **14,980,480** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

ADVT.


Rotary
MELBOURNE 2023
Jennifer Jones
RI President
Join us to celebrate a colourful evening
SOUTH ASIA RECEPTION 2023
at Rotary International Convention Melbourne, Australia
To Meet and Greet
Under the Australian Sky!!!
Register Soon..!!
Registration Fee: Rs 6,000 / US $75 per person
Date: May 28, 2023 | Time: 05:00 pm to 08:00 pm
Venue: Crown Conference Centre, 8 Whiteman Street, Southbank VIC 3006, Australia
Bank Details:
Muruganandam . M
Account no: 00000035443584016
IFSC Code: SBIN0001363
AS Venkatesh
RI Director
Convener - South Asia Reception
Dr Mahesh Kotbagi
RI Director
Co - Convener - South Asia Reception
MMMTRICHY
PDG AKS Rtn Muruganandam M
B.E., M.B.A., M.S., M.F.T., PGDMM., DEM.,
Chairman - South Asia Reception - 2023 RI Convention, Melbourne
Chairman - Mahabs 21 (Rotary Zone Institute)
RPIC - Zone 5 (2023-2026) | District Trainer (2023-24)
District Governor (2016-17) | RID 3000
Chairman - Excel Group of Companies
PDG Rtn Sridhar J
Secretary - South Asia Reception
/mmmtrichy | www.mmmtrichy.com | Mail: mmmrotary@excelgroup.co.in | Ph: +91 93825 50001
Further Details Contact: Rtn Afroze S H: +91 75029 77555 | Rtn Pavithra C: +91 91599 90345




சக்கர நாற்காலியில் சுபாஷுடன் (இடமிருந்து) ஷம்சுல் ஹுடா, PRID கமல் சங்வி, ரிஸ்வானா ஜமீந்தார், டால்கின் ஜமீந்தார் மற்றும் சுபாஷின் பெற்றோர் சுனிதா மற்றும் லஷ்மண் பிரசாத்.

Rotary PEOPLE OF ACTION

# நிஜ வாழ்க்கை
# பஜ்ரங்கி பைஜான் கதை

ரஷீதா பகத்



சில ஆண்டுகளுக்கு முன்பு, சல்மான் கானின் பஜ்ரங்கி பைஜான் வசூலில் பல சாதனைகளை முறியடித்தது. அதன் கதை மனதை உலுக்கும் ஒன்றாக இருந்தது. பேச முடியாத ஒரு இனிமையான மற்றும் அப்பாவி சிறுமி, பாகிஸ்தானிலிருந்து தற்செயலாக காஷ்மீர் வழியாக இந்தியா எல்லைக்குள் வந்து விடுகிறாள். அவளை அவளது பெற்றோரிடம் திரும்ப ஒப்படைக்க ஹீரோ எல்லாவற்றையும் பணயம் வைக்கிறார். இந்த பணியில், அவருக்கு ஒரு பத்திரிகையாளர் உதவுகிறார்.

அது ஒரு புனைகதை; இந்தியா மற்றும் பங்களாதேஷில் உள்ள சில ரோட்டேரியர்களின் நெருக்கமான ஈடுபாடு மற்றும் கடினமான பின்தொடர்தலால் அந்த பிரபலமான திரைப்படத்தின் நிஜ வாழ்க்கைப் பிரதி ஒன்று நடந்தேறியது. அதில் பாகிஸ்தானுக்குப் பதிலாக பங்களாதேஷ் இருந்தது.

இது அனைத்தும் ஜூன் 2021இல் தொடங்கியது, டாக்காவில் இருந்து சுமார் 400கிமீ தொலைவில் வடக்கு வங்காளதேசத்தில் உள்ள நில்பமாரி மாவட்டத்தின் ஒரு பகுதியில் ஒரு ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் சாலையோரத்தில் மனநலம் மற்றும் உடல் ஊனமுற்ற நபரைக் கண்டார்.














*சுபாஷின் பெற்றோர் மற்றும் தங்கைகள்.*



யாரோ ஒருவரால் கைவிடப் பட்டுள்ளார் என்பதை உணர்ந்த அவர் நல்ல சாமானியனாக அவரைத் தனது வாகனத்தில் திம்லா காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் உடல்நிலை சரியில்லாமலும், காயமடைந்திருந்ததாலும், போலீசார் அவரை ஜூன் 13, 2021 அன்று ரங்பூர் மருத்துவக் கல்லூரியின் நரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவில் சேர்த்தனர்.

ஏறக்குறைய மூன்று மாதங்கள் பொது மருத்துவ சிகிச்சைக்காக இங்கு வைக்கப்பட்டிருந்தார். இளைஞருக்கு இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை தேவைப்பட்டது, ஆனால் அவரிடம் பணம் அல்லது அவரைக் கவனித்துக் கொள்ள யாரும் இல்லாததால், அந்த அறுவை சிகிச்சையும் செய்யப்படவில்லை. அவர் தனது பெயரை சுபாஷ் பிரசாத் என்று கூறினார்.

அதன்பிறகு, சுபாஷ் கிட்டத் தட்ட ஒரு மாதம் மருத்துவமனை வளாகத்தில் வாழ்ந்துக் கொண்டிருந் தார், அதன் பிறகு ரங்பூரின் தலைமை பெருநகர மாஜிஸ்திரேட், குளோரி ஷோமாஜ் உன்னயோன் ஷோங்ஸ்தா என்ற ஊனமுற்றோருக்கான தங்குமிடத்திற்கு அவரைப் பராமரிக்க அனுமதி வழங்கினார்.

அப்போது தான் கதைக்குள் நுழைந்தார் ஷம்சுல் ஹுதா. Ekatoor Television 71-இன் மூத்த ஒளிப்பதிவாளரும், பனானி டாக்கா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரும், பங்களாதேஷின் அமெச்சூர் ரேடியோ சொசைட்டியின் அமைப்புச் செயலாளருமான அவர் வீடற்ற ஊனமுற்ற நபரின் ஒட்டுமொத்த நிலையைப் பற்றி விசாரிக்கும் போது, அந்த விடுதியில் சுபாஷைக் கவனித்தார். குறிப்பாக அவருக்கு பங்களா மொழி பேசத் தெரியாதது, மேலும் அவரைப் பற்றியும் அவரது பூர்வீகம் பற்றியும் அதிக தகவல்களை வழங்க முடியாததையும் கவனித்தார். அவரால் தனது பெயரை மட்டும் சொல்லி, ஹிந்தியில் மட்டுமே பேச முடிந்தது. தனது வீட்டு முகவரியை கொடுக்க முடியவில்லை, ஆனால் ராம்நாககந்தவைச் சேர்ந்தவர் என்று மட்டும் கூறினார் என ஹுடா நினைவு கூர்ந்தார்.

இது ஆகஸ்ட் 2022இல் நடந்தது. இதிலிருந்து ஒரு துப்பு எடுத்து, ரோட்டேரியன்கள் கூகிள் தேடல் மற்றும் கூகிள் மாப்ஸ் பயன்படுத்தி அந்த கிராமம் உத்தரபிரதேசத்தின் பஹ்ரைச் மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றும் லக்னோவிலிருந்து 200கிமீ தொலைவில் உள்ளது என்பதை கண்டறிந்தனர். அவர் உடனடியாக ஆகஸ்ட் 2 ஆம் தேதி பஹ்ரைச் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கேசப் குமார் சவுத்ரியை தொடர்பு கொண்டு, காவலரின் வாட்ஸ்அப் மூலம் சுபாஷின் படத்தையும் அனுப்பினார்.

இந்த மூலத்திலிருந்து அதிகம் முன்னேற்றம் இல்லாதபோதிலும், கைவிட மறுத்த ஹுடா, அடுத்து லக்னோவில் உள்ள தனது அமெச்சூர் வானொலி நெட்வொர்க்கை நோக்கி திரும்பினார். லக்னோவில் உள்ள ஒரு அமெச்சூர் ரேடியோ ஆபரேட்டர், தினேஷ் சந்திர ஷம்ரா, சுபாஷின் கிராம பஞ்சாயத்து தலைவர் சுபேதாரின் தொடர்பு எண்ணைப் பெற முடிந்தது. அவர் சுபாஷின் படத்தைப் பார்த்தவுடன், அந்த இளைஞனை தனக்கு தெரியும் மற்றும் அவர் சிறிது நாட்கள் முன் காணாமல் போனார் என்பதையும் உறுதிப்படுத்தினார்.

இறுதியாக, சக்கரம் சுழல ஆரம்பித்தது! சில நிமிடங்களில், ஹுடாவுக்கும் சுபாஷின் அப்பா லக்ஷ்மன் பிரசாத், அம்மா சுனிதா, சகோதரிகள் அஞ்சனி, ஷான்ஜிபன் ஆகியோருக்கு இடையே வாட்ஸ்அப் வீடியோ கால் ஒன்றை சுபேதார் ஏற்பாடு செய்தார். பஹ்ரைச் மாவட்டத்தில் நிதிபூர்வாவில் உள்ள அவர்களது குடியிருப்பு முகவரியை நான் உறுதிப்படுத்தினேன். அதைத் தொடர்ந்து, வீடியோ அழைப்பில் கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு நடந்த கூடுதலில் அவரது குடும்ப உறுப்பினர்கள் கண்ணீர் விட்டு அழுதனர். சுபாஷ் தன்னைப் பார்த்துக் கொள்ள முடியாததால் சரியாக கவனிக்கப்படுகிறாரா என்று அவரது தாயார் சுனிதா விசாரித்தார். அவருக்கு முன்னர் வழங்கப்பட்ட சிகிச்சைக்கான மருத்துவ பரிந்துரைகளையும் அவர் அனுப்பினார், என்கிறார் ஹுடா.

அந்த பெற்றோர்கள் தினசரி கூலித் தொழிலாளிகள் மற்றும் அவர்கள் ஒரு காட்டுப் பகுதியில் வசிப்பவர்கள் எனவே சுபாஷ் ஒரு காட்டு மிருகத்தால் இழுத்துச் செல்லப்பட்டதாக நினைத்துள்ளனர்.

இப்போது கவனம் சுபாஷை அவரது குடும்பத்துடன் மீண்டும் இணைப்பதற்கு திரும்பியது; இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகள் ஈடுபட்டிருந்ததால் அது எளிதான விஷயம் அல்ல, மேலும் சுபாஷிடம் எந்தவிதமான ஆவணங்களும் அடையாளச் சான்றுகளும் இல்லை. இன்றும் அவர் நாடு திரும்பும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவர் எப்படி முதலில் பங்களாதேஷில் வந்திறங்கினார் என்பது தெரியவில்லை. ஒருவேளை, அவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும், ஆனால் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஊனமுற்றவர் என்பதால் அவரை எந்த வகையிலும் பயன்படுத்த முடியாததால் இரக்கமின்றி தெருக்களில் தூக்கி எறியப்பட்டுள்ளார் என்று கருதப்பட்டது.

அந்த இளைஞனை வீட்டிற்கு அழைத்து வர, அவரது அடையாளத்தை நிறுவுவதில் தொடங்கி, இருபுறமும் நிறைய ஆவணங்களை சமர்பிக்க வேண்டியிருந்தது. உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஊனமுற்ற இளைஞனை தனது குடும்பத்துடன் மீண்டும் இணைக்கும் இந்த காரணத்திற்கு கிழக்கு இந்தியாவில் ரோட்டேரியர்களின் உதவியை பெறுவதற்கான ஹுடாவின் பல முயற்சிகள் தோல்வி அடைந்தது, பிறகு இறுதியாக மேற்கு இந்தியா, குஜராத்தில் உள்ள ரோட்டேரியன் ஒருவரை கண்டுபிடித்தார். ரிஸ்வானா ஜமீன்தார், RC பருச், RID 3060 இன் உறுப்பினர்,



கோவிட் தொற்றுநோய்களின் போது WIRI (வுமன் இன் ரோட்டரி இன்டர்நேஷனல்) நெட்வொர்க்கில் சேர்ந்தவர். அவரது சங்கத்தின் முன்னாள் தலைவரான ரிஸ்வானா 2015இல் ரோட்டரியில் சேர்ந்தார், மேலும் அவரது கணவர் டால்க்கினும் பருச் சங்கத்தின் பழைய உறுப்பினர் ஆவார்.

அதே டாக்கா சங்கத்தை சேர்ந்த மற்றொரு பெண் ரோட்டேரியன், ஷாஹிதா நாஸ் ஹுதா, சுபாஷ் இந்தியாவுக்குத் திரும்புவதற்கும் அவரது குடும்பத்துடன் மீண்டும் இணைவதற்கும் ஒரு பிரத்யேக குழுவை உருவாக்க சமூக ஊடகங்களில் முன்முயற்சி எடுக்க வேண்டியிருந்தது. இறுதியாக, நவம்பர் 2022இல், WIRI குழுவின் மூலம், ரிஸ்வானாவை இந்த காரணத்திற்கு உதவ ஈடுபடுத்தினார், மேலும் அவர் தனது கணவர் டால்க்கின் மூலம் முழுமையாக



ஆதரிக்கப்பட்டார். ரிஸ்வானா முன்பு இன்னர் வீல் உறுப்பினராகவும், இன்னர் வீல் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார்.

சுதந்திரத்திற்கு முன்பு, 1944ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தியாவின் பழைய சங்கங்களில் ஒன்றான அவரது சங்கத்தின் சுறுசுறுப்பான உறுப்பினராகவும் உள்ளார். அது 150க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது மற்றும் அதன் தலைவரான முதல் பெண்மணி அவர் தான். கோவிட் சமயத்தில், நான் சங்கத்தின் செயலாளராக இருந்தேன், அந்த நேரத்தில் நாங்கள் நிறைய ஆன்லைன் சந்திப்புகளை நடத்தினோம். இந்தியா முழுவதும் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் தொடர்புகளை ஏற்படுத்தினோம். இது மக்களைச் சந்திப்பதையும் தொடர்புகளை உருவாக்குவதையும் மிகவும் எளிதாக்கியது. எனவே ஜூலியா கங்வானி WIRIஐத் தொடங்கியபோது, நான் அதில் இணைந்தேன், அவர் என்னை உறுப்பினர் ஒருங்கிணைப்பாளராக ஆக்கினார். அப்படித்தான் RC பனானி டாக்காவைச் சேர்ந்த ஷாஹிதா நாஸ் என்னை தொடர்பு கொண்டார். அவர் பெங்களூரு ரோட்டரி சங்கத்தின் பயல் பிஸ்வாஸை தொடர்பு கொண்டார்; அவருக்கு என்னைத் தெரியும், அவர் என்னால் இதற்கு உதவ முடியுமா என்று கேட்டார். அவர்கள் பல ரோட்டேரியன்களை தொடர்பு கொண்டுள்ளனர், ஆனால் யாரும் கிடைக்கவில்லை. நான் செய்கிறேன் என்று வாக்களித்தேன்.''

சுவாரஸ்யமாக, ரிஸ்வானாவின் நண்பர்கள், அவரிடம், கவனமாக இருக்க வேண்டும். இது இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையே உள்ளது; உன் தொலைபேசி ஒட்டுக்கேட்கப் படலாம், இந்த வழக்கின் சூழ்நிலைகள் கொஞ்சம் மர்மமானதாகத் தெரிகிறது என பல காரணங்கள் கூறினர். எங்களுக்கு மிகவும் உதவிய PRID கமல் சங்வி கூட, தொலைபேசி அழைப்புகளில் இந்த வழக்கு சம்மந்தமான விஷயங்கள் பற்றி மட்டுமே உரையாட வேண்டும் என்று எனக்கு அறிவுறுத்தினார்.

இது அக்டோபர் 2022இல் நடந்தது. ரிஸ்வானா அடுத்து ஷம்ஷுல் ஹுதாவுடன் ஒன்றாக வேலை செய்யத் தொடங்கினர். சுபாஷ் வங்கதேசத்தில் எப்படி சென்றார் என்று கேட்டதற்கு, உண்மையில் யாருக்கும் தெரியாது. ஏன் எப்படி என்பதில் நாங்கள் நுழைய மாட்டோம் என்று முடிவு செய்திருந்தோம்; போலீசார் ஏற்கனவே விசாரித்து வருகின்றனர், அது அவர்களின் வேலை. நாங்கள் ஆவணங்களை நகர்த்துவதில் கவனம் செலுத்தினோம். டாக்காவில் உள்ள இந்திய தூதரகத்தை நான் தொடர்ந்து அழைத்து: "நான் இந்தியாவின் குஜராத்தில் இருந்து அழைக்கிறேன், எனது இந்திய குடிமகன் சுபாஷ் பிரசாத் திரும்பும் செயல்முறை பற்றி விவாதிக்க விரும்புகிறேன் என கூறுவேன். மேலும் ஷம்சுல் தனது அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவார். சுபாஷை இந்தியாவிலுள்ள அவரது வீடு மற்றும் குடும்பத்தினருக்குத் திரும்பச் சேர்ப்பதே எங்கள் நோக்கமாக இருந்தது.

ரிஸ்வானாவின் உதவித் தீர்மானத்தை வலுப்படுத்தியது என்னவென்றால், மலேசியாவில் எங்கள் பாஸ்போர்ட்டை நாங்கள் தொலைத்துவிட்டோம், ரோட்டரி மற்றும் ரோட்டேரியர்களின் உதவியால் 24 மணி நேரத்திற்குள் இந்தியாவுக்குத் திரும்புவதற்குத் தேவையான ஆவணங்களைப் பெறமுடிந்தது. இப்போது வேறு யாருக்காவது உதவுவது எங்கள் கடமை என்று நானும் என் கணவரும் உணர்ந்தோம் என்றார்.

இந்த திட்டத்திற்கு முக்கியமான போலீஸ் அதிகாரியுடன் அவர் தொடர்ந்து தொடர்பில் இருந்தார் - மேற்கு வங்காளத்தில் உள்ள DSP ஸ்பர்ஷா நிலங்கி. அவர் வங்காளதேச எல்லையில் உள்ளவர்களுடன் நெருக்கமாக பணியாற்றுபவர். குடியேற்ற செயல்முறையை எளிதாக்க அவர் மிகவும் உதவினார். பஹ்ரைச் DSP ராஜீவ் சிசோதியாவும் அவர் தரப்பில் இருந்து ஆவணங்களை பெற உதவினார்.



*டால்கின் ஜமீந்தார், PRID கமல் சங்வி மற்றும் ரிஸ்வானா DSP ஸ்பர்ஷா நிலங்கி அவர்களை கௌரவிக்கிறார்.*

இறுதியாக ஆவணங்கள் அனைத்தும் பெறப்பட்டன; சுபாஷை இந்தியாவுக்குத் திரும்ப அனுப்புவதற்கு வங்கதேசத்தில் வெளியுறவு அமைச்சகம் மற்றும் காவல்துறை அதிகாரிகளிடம் சேர்ந்து ஹுடா பணியாற்றினார்; அவசர பயண ஆவணம்/பாஸ்போர்ட்டை இந்திய தூதரகத்தில் இருந்து பெறுவதற்காக ரிஸ்வானா உழைத்தார். இறுதியாக, ரிஸ்வானாவும் டால்க்கினும் கொல்கத்தா சென்றனர். அங்கே “PRID கமல் சங்வி தன் அழகான நகர்புற வீட்டில் எங்களை அன்புடன் தங்க வைத்தார்.”

மார்ச் 20 அன்று, கொல்கத்தா செல்வதற்காக சுபாஷின் பெற்றோர் மற்றும் அவர்களின் கிராமத்தை சேர்ந்த இன்னொருவருக்கும் நிதிபூர்வா கிராமத்தில் இருந்து பஹ்ரைச் ரயில் நிலையத்திற்கு செல்ல கார் ஏற்பாடு செய்யப் பட்டது. ஆனால் அவர்களது ரயில் டிக்கெட்டுகள் உறுதி செய்யப்படாததால், அவர்களுக்கு விமான டிக்கெட்டுகள் (லக்னோவில் இருந்து கொல்கத்தா வரை) அந்த இடத்திலேயே ஏற்பாடு செய்யப் பட்டது. மேலும் அவர்கள் லக்னோவில் உள்ள ஒரு ஹோட்டலில் அன்று இரவு தங்க வைக்கப்பட் டனர். இவை அனைத்தும் கூடுதல் செலவுகள், ஆனால் ஜமீன்தார் தம்பதியினர் உதவ முன்வந்தனர்.

இப்போது சங்வியும் இதில் கலந்துக்கொண்டார், கொல்கத்தாவில் இருந்து சுமார் 90கிமீ தொலைவில் உள்ள இந்திய-வங்காளதேச எல்லையான பெட்ராபோலுக்கு சுபாஷின் பெற்றோரை அழைத்துச் செல்லும் நாள் விடிந்ததும், அவரும் ஜமீன்தார்களுடன் சேர்ந்து மூன்று மணி நேர கார் பயணத்தை மேற்கொண்டார்; மறுபுறம் சுபாஷுடன் ஷம்சுல் ஹுடாவும் இருந்தார்.

சுபாஷ் தனது பெற்றோரை அடையாளம் கண்டுகொண்டார், மகன் மீண்டும் பெற்றோருடன் இணைந்தது உணர்ச்சிவசமாக அமைந்தது. உணர்ச்சிவசப்பட்ட சங்வி, ஒரு ரோட்டேரியர் ஒரு தனி மனித வாழ்க்கைக்கு எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் என்பதை இது நிரூபிக்கிறது... ஹுடாவும் ரிஸ்வானாவும் ஏழு மாதங்களாக அயராது உழைத்து ஒரு இளம் மற்றும் மனநலம் குன்றிய இளைஞனை அவனது பெற்றோருடன் இணைத்திருக்கிறார்கள். இது ரோட்டரியின் தனித்துவமான சர்வதேசத் தன்மையாகும். நாடுகள் வித்தியாசமாகவும் எல்லைகளால் பிரிக்கப்பட்டதாகவும் இருக்கலாம், ஆனால் மக்களுக்குள் துடிக்கும் இதயங்கள் கருணையும் இரக்கமும் கொண்டவை என்பதை இது நிரூபிக்கிறது. ரோட்டரியின் சர்வதேச தன்மை மற்றும் அதன் மனித நேயத்திற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

உ.பி., பஹ்ரைச்சில் உள்ள சுபாஷ் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை சரிபார்ப்பதற்காக, RID 3120, DG அனில் அகர்வாலின் உதவியை ரிஸ்வானா சுட்டிக் காட்டினார்.

பெட்ரோபோலில் உள்ள ஜீரோ பாயிண்டில், இந்த மனதைக் கவரும் கதையைப் பதிவு செய்ய வங்காளதேச ஊடகங்களின் பெரும் குழு ஒன்று கூடியிருந்தது. அன்று மாலை, கொல்கத்தாவில், இந்த “சர்வதேச அமைதி திட்டத்தை” கொண்டாடுவதற்காக RIDE அனிருதா ராய்சௌத்ரி ஒரு இரவு விருந்தை வழங்கினார். ஆனால் நிதிபூர்வாவின் காட்டுப் பகுதியில் தான் உண்மையான கொண்டாட்டங்கள் நடைபெற்றன, முழு கிராமமும் சுபாஷ் திரும்பியதைக் கொண்டாடியது... மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஊனமுற்ற மகன் அவனது பெற்றோருடன் மீண்டும் இணைவது அவர்களின் கடினமான வாழ்க்கையில் உண்மையில் ஒரு பிரகாசமான தருணம்.■

ADVT.

**KURIL FOUNDERS B-SCHOOL** www.kfb-school.org

# KFBS

Kuril Founders B-School

The Business School for Entrepreneurs and Family Business

# ADMISSION NOW OPEN

START 03 JULY

## PROGRAMS STUDY

- Entrepreneurship & Innovation Management
- Family Business Management
- SCM & Logistics
- 100+ Certificate programs Essential to Business



## ABOUT US

Autonomous Private Business School Based out of Mumbai. Provide Hybrid mode Programs.

Contact Us
+91- 86556 58744
admission@kfb-school.org

**REGISTER NOW 30% OFF**

# உலகில் நம்பிக்கையை உருவாக்குங்கள்

V முத்துகுமரன்



ரோட்டரியின் சேவை சிகாகோவில், எவான்ஸ்டனில் உள்ள ரோட்டரி மையத்தின் 18-வது மாடியில் நடைபெறவில்லை. 200-க்கும் மேலான நாடுகளில் உள்ள 37,000-த்துக்கும் மேற்பட்ட ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த ஒவ்வொரு ரோட்டேரியன் பங்கேற்புடன் செய்யப்படுகிறது என்பதை நான் அறிவேன். உலக மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதுதான் எங்கள் பணி என்றார் RIPE கார்டன் மெக்கினலி. சென்னையில் RID 3232 மற்றும் 3231 இணைந்து ஏற்பாடு செய்திருந்த மீட் அண்ட் கிரீட் நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார். நான் ஸ்காட்லாந்து ரக்பி அணியின் தீவிர ரசிகன். இந்த அணியினர் ஒன்றாக இணைந்து சிறப்பாக செயல்படுவார்கள். அந்த அணியின் 15 வீரர்களும் திறமையானவர்கள். ஆனால், வெற்றிபெற அவர்கள் ஒன்றாக இணைந்து செயல்பட்டனர் என்றார். வாழ்க்கையின் விளிம்பில் இருந்த இரண்டு இளம் பெண்களின் மனதில் ரோட்டரி நம்பிக்கையை விதைத்த இரண்டு சம்பவங்களை அவர் நினைவு கூர்ந்தார். 2006ஆம் ஆண்டின் மத்தியில் அவரும் ஹெதரும் கிழக்கு ஆப்பிரிக்க நாடானா ருவாண்டாவுக்குச் சென்றனர். 12 வயதில் அனாதையான மேரி என்ற சிறுமியின் நிலையைக் கண்டு அவர்கள் வேதனை அடைந்தனர். 1994-ஆம் ஆண்டு நடந்த இனப்படுகொலையில் அவளது தந்தை கொல்லப்பட்டார். அவரது தாயார், தீவிரவாதிகளால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு அதன் பின் HIV நோயால் தாக்கப்பட்டு இறந்தார். இளம் வயதிலேயே மேரி, தனது இரண்டு சகோதர்களையும், குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், தனியார் தொண்டு நிறுவனமான ஹோப் அண்ட் ஹோம் ஃபார் சில்ட்ரன் ஆதரவில் இலவச தங்குமிடமும் இலவச கல்வியும் கிடைத்ததால் அவர் பள்ளிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். இந்த நிறுவனத்துடன் இங்கிலாந்தில் உள்ள ரோட்டரி சங்கங்கள் கூட்டு சேர்ந்துள்ளது.

ரோட்டரி அந்த பெண்ணுக்கு பள்ளிக்கல்வியை மட்டுமே இலவசமாக வழங்கியது. ஆனால், மேரி மேலும் படிக்க ஆசைப்பட்டார். இந்த நிலையில் ஸ்காட்டிஷ் வழக்கறிஞர் ஒருவர், அவர் கிகாலி பல்கலைக்கழகத்தில் கல்லூரிக் கல்வியைத் தொடர நிதியுதவி செய்தார். பட்டப்படிப்பு முடித்து மேரி இப்போது தொழில் முனைவராக உள்ளார்.

கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் மணிலாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் நான்கு வயது குழந்தைக்கு இதய அறுவைச்சிகிச்சை செய்தபோது அதற்கு சாட்சியாக அவர் இருந்தார். காலங்கள் மாறினாலும் ரோட்டரி, உலகம் முழுவதிலும் துயரத்தில் இருக்கும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி வாழவைத்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### மன நலத்துக்கு முன்னுரிமை

நீண்டகாலமாக மனநல பிரச்னைகள் சமூக நிந்தனை காரணமாக தீர்க்கப்படாத விஷயமாக இருந்து வருகிறது. இந்த அணுகுமுறை மாற வேண்டும். கோவிட்டுக்கு பிறகு மக்கள் குறிப்பாக குழந்தைகள், இளம் வயதினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சமூகத்தில் மனநல பிரச்னைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்ட ரோட்டரி சங்கங்கள் முன்வர வேண்டும் என்று மெக்கினலி கூறினார். மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான செயல்திட்டத்தை வகுக்கும் முன் சமூகத்தில் உள்ள மக்களின் தேவைகள் என்ன என்பதை ரோட்டரி சங்கங்கள் மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

RID 3232 பிரிக்கப்படுவதற்கு முன் உள்ள கடைசி ஆண்டாகும் இது. இந்த கடைசி ஆண்டை மிகச் சிறப்பானதாக்க அதற்கான சவாலை சந்திக்க நீங்கள் தயாராகி விட்டீர்களா? என்று RI இயக்குநர் A S வெங்கடேஷ், உள்வரும் தலைவர்களிடம் கேட்டார். பல்வேறு பிரச்னைகள் இருந்தாலும் நம்மிடையே மோதல்கள் இருக்கக் கூடாது. இணைந்து செயல்படுவது தான் முன்னேற்றத்திற்கான வழி என்றும் அவர் குறிப்பிட்டார்.

2007–09இல் மெக்கினலி RI இயக்குநராக இருந்தபோது தாம் மாவட்ட ஆளுநராக இருந்ததாக பிரதிநிதிகளை RIPE இடம் அறிமுகப்படுத்திய போது வெங்கடேஷ் நினைவு கூர்ந்தார். எடின்பர்கில் பல்மருத்துவ நிபுணராக இருந்த மெக்கினலி, 1984ஆம் ஆண்டு சௌத் குயீன்ஸ்பெர்ரி ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார். பெக்வெஸ்ட் சொசைட்டி உறுப்பினராகவும் அவர் இருந்தார். அவர் எப்போதும் நகைச்சுவையாக பேசுவதுடன், அனைவருடன் நட்புறவாக இருந்தார். நல்ல உணவு வகைகளை விரும்பிச் சாப்பிடுவார். அவருக்கு இசை



*சென்னையில் RIPE கார்டன் மெக்கினலி மற்றும் அவர் மனைவி ஹெதரும் (இடமிருந்து) ராஜகோபால், PDG J ஸ்ரீதர், RID A S வெங்கடேஷ், PDG கிருஷ்ணன் V சாரி, PRID P T பிரபாகர், ஷோபானா மற்றும் DGE ரவி ராமன், PDGs S கிருஷ்ணசாமி, J B காம்தார், DG N நந்தகுமார், RID 3234 DGN N S சரவணன், PDG நடராஜன் நாகோஜி, RID 3234 DGND வினோத் சரோகி, RID 3203 PDGs P M சிவசங்கரன் மற்றும் E K சகாதேவன் ஆகியோருடன்.*

என்றால் கொள்ளை பிரியம். அவரது மனைவி ஹெதர், இசை ஆசிரியர் மட்டுமல்ல, நன்றாகவும் பாடுவார் என்று வெங்கடேஷ் குறிப்பிட்டார். ரோட்டரி எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும். அனைவருக்கும் ஏற்ற வகையில் அது செயல்பட வேண்டும். உலகிற்கு நல்லது செய்ய வேண்டும் என்பது மெக்கினலியின் கண்ணோட்டமாகும்.

RID 3232 890 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது. 5 புதிய சங்கங்களை உருவாக்கியுள்ளது. இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் TRF இலக்கான 2.15 மில்லியன் டாலர் இலக்கை தாண்டிவிடுவோம் என்று DG N நந்தகுமார் கூறினார். ஒட்டு மொத்தமாக சென்னை சங்கங்கள் ரூ.53.76 கோடியில், 4,755 சேவைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. பெண்களுக்கு மார்பக புற்றுநோய் உள்ளதா என்பதை முகாம்கள் நடத்தி முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் சக்தி திட்டம் எங்களின் லட்சியத் திட்டமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெளிச்சம் திட்டத்தின்கீழ் ஐந்து தையல் இயந்திரங்கள் கொண்ட 45 தொழில் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி அதன் மூலம் 20,000 பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்துள்ளோம் என்றார் RID 3231-இன் DG J K N பழனி. 1,75,000 டாலர் சர்வதேச மானிய உதவியுடன் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் சாதனம் அடங்கிய நடமாடும் மருத்துவ வாகனம் விரைவில் கொடி அசைத்து தொடங்கி வைக்கப்படும். தற்போது 6 ஆம்புலன்ஸ் வாகனங்கள் இயங்கி வருகின்றன. இதற்கு PDG அபிராமி ராமநாதன் போன்ற தாராள மனம் கொண்ட நன்கொடையாளர்களே காரணம் என்று குறிப்பிட்ட அவர், பசுமை இயக்கத்திட்டத்தின் கீழ் 2.5 லட்சம் பனை விதைகள் விநியோகிக்கப் பட்டுள்ளதாக கூறினார். பல்வேறு முகாம்கள் மூலம் 2600 யூனிட் இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் கண் மருத்துவ முகாம்கள் மூலம் 1000-த்துக்கும் மேலானவர்கள் பயனடைந்துள்ளனர். 43 பேர் அடங்கிய குழுவை நான் இலங்கைக்கு வழிநடத்தி அழைத்துச் சென்றேன். அங்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளுக்கு மருத்துவக் கருவிகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. தன்வந்திரி திட்டத்தின் பள்ளி மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ள என்றும் அவர் கூறினார்.

முன்னதாக DGE ரவி ராமன், தமது பதவிக்காலத்தில் சங்கத்தின் கூட்டுக் கூட்டங்கள் மற்றும் கூட்டுத் திட்டங்கள் செயல்படுத்துவது ஊக்குவிக்கப்படும் என்றார். வரும் ஆண்டில் 23 புதிய சங்கங்களை உருவாக்க இலக்கு நிர்ணயித் துள்ளதாகவும் (தற்போது 172 சங்கங்கள் உள்ளன,) 1,200 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க திட்டமிட்டுள்ளதாகவும் (தற்போது 5,873 உறுப்பினர்கள் உள்ளனர்.), 500 புதிய ரோட்ராக்டர்களை சேர்க்கவும் (தற்போது 7,155) திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டார். ஆண்டு நிதியான 4,00,000 டாலருடன், TRF நிதிக்கு 2.6 மில்லியன் டாலர் திரட்டவும் திட்டமிட்டுள்ளதாக ராமன் கூறினார். ஒவ்வொரு சங்கத்திலும் ரோட்டேரியன்கள் மற்றும் ஆன்களின் மனநல பிரச்னைகளை கண்டறிந்து தீர்வுகாண தலைமை ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

AKS உறுப்பினர்கள் எஸ்.வி.வீரமணி, PDGs ராமநாதன், J B காம்தார், முன்னாள் தலைவர்கள் ரஞ்சித் பிரதாப் மற்றும் விஜயபாரதி (RC மெட்ராஸ்), DGND வினோத் சாரோகி மற்றும் தேவ் தாமோதரன் ஆகியோர் மெக்கினலியால் பாராட்டப்பட்டனர். PDG ஜெ.ஸ்ரீதர், TRF நிதி 2.5 மில்லியன் டாலர்களில் ஒரு பகுதியாக போலியோ நிதியாக




DG *நந்தகுமார்* RIPE *மெக்கினலி மற்றும் ஹெதரை கௌரவிக்கிறார். உடன் (இடமிருந்து)* Rtn Dr *ராம்குமார், லக்ஷ்மி, வினிதா,* RID A S *வெங்கடேஷ், சுமேதா மற்றும்* RID 3231 DG J K N *பழனி உள்ளனர்.*

1,55,000 டாலர் திரட்டியதற்காக அவருக்கு அறக்கட்டளை சார்பில் பாராட்டுப் பத்திரம் வழங்கப் பட்டது. சென்னையை சுற்றியுள்ள 7 ஏரிகளை புனரமைத்ததற்காக சர்வதேச விளம்பர முகமையின் ஆலிவ் க்ரௌடு விருதும் பசுமை நாயகன் விருதும் பெற்ற மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் P N மோகன் RIPE மெக்கினலியால் கௌரவிக்கப் பட்டார். 600 ஏக்கர் பரப்பிலான பாழடைந்த ஏரிகளை அவரது தலைமையிலான குழு மறுசீரமைத்து மீட்டெடுத்தது. இதன் மூலம் 1000 ஏக்கர் விவசாய நிலமும், 8 லட்சம் மக்களும் பயனடைந்துள்ளனர்.■

## PDG சகாதேவனுக்குப் பன்னாட்டு இளம்பிள்ளைவாத விருது

### ரோட்டரி செய்திக் குழு

பல ஆண்டுகளாக இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் பணியிலும் அதற்கு நிதி திரட்டுவதிலும் ஈடுபட்டு வருகிற RID 3203 PDG E K சகாதேவன் அவர்களுடைய பணியை, கொல்கத்தாவில் நடைபெற்ற லக்ஷ்யா சந்திப்பில் அங்கீகரிக்கப்பட்டது. அங்கு, RIன் உள்வரும் தலைவர் கார்டன் மெக்கினலி அவருக்குப் பன்னாட்டு இளம்பிள்ளைவாத விருது, சான்றிதழை வழங்கிப் பெருமைப்படுத்தினார். 1992ல் இவர் ரோட்டரியில் சேர்ந்த போதே அவருடைய இளம்பிள்ளைவாத அகற்றல் பணி தொடங்கிவிட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. அறுவைச் சிகிச்சை வல்லுனராகிய இவர், உண்மையான இளம்பிள்ளைவாத அகற்றல் “வெற்றியாளர் மற்றும் இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான போராளி”. இவர் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவது தொடர்பான பல பணிகளில் கவனம் செலுத்தியவர். இவர் “இப்போதே இளம்பிள்ளை வாதத்தை முடித்துவைப்போம்” அமைப்பில் நான்கு ஆண்டுகள் உறுப்பினராக இருந்தார், ரோட்டரியன்கள் மற்றும் பொதுமக்களை இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் ஊக்கத்துடன் ஈடுபடச் செய்வதற்கென முதன்முறையாக, End Polio Now pin மற்றும் சான்றிதழை உருவாக்கினார், 4, 5, 6 மற்றும் 7 ஆகிய பிராந்தியங்களில் PolioPlus Society pinகளையும் அறிமுகப்படுத்தினார்.



ரஷீதா பகத்

PDG *சகாதேவன் அவர்களுக்கு* RIPE *கார்டன் மெக்கினலி விருது வழங்குகிறார். உடன் அனிருதா ராய் சௌத்ரி மற்றும் ஹெதர் உள்ளனர்.*

PDG சகாதேவன் இந்திய தேசிய போலியோப்ளஸ் சமூக உறுப்பினராக இருந்தவர், இளம்பிள்ளைவாத அகற்றல் நிதிக்குத் தொடர்ந்து பங்களித்தவர், பிறரையும் பங்களிக்க ஊக்குவித்தவர். இளம்பிள்ளைவாதத் தடுப்புச் சொட்டுமருந்து வழங்குவதற்குப் பல சங்கங்கள் எடுத்த நடவடிக்கை களைக் கண்காணிப்பதில் அவருடைய பங்கு மிகச் சிறப்பானது.■

# மெல்பர்னில் சந்திப்போம்

பெரிய பேச்சாளர்கள், இடைவெளி நிகழ்ச்சிகள், கொடி விழா, நட்பு இல்லம் என்று 2023 RI மாநாடு மெல்பர்னில் வண்ணமயமாகவும் ஊக்கத்துடனும் நடைபெறவுள்ளது.

இந்த மாதம் மெல்பர்னுக்கு வாருங்கள், பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதுபற்றிய மாநாட்டு முதன்மை மேடையில், நோபல் அமைதிப் பரிசு வென்ற, லிபேரியாவைச் சேர்ந்த லேமா க்போவீ தன்னுடைய கதையைச் சொல்லக் கேளுங்கள்.

அதன்பிறகு, நட்பு இல்லத்துக்கு வாருங்கள், சங்கங்கள், தோழமைகள், செயல் குழுக்கள், கூட்டாளர்களுடைய திட்டங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளுங்கள், உங்கள் சங்கத்தின் தாக்கத்தை விரிவாக்க ஆற்றல் பெறுங்கள். எடுத்துக்காட்டாக, திட்டக் கூட்டாளர் ShelterBox அமைத்துள்ள மாதிரி நெருக்கடி நேரப் பாதுகாப்பு இடத்துக்குள் நுழைந்து பாருங்கள்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த, சமூகத் தாக்க வலைப்பின்னல் ரோட்டரி சங்கத்தின் பதிவுத் தலைவர் ரெபெக்கா ஃப்ரை, நட்பு இல்லம் "ரோட்டரியின் உண்மையான திருவிழா" என்கிறார், ரோட்டரியின் பன்னாட்டு வீச்சைப் புரிந்துகொள்ள மிகச் சிறந்த வழி என்று விளக்குகிறார்.

கண்காட்சித் தளத்தில் நீங்கள் நண்பர்களைச் சந்திக்கலாம், புதியவர்களோடு அறிமுகமாகி அவர்களை உங்கள் ரோட்டரி வலைப்பின்னலில் சேர்க்கலாம்,



*2022 மாநாட்டில் ஒரு மெய்நிகர் நிகழ்ச்சி.*

உங்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் திட்டங்களின் தலைவர்களை நாடிப் பேசலாம்.

அத்துடன், இது மிகவும் மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும். இதற்குமுன் இந்தத் தளத்தில் சீனச் சிங்க நடனக் கலைஞர்கள், பவளப் பாறை மீட்டெடுத்தல் திட்டம் ஒன்றைப்பற்றிய மெய்நிகர் எதார்த்த அனுபவம் போன்றவை இடம்பெற்றுள்ளன. இந்தக் கண்காட்சி, மாநாட்டு நாட்கள் அனைத்திலும் (மே 27ம் தேதியிலிருந்து மே 31ம் தேதிவரை) மெல்பர்ன் மாநாடு மற்றும் கண்காட்சி மையத்தில் நடைபெறும்.

மேலும் தெரிந்துகொள்ள, பதிவு செய்ய:
**convention.rotary.org**


## ROTARY NEWS PLUS

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல்

உள்ள Junk folder-க்கு

செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை **ஒவ்வொரு உறுப்பினருக்கும்** e-mail மூலம் அனுப்புகிறோம்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

# லக்ஷ்யா தருணங்கள்




RIPE கார்டன் மெக்கினலி மற்றும் அவர் மனைவி ஹெதர் அவர்களை TRF அறங்காவலர் அஜீஸ் மேமன் கௌரவிக்கிறார். உடன் (இடமிருந்து) RIDE T N சுப்ரமணியன், PRIP சேகர் மேத்தா, ராஷி, RID மகேஷ் கோட்பாகி, RIDE அனிருதா ராய் சௌத்ரி, அவர் மனைவி ஷிப்ரா, PRIP கமல் சங்வி மற்றும் லக்ஷ்யா தலைவர் PDG E K சகாதேவன் ஆகியோர் உள்ளனர்.



RIDE சௌத்ரி மற்றும் ஷிப்ரா அவர்கள் பேரனுடன்.



RIDE அனிருதா ராய் சௌத்ரி மற்றும் RIPE மெக்கினலி.




லக்ஷ்யா தலைவர் சகாதேவன் நிகழ்ச்சியை துவக்கி வைக்கிறார். உடன் (இடமிருந்து) PDG ரவி வட்லாமணி, RID கோட்பாகி, ராஷி, PRIP மேத்தா, RIDE சௌத்ரி, ஷிப்ரா மற்றும் PRID சங்வி ஆகியோரும் உள்ளனர்.





RIDE சுப்ரமணியன் அவர்களை PDG சகாதேவன் மற்றும் RIDE சௌத்ரி கௌரவிக்கின்றனர்.



RIDE சுப்ரமணியன் உடன் ஹெதர், ஷிப்ரா.



இடமிருந்து: PRID சங்வி, Rtn ரவிசங்கர் டகோஜு மற்றும் PDG சுரேஷ் ஹரி.



PRIP மேத்தா மற்றும் ராஷி, DGE ரீட்டு க்ரோவர், ஜெயஸ்ரீ மோஹன்டி, ஆஷா வேணுகோபால், மஞ்சு ஃபாட்கே மற்றும் BC கீதா ஆகியோருடன்.



TRF அறங்காவலர் மேமன் மற்றும் ராஷி.

புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் K விஸ்வநாதன்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# RIPE மெக்கினலியை ஆச்சரியப்படுத்திய சென்னை ரோட்டராக்டர்கள்

கிரண் ஜெஹரா

RID 3232-இன் ரோட்டராக்டர்களிடம் உரையாற்றிய போது, RIPE கார்டன் மெக்கினலிக்கு சென்னையில் உள்ள தமிழ்நாடு ரூபிக்ஸ் க்யூப் அசோசியேஷனில் பயிற்சி பெற்றுவரும் இரண்டு இளம் மாணவர்கள் மறக்கமுடியாத ஆச்சரியத்தை ஏற்படுத்தினார். லிகிதேஷ் (7) மற்றும் ஜிவிதேஷ் (8) இருவரும் இரண்டு மணி நேரத்தில் 567 ரூபிக்ஸ் க்யூப்களை தீர்த்து அவருக்கு ஒரு சிறப்புப் பரிசை உருவாக்கினார். “அவரால் மறக்க முடியாத ஒரு பரிசை அவருக்கு வழங்க விரும்பினோம்” என்று DRR கௌதம் ராஜ் கூறினார். மெக்கினலி எத்திராஜ் கல்லூரியில் ரோட்டராக்டர்களை சந்தித்தார், மேலும் அவர் தனது 2023–24 தலைமையின் கருப்பொருளான, கிரியேட் ஹோப் இன் தி வேர்ல்ட்டை காட்டும் 5 க்கு 4 அடி சட்டத்தை வெளியிட்ட போது ஆச்சரியப்பட்டார்.

“நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்” என்று அவர் கூறினார், “இவ்வளவு அழகான நினைவை உருவாக்கியதற்காக” இரண்டு சிறுவர்களுக்கும் சென்னை ரோட்டராக்டர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். இந்த மனதை நெகிழும் செயல் இளைஞர்கள் எவருக்கும் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை நினைவூட்டுகிறது. நீங்கள் ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் திறந்த மனதுடன் கொடுப்பவர்கள். அவர் தனது கருப் பொருளைப் பற்றி பேசுகையில், “உலகில் நம்பிக்கையை மீட்டெடுக்க மக்களை ஊக்குவிப்பதும், மோதல்களில் இருந்து குணமடைய உதவுவதும் நமது கருப்பொருளின் நோக்கமாகும். முன்னெப்போதையும் விட நம் உலகத்திற்கு நம்பிக்கை இப்போது தேவை.

RAC எத்திராஜ் கல்லூரியின் ரோட்ராக்டர்களின் பாரம்பரிய நாட்டுப்புற நடனம் மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சியுடன் மெக்கினலி மற்றும் அவரது மனைவி ஹீதர் ஆகியோரை ரோட்டராக்டர்கள் வரவேற்றனர். மெக்கினலி ரோட்டராக்டர்களுடன் கூடி நடனமாடினார், மேலும் அவரது வருகைக்கு கலாச்சாரத் தொடர்பைச் சேர்த்த அவர்களின் முயற்சிகளைப் பாராட்டினார்.

வரவிருக்கும் RI தலைவருக்கு, அவர் கூட்டத்தில் உரையாற்ற மேடை ஏறுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு வரவிருக்கும் ரோட்ராக்ட் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுடன் எடுத்துக் கொண்ட ஒரு படத்தை பரிசாக வழங்கியபோது அவர் ஆச்சரியத்துடன், நீங்கள் அற்புதமானவர்கள். இது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது என்று கூறினார்.

ரோட்டராக்டர்கள் தங்கள் ஆண்டு சாதனைகளை எடுத்துரைத்தனர். மெக்கினலி கூறுகையில், “உங்கள் பணி மற்றும் சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான




**இடமிருந்து:** *சுமேதா நந்தகுமார், DRR கௌதம் ராஜ், RID 3232 ரோட்டராக்ட் செயலாளர் கெசிக்கா குமரகுரு, RIPE கார்டன் மெக்கினலி, அவர் மனைவி ஹெதர், லிகித்தேஷ், ஜிவித்தேஷ், DG N நந்தகுமார் சென்னை எத்திராஜ் கல்லூரியில்.*



இடமிருந்து: DG N *நந்தகுமார், DRR கௌதம்ராஜ், RIPE மெக்கினலி, ஹெதர் மற்றும் RID A S வெங்கடேஷ்.*

முயற்சிகளால் நான் முழுமையாக ஈர்க்கப்பட்டேன். அளவு மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில் நீங்கள் உலகின் மிகப்பெரிய ரோட்ராக்ட் மாவட்டங்களில் ஒன்று. நான் இங்கே நின்று உங்களையும் நீங்கள் செய்த சாதனைகளையும் பார்க்கும் போது, உலகில் நம்பிக்கை உருவாகும் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது.

ஒரு அமைப்பாக ரோட்டரியின் நிலைத்தன்மை குறித்து கேட்ட போது, ரோட்டராக்ட் என்பது ரோட்டரியின் எதிர்காலம் மட்டுமல்ல, சந்தேகமில்லாமல் நமது நிகழ்காலம். ரோட்ராக்ட் மூலம் நாம் இன்னும் 118 ஆண்டுகளை நிறைவு செய்ய முடியும். எங்கள் நம்பிக்கை உங்கள் மீதுதான் உள்ளது என அவர் பதிலளித்தார்.

மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு ரோட்ராக்ட் சங்கங்கள் RIPE மெக்கினலி மற்றும் ஹெதர் ஆகியோரைப் பாராட்டி நிகழ்ச்சியை நிறைவு செய்தனர். நிகழ்ச்சியில் RID A S வெங்கடேஷ், DG N நந்தகுமார் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.■

Rotary PEOPLE OF ACTION

# மகாராஷ்டிரப் பழங்குடியினருக்கு நீர்ச் சக்கரங்கள்

## ரோட்டரி செய்திக்குழு



மும்பையிலிருந்து 150 KM தொலைவில் உள்ள மொகாடா மாவட்டத்தைச் சேர்ந்த 52 குடும்பங்களுக்கு நீர்ச் சக்கரங்களை வழங்கியது RC டோம்பிவ்லி மிட்-டவுன், RID 3142. இந்தக் குடும்பங்கள் தண்ணீர் வசதியில்லாத டொங்கர்வாடி, குர்லோட் என்ற இரு பழங்குடியினக் கிராமங்களில் வசிக்கின்றன. “இவர்கள் அருகிலுள்ள ஒரு காட்டில் இருக்கும் கிணறுகள், குளங்களிலிருந்து நீரைக் கொண்டுவர நெடுந்தொலைவு நடக்கிறார்கள் என்கிறார் சங்கத் தலைவர் அஜய் குல்கர்னி.

இந்தச் சங்கம், இன்னொவின்க் ஆஸ்பயர் மற்றும் ஷில்லெர் நலப் பராமரிப்பின் CSR நிதிகள் மற்றும் சங்கத்தின் சொந்தப் பங்களிப்பான ரூ.50,000ஐக் கொண்டு, நீர்ச் சக்கரங்களைப் பெற்றது.

இந்தப் பாத்திரங்கள் ஒவ்வொன்றிலும் 45 லிட்டர் தண்ணீர் பிடிக்கலாம், அவற்றின் கழுத்தில் பொருத்தப்பட்டுள்ள கைப்பிடி உதவியுடன் அவற்றை இழுத்துவரலாம். “இந்தக் கருவி, நீர் கொண்டுவரும் சுமையைக் குறிப்பிடக்கூடிய அளவு குறைக்கும், கிராமப் பெண்களுக்குப் பெரிதும் உதவும்” என்றார் சங்கத் தலைவர்.■

# பாரிபடாவில் ரோட்டரி மருத்துவ முகாம்

ராஜேந்திர சாபூ



*மாவட்ட ஆட்சியர் வினீத் பரத்வாஜ் பாரிபடா மருத்துவ முகாமை PRIP ராஜேந்திர சாபூ முன்னிலையில் துவக்கிவைக்கிறார்.*

கோவிட் தொற்றுக் காலத்தின் மூன்றாண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு மார்ச் மாதம் எங்கள் மருத்துவக் குழு ஒடிசா மாநிலம் பாரிபடாவுக்குச் சென்றது. 16 ஆண்டுகளுக்கு முன் பாரிபடாவுக்கு நாங்கள் சென்றதை இங்கு நினைவுகூற விரும்புகிறோம். எல்லைகளை தாண்டி சேவைகள் விரிவுபடுத்தும்படி உஷா என்னிடம் கூறியதை அடுத்து ரோட்டரியில் மருத்துவக்குழுவை ஏற்படுத்தினோம். முதல் மருத்துவக் குழு 1998இல் உகாண்டா சென்றது. இந்தியாவிலும் மருத்துவக் குழு அமைக்க தீர்மானித்தோம். 2006ஆம் ஆண்டில் ஒடிசாவில், ஏழை மக்கள் அதிகம் உள்ள காலஹண்டியை நாங்கள் அப்போது தேர்ந்தெடுத்தோம். 2007ஆம் ஆண்டு பாரிபடாவை தேர்ந்தெடுத்தோம்.

PDG D N பதி எங்களை வழிநடத்தினார். DG தியான்சந்த், PDG சுபாஷ் கர்க் திட்ட இயக்குநராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். 2007இல் மார்ச் 6–14 வரை மருத்துவ முகாம் நடைபெற்றது. எங்கள் குழுவில் 27 மருத்துவர்களும், தொண்டர்களும் இடம்பெற்றனர். DG தியான்சந்த், PDG சுபாஷ் அவரது மனைவி பிரவீன், நான், என்னுடைய மனைவி உஷா உள்ளிட்டோர் தில்லியிலிருந்து புவனேசுவருக்கு விமானத்தில் சென்றோம். பின்னர் அங்கிருந்து பாரிபிடா சென்றோம். DG பிரமோத் ரத் எங்களை வழிநடத்தி அழைத்துச் சென்றார்.

பாரிபடாவை சென்றடைந்ததும் மாவட்ட மருத்துவமனையை சுற்றிப்பார்த்த எங்கள் மருத்துவக் குழுவினர் ஏமாற்றம் அடைந்தனர். மருத்துவமனையில் மருத்துவக் கருவிகள் ஏதும் இல்லை. குறிப்பாக பல் மருத்துவ பிரிவில் நோயாளிகளை உட்காரவைத்து பரிசோதிப்பதற்கான நாற்காலி கூட அங்கு இல்லை. எனினும் மாவட்ட ஆட்சியர் V K பாண்டியன் வழிகாட்டுதல் பேரில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் எங்களுக்கு உதவி செய்தனர். சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எங்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க உத்தரவிட்டார். 48 மணி நேரத்தில் எங்களுக்குத் தேவையான உதவிகளை அவர் செய்து கொடுத்தது எங்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. சிறப்பு அறுவைச்சிகிச்சை நிபுணர்களின் சில அறுவைச் சிகிச்சைகள் சிக்கலாகவும் இருந்தது. இரண்டு வயது குழந்தைக்கு உதட்டுப் பிளவுக்காக பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்த்து. பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை நிபுணரான Dr P S சாரி, மயக்கவியல் மருத்துவர் Dr பிரமீளா சாரியின் உதவியுடன் அந்த அறுவைச்சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தார். குழந்தைக்கு அறுவைச்சிகிச்சை முடிந்த ஒரு மணிநேரத்திலேயே பெற்றோர் அந்த குழந்தைக்கு உணவு கொடுத்தனர். இதனால் அக்குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அந்த குழந்தையை காப்பாற்றுவது பெரும்பாடாக இருந்தது. Dr பிரமீளா சாரி அந்த குழந்தையை தொடர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தார். நாங்கள் இரவெல்லாம் அந்த குழந்தை உயிர்பிழைக்க கடவுளிடம் பிரார்த்தித்தோம். அதிகாலை 4 மணி அளவில் அந்த குழந்தை பாதுகாப்பாக இருப்பதாக அவர் தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

ஷோபித் கய், G S பிரார், S K சைனி, விஜய் சேகல், ஜெயந்த் நவானி, ராமன் அப்ரோல், P S சாரி, பிரமீளா சாரி, விஜய் பால், வனிதா

குப்தா, G K பேடி, தபோஷி பட்நாயக், குல்ஷன் தக்ரால், ராஷ்மி தக்ரால் உள்ளிட்ட பல்வேறு மருத்துவத் துறை சார்ந்த மருத்துவ நிபுணர்களும், அர்பிதா குப்தா, மாலினி சேகல், ராவத் மற்றும் ராஜீவ்குமார் உள்ளிட்ட உதவி மருத்துவர்களும் எங்கள் குழுவில் இருந்தனர்.

கடைசி நாளன்று நாங்கள் ஏற்பாடு செய்திருந்த விருந்தில் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர். 2023 பிப்ரவரியில் எங்கள் மருத்துவக் குழு விமானம் மூலம் பாரிபடா சென்றது. அங்கு எங்களை DG பிரவுதத்தா சுபுதி மற்றும் மாவட்ட தலைவர்கள் வரவேற்றனர். நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு PDG D N பதி மற்றும் அவரது மனைவி தீபா இருவரும் நேரில் வந்து எங்கள் குழுவினரை வரவேற்று இரவு விருந்தளித்தனர்.

PDG சுபாஷ் கர்க் எங்கள் குழுவை வழிநடத்திச் சென்றார். PDG Dr R S பார்மர் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். டாக்டர்கள் சங்கர் கோஸாவி, சுரீந்தர் சோதி, பூஷண் குமார், கிருஷ்ணா சசாங்கா, அனில் குமார், பார்மர், கிரிஷ் குனே, R பரத், சரளா மல்ஹோத்ரா, வினீத் நாக்பால், அனில் வர்மா, பிரக்யா சைனி, நிவேதிதா சிங், சுஷில் சைனி, ராவ்ஜித் சிங், தேவேந்திர பாலிவால், சுரீந்தர் மக்கார் மற்றும் மான்சிங், பிரவீன் கர்க் உள்ளிட்டோர் குழுவில் இடம்பெற்றிருந்தனர். DG வேத் கல்தா, DGE அருண் மோங்கியா, பிரிஜ் பார்மர், குனீத் ஆனந்த், சாரு மோங்கியா, சுனிதா சைனி, உஷா மற்றும் நான் ஆகியோரும் அக்குழுவில் இணைந்திருந்தோம்.

பிப்ரவரி 13-ஆம் தேதி மருத்துவ குழுவினரின் முகாமை பாரிபடா துணை ஆணையர் தொடங்கிவைத்தார். எங்கள் மருத்துவக்குழு மருத்துவர்கள், உள்ளூர் மருத்துவர்களுடன் இணைந்து பல்வேறு துறைகளில் மருத்துவ அறுவைச்சிகிச்சைகளை மேற்கொண்டனர். அந்த சிவில் மருத்துவமனையில் அனைத்து நவீன மருத்துவ உபகரணங்களும் வைக்கப்பட்டிருந்தன. போதிய அளவு துணை மருத்துவர்களும் இருந்தனர்.

திட்டத் தலைவர் வீரேந்திர சாஹு மற்றும் சங்கத்தின் தலைவர் ராகேஷ் சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உள்ளூர் சங்க தொண்டர்களை சந்தித்தோம். உஷா மற்றும் அருண் மோங்கியா இருவரும் மூத்த குடிமக்கள் பக்கம் சென்றனர். அவர்கள் அனைவரும் வயதானவர்கள் மட்டுமல்ல, தனிமைப்படுத்தப்பட்ட பெண்கள். அவர்களில் சிலர் நினைவாற்றலை இழந்திருந்தனர். அவர்களுக்காக சிறப்பு உணவு தயாரித்து வழங்கப் பட்டது. அடுத்த நாள் உஷாவும் அருணும் தொழுநோயாளிகளின் வீட்டிற்குச் சென்று அவர்களுக்கு உணவு வழங்கினர். அவர்கள் கண்ணீர் மல்க தங்கள் நன்றியை தெரிவித்தனர். மற்றொரு நாள் உஷா, பிரவீன் கர்க் மற்றும் பிரிஜ் பார்மர் மனநலம் குன்றிய பெண்களை சந்தித்து அவர்களுக்கு ஸ்நாக்ஸ் மற்றும் ஐஸ் கிரீம் வழங்கினர். அவர்கள் ஆடிப் பாடி மகிழ்ந்தனர். காலையில் எங்களில் சிலர் நடைமற்றும் ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டோம். எங்களுக்கு இதற்கு ஏற்பாடு செய்த ராஜ்குமார் கண்டேலியா வழிகாட்டினார். அவரது பண்ணையையும் எங்களுக்கு சுற்றிக்காட்டினார்.

பலாசோர் ரோட்டேரியன்கள் ரோட்டரி கண் மருத்துவமனையை பார்க்க அழைத்துச் சென்றனர். எங்களுடன் Dr பார்மர் வந்தார். அந்த மருத்துவமனை மானியங்கள் ஏதும் இல்லாமல் ரோட்டேரியன் களால் நிறுவப்பட்டு நடத்தப் பட்டு வருவது அறிந்து வியப்படைந்தேன். எங்களுக்கு விருந்தோம்பல் செய்த குழுவின் தலைவர் IPDG சந்தனு பானி, ராஜ்குமார் கண்டேலியா உள்ளிட்டோர் அந்த மருத்துவ மனையை நிர்வகித்து வருகின்றனர்.

எங்கள் மருத்துவக் குழுவின் மூலம் 31 பிளாஸ்டிக், 120 கண் மருத்துவம், 13 காது, மூக்கு மற்றும் தொண்டை, 32 முடநீக்கியல், 91 பொது மருத்துவம், 58 மகப்பேறு மருத்துவம், 462 தோல் மருத்துவம் உள்ளிட்ட 810 அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. பாரிபடாவில் வெளிப்புற நோயாளிகளாக 4,000 பேர் இலவச சிகிச்சை பெற்றனர். அவர்களுக்கு மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. மருத்துவக் குழுவினரின் பணி திருப்திகரமாக நடந்துமுடிந்தது.




*பாரிபடா மருத்துவ முகாம் குழுவினர். PRIP சாபூ மற்றும் அவர் மனைவி உஷா அவர்களும் உடன் உள்ளனர்.*

எழுத்தாளர் ஒரு முன்னாள் RI தலைவர்.



கலை மற்றும் வரைதல்
வகுப்பில் மாணவர்கள்.

# பொகாரோ அருகிலுள்ள கிராமத்தை உருமாற்றும் ரோட்டேரியர்கள்

**ரஷீதா பகத்**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள எஃகு நகரமான பொகாரோவில் இருந்து சுமார் 30 கிமீ தொலைவில் உள்ள அல்கோரா என்ற கிராமத்தில் ரோட்டரி என்ற சொல் அனைவராலும் உச்சரிக்கபடுகிறது, அதற்கு காரணமான RC பொகாரோ ஸ்டீல் சிட்டிக்கு (RID 3250) நன்றி தெரிவிக்க வேண்டும். சுமார் 2,500 பேர் கொண்ட இந்த கிராமத்தை தத்தெடுக்க சங்கம் முடிவு செய்த 2017 முதல், சங்க உறுப்பினர்கள் இங்கு வழக்கமான பார்வையாளர்களாக இருக்கின்றனர். கிராமத்தில் பல ஞாயிற்றுக்கிழமைகளின் விடியல்கள் சங்கத்தின் ரோட்டேரியர்கள் குழந்தைகளுக்கு சிறிய விருந்துகளை கொண்டு வருவதில் தொடங்குகிறது!

அர்ப்பணிப்பு முயற்சிகள், கடின உழைப்பு, கவனம் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளின் காரணமாக, அல்கோரா இன்று ஐந்து வகுப்பறைகள் மற்றும் அதனுடன் சிரிக்கும் முகங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு ப்ளே ஸ்கூலை பெற்றுள்ளது. அதனுடன் சேர்த்து சங்கம் ஹோமியோபதி கிளினிக்கை நடத்தும் மற்றொரு அறையையும் நிறுவியுள்ளது. காய்ச்சல், வயிற்று வலி, மற்றும் பிற வலிகள் போன்ற எளிய நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக சங்கம் ஒரு மருத்துவரை நியமித்துள்ளது. இந்த கிளினிக்கால் வழங்கப்படும் ஆரம்ப சுகாதார சேவைகள் தவிர, கிராமவாசி களுக்கு பிற தீவிர நோய்கள் மற்றும் பொகாரோ நகரத்தில் குறிப்பிடப் படும் சில தீவிர மருத்துவ பிரச் சனைகளை கண்டறிய வழக்கமான மருத்துவ முகாம்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.ஹோமியோ கிளினிக் ஒவ்வொரு மாதமும் சுமார் 500–600 நோயாளிகளுக்கு மருத்துவ சேவையை வழங்குகிறது.



*அல்கோரா கிராமத்தில் RC பொகாரோ ஸ்டீல் சிட்டி அமைத்துள்ள ஹோமியோபதி சிகிச்சையகம்.*

78 உறுப்பினர்களைக் கொண்ட சங்கம் இந்த குறிப்பிட்ட கிராமத்தை ஏன் தத்தெடுக்க முடிவு செய்தது என்று சங்க செயலர் கன்ஷ்யாம் தாஸிடம் கேட்டதற்கு, 2017-ஆம் ஆண்டில், சங்கத்தின் தலைமை ஒரு கிராமத்தில் சில நலத் திட்டங்களைச் செய்ய முடிவு செய்தபோது அல்கோராவின் பஞ்சாயத்து தலைவரை அறிந்த உறுப்பினர்களில் ஒருவர், ரோட்டேரியர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து சமூக நல நடவடிக்கைகளை திட்டமிடலாம் என்பதற்காக இந்த கிராமத்தை தத்தெடுக்க பரிந்துரைத்தார்.

“முதலில், நாங்கள் ஒரு பள்ளியைக் கட்ட விரும்பினோம், பஞ்சாயத்து உறுப்பினர்கள் அதற்காக எங்களுக்கு அனுமதி அளித்து, ஒரு நிலத்தையும் கொடுத்தனர், அங்கு நாங்கள் ஆறு அறைகளைக் கட்டினோம். அதில் ஐந்து அறைகளை நாங்கள் பிளே ஸ்கூலுக்குப் பயன்படுத்துகிறோம், அங்கு நாங்கள் பி.எட் பட்டம் பெற்ற ஏழு ஆசிரியர்களை பணியில் அமர்த்தி அவர்களுக்கு நாங்களே சம்பளம் கொடுக்கிறோம். முன்னதாக இங்கு சுமார் 150 குழந்தைகள் வகுப்புகளில் கலந்து கொண்டனர். அங்கு அடிப்படை கல்வி மற்றும் நல்ல நடத்தை, நாகரீகமாக பேசும் விதம் போன்ற ஆரம்ப நடத்தைகள் கற்பிக்கப்பட்டன. ஆனால் கோவிட்க்குப் பிறகு, 130 குழந்தைகள் மட்டுமே திரும்பி வந்துள்ளனர்என்று அவர் கூறுகிறார்.

ரோட்டேரியர்களால் ஆஷா கி கிரண் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ப்ளே ஸ்கூலில் ஆங்கிலம் மற்றும் இந்தியில் எழுத்துக்கள், எண்கள் மற்றும் எண்ணுதல் போன்ற அடிப்படை எண்கணிதம்

கற்பிக்கப்படுகிறது என்று சங்கத் தலைவர் நிருபமா சிங் கூறுகிறார். குழந்தைகளுக்கு சீருடைகள், எழுதுபொருட்கள், புத்தகங்கள், தண்ணீர் பாட்டில்கள், காலணிகள் மற்றும் காலுறைகள் பரிசாக வழங்கப்படுகிறது.

பள்ளி, 30–35 மாணவர்களுக்கான வரைதல் மற்றும் கலை ஆகியவற்றில் மூன்று மாத படிப்பையும் நடத்துகிறது என்று தாஸ் கூறுகிறார். “ஓய்வு பெற்ற மற்றும் புகழ்வாய்ந்த கலை ஆசிரியர் மோகன் ஆசாத் இலவச சேவையாக மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கிறார். எங்கள் மாணவர்கள் நகரங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான போட்டிகளில் பங்கேற்கிறார்கள், மேலும் ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் பரிசுகளை வென்று எங்கள் சங்கத்தைப் பெருமைப்படுத்து கிறார்கள்.

பிறந்தநாள், திருமண நாள், பண்டிகைகள் போன்ற விசேஷ சமயங்களில் சங்க உறுப்பினர்கள் பணத்தை நன்கொடையாக வழங்குகிறார்கள் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில், இந்த பணம் குழந்தைகளுக்கு விருந்து கொடுக்க பயன்படுத்தப்படுகிறது, ரோட்டரியன்கள் அவர்களுக்கு தின்பண்டங்கள், பழச்சாறுகள், எழுதுபொருட்கள் போன்றவற்றை கொண்டு வருகிறார்கள்.

ப்ளே ஸ்கூல் வளாகத்தில் 15 முதியோர்களுக்கு மாலை வேளைகளில் எழுத்தறிவு வகுப்புகள் நடத்தப்படுகின்றன, “அவர்களுக்கு நாங்கள் அடிப்படைக் கல்வியை வழங்குகிறோம், இதன் மூலம் அவர்கள் தங்கள் பெயர்களில் கையெழுத்திடலாம், வங்கியில் தங்கள் கணக்கைத் தொடங்கலாம்




*DG சஞ்சீவ்குமார் தாகூர், அவர் மனைவி பூனம் மற்றும் சங்கத்தலைவர் நிருபமா சிங் ப்ளே ஸ்கூலில்.*



*கிராம பெண்களுக்கு எழுத்தறிவு வகுப்பு.*

மற்றும் அதை அவர்களே இயக்கலாம்'' என்று நிருபமா கூறுகிறார்.

சங்கம் 2,500-க்கும் மேற்பட்ட கிராமவாசிகளுக்கு வழக்கமான சுகாதார பராமரிப்பு மற்றும் சோதனை முகாம்களை ஏற்பாடு செய்கிறது. குழந்தை நல மருத்துவர், சங்க உறுப்பினர் டாக்டர் S C முன்ஷி திட்டமிட்டு நடத்தும் இந்த முகாம்களில் இருதயம், கண் மருத்துவம், பல் மருத்துவம், மகளிர் மருத்துவம், தோல் மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் இருந்து அவருக்குத் தெரிந்த சுமார் 10 நிபுணர்கள் கிராம மக்களைச் சோதனை செய்து ஒரு மாத காலத்திற்கான மருந்துகளை வழங்குகிறார்கள். தீவிர நோய் உள்ளவர்கள் அல்லது அறுவை சிகிச்சை தேவைப்படுபவர்கள் பெரிய மையங்களுக்கு அனுப்பப் படுகிறார்கள்.

சிலர் வேலை தேடி நகரங் களுக்குச் சென்றாலும், பெரும் பாலான கிராமவாசிகள், ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் நிலத்துடன் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தானியங்கள் மற்றும் கரும்புகளை பயிரிடுகின்றனர். விவசாயத்திற்கான நீர் ஆதாரங் களுக்கு ரோட்டேரியர்கள் உதவு வதைப் பற்றி கேட்டதற்கு, கிராமத்தில் போதுமான தண்ணீர் உள்ள குளம் உள்ளது. அரசு பல பகுதிகளில் கை குழாய்களை அமைத்துள்ளது, எனவே கிராம மக்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்கு தண்ணீர் பிரச்சினையை எதிர் கொள்வதில்லை. எங்கள் பள்ளியில் குழாய் நீர் இணைப்பு கொடுத்துள்ளோம். மேலும் சிறுவர், சிறுமியருக்கு தனித்தனி கழிப் பறைகள் கட்டியுள்ளோம்'' என்று தாஸ் கூறினார்.

இத்திட்டத்தின் வெற்றிக்காகவும், கிராமத்தின் வளர்ச்சிக்காகவும், இந்தக் கிராமத்தை தத்தெடுத்த 2017ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாகவும், சுமூகமாகவும் நடந்து வரும் நடவடிக் கைகளுக்கு மூலக்காரணமாக அல்கோரா திட்டத்தின் நான்கு தூண்களான எங்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் அசோக் தனேஜா, ஜெய்வந்த் ஷெத், அசோக் ஜெயின் மற்றும் PA ஜக்காரியா ஆகியோரை கருதுகிறேன் என்கிறார் தாஸ். கடந்த ஆறு ஆண்டுகளில், இந்த கிராமத்தை மேம்படுத்துவதற்கு சங்கம் சுமார் 10 லட்சம் ரூபாய் திரட்டி செலவு செய்துள்ளது. யூனியன் வங்கியும் இந்த கிராமத்தில் நலன்புரி நடவடிக்கைகளுக்கு அதன் CSR நிதிகள் மூலம் உதவுகிறது.

எதிர்காலத் திட்டங்கள் பற்றி கூறுகையில், சங்க உறுப்பினர்கள் அல்கோராவில் தங்கள் கால்தடத்தை நீட்டிக்க விரும்புகிறார்கள் என்று அவர் கூறுகிறார். இப்போது நம்மிடம் இருப்பது ஒரு ப்ளே ஸ்கூல் மட்டுமே; மெதுவாக நாங்கள் 1 மற்றும் 2ஆம் வகுப்புகளைச் சேர்க்க விரும்புகிறோம். இப்போது குழந்தைகள் அருகிலுள்ள கிராமத்தில் உள்ள பள்ளிக்குச் செல்கிறார்கள். சமீபத்தில், எங்கள் DG சஞ்சீவ் குமார் தாக்கூர் இந்த கிராமத்திற்குச் வந்த போது, நாங்கள் சீருடைகளை விநியோகித்தோம் மற்றும் கொய்யா மற்றும் மா போன்ற பழ மரங்களை நட்டோம். அடிக்கடி மரங்களை நடுவதன் மூலம் இப்பகுதியை பசுமையாக்குவது எங்களின் மற்றொரு வழக்கமான செயலாகும்.■

விளம்பரம்



**Prachi & Pawan Agarwal**
District Governor, RID 3110

# District 3110

## Global Grant Projects

It's a matter of great pride for our District that our clubs have got approval for 6 Global Grants this year so far, worth Rs 2 Crores. The list of approved Global Grant Projects is as under:"

**Details of Approved Global Grants**

| Srl. | Host Club | Project Title | Project Cost ($) |
|---|---|---|---|
| 01 | RC Nainital | Provide & upgrade Medical Equipment at Indersheel Charitable Hospital for Comminities of Mehragaon & Bhimtal | 38,131 |
| 02 | RC Mathura Central, Aligarh Central, Bareilly Heights, Kanpur & Kashipur | Cervical Cancer Awareness, Screening and Pre-Cervical Cancer Lesion Treatment Camps. | 30,038 |
| 03 | RC Rudrapur | Establishing a center for the affordable treatment of Varicose Veins & Diabetic Foot Ulcer disease | 38,500 |
| 04 | RC Kanpur Metro | Providing advanced opthalmic equipment for eyecare services at Dr. JLRM Eye Hospital, Kanpur | 30,000 |
| 05 | RC Bareilly South | Promoting education by facilitating multi-purpose activities area at Rotary Public School, Bareilly | 35,500 |
| 06 | RC Agra Sapphire | Providing advanced medical equipment at SSB Trauma Centre, Firozabad, UP, India | 76,829 |
| | | TOTAL | 2,48,998 |

## CSR Projects

Our District has done 12 CSR projects in the current year with a total investment of more than Rs 5.5 Crores. The list of CSR projects done so far is as below :

| Srl | PROJECT TITLE | Total Cost (INR) | Total Cost (USD) |
|---|---|---|---|
| 1 | Donation of E-Tablets to meritorious Class 9th girl student of Govt. School | 79,79,000 | 1,01,000 |
| 2 | Complete modernization of three Govt. schools under CSR | 79,79,000, | 1,01,000 |
| 3 | Complete transformation of Govt. Primary School, Harinagar, Kashipur under CSR by "Andritz" | 31,60,000 | 40,000 |
| 4 | Upgradation of existing NBSU to SNCU at L.D. Bhatt Sub district Hospital, Kashipur by KVS | 26,07,000 | 33,000 |
| 5 | Providing medical equipments for diagnosis of Cancer at SSB Trauma Center, Firozabad | 1,05,26,320 | 1,31,579 |
| 6 | Providing advance Eye care, ENT and ICU equipments at L. D. Bhatt Sub Distt. Hospital, Kashipur, Uttarakhand | 26,50,000 | 33,125 |
| 7 | *Establishment of Computer Labs in 8 Schools of Kashipus* | 25,01,000 | 30,500 |
| 8 | "Supporting free of Cost Pediatric Cardiac Procedures of 35 needy children at Palwal, Haryana | 47,89,474 | 58,408 |
| 9 | Sponsoring Free of Cost Pediatric Cardiac Procedures of 15 needy children at SSS Sanjeevani Hospital, Palwal, Haryana | 20,52,632 | 24,731 |
| 10 | Providing quality open care incubators to ensure better new born child healthcare at various hospitals | 82,33,227 | 1,00,405 |
| 11 | Establishment of Computer Labs in six schools by Valmet Technologies Private Ltd. | 26,52,631 | 32,349 |
| 12 | Establishment of Computer Labs in Four Schools by Sidharth Papers Private Ltd. | 17,47,369 | 21,052 |
| | TOTAL | 5,68,77,653 | 7,07,149 |

Do follow us: @Rotary3110

Advt

# District 3110 in ACTION



Distribution Nutrition Kits to TB Patients




Wheel Chairs Distribution



Dental Check-up Camp



Food Items Distribution



Cemented Seats Installation at TB Hospital



School Furniture Distribution



Installation of Water Tanks



Awareness regarding Distribution of Artificial Limbs



**Rtn. Raj Mehrotra**
CDS (Admin)

*Congratulations*



***PDG Devender Kr. Agarwal***
ARRFC



***PDG Sharat Chandra***
DRFC


## Major Donors



*Congratulations*

**Rtn Umesh Gupta & Rtn Meera Gupta**

RC Agra & RC Agra Royal



*Congratulations*

**Rtn Ram Sharan Mittal**

RC Agra

# ரேகா ஷெட்டி: என்றும் புன்னகைக்கும் தலைவர்

சேகர் மேத்தா



*இந்தூர் மாநாட்டில் அப்போதைய* RI *தலைவர் மார்க் மலோனி,* PRIP *சேகர் மேத்தா,* TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யா, மற்றும்* PRID *கமல் சங்வி ஆகியோருடன்* PDG *ரேகா ஷெட்டி.*

கடந்த மார்ச் 28 ஆம் தேதி ரோட்டரி உலகம், அதன் ஒளிரும் நட்சத்திரங்களில் ஒருவரான PDG ரேகா ஷெட்டி மறைந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டு அதிர்ச்சியில் ஆழ்ந்தது. அந்த துயரச் செய்தியை நம்பமுடியவில்லை என்றாலும் அது உண்மையானது. சமூக ஊடகங்களில் ரேகாவை பற்றிய செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. எப்போதும் ஒரு புன்னகை, கருணை, அன்பு, அக்கறை மற்றும் ரோட்டரி பற்றிய சிந்தனையுடன் இருந்த ஒருவரின் மறைவு பொதுவாக ரோட்டரி உலகிற்கும் குறிப்பாக, இந்திய ரோட்டரிக்கு பேரிழப்பாகும்.

ரேகா ஷெட்டி மறைவு செய்தி கேட்டு நானும் ராஷியும் மனம் உடைந்துபோனோம். ரேகாவையும் அவர் கணவர் ஜெய்யையும் எங்களுக்கு 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தெரியும். நாங்கள் இருவரும் ஒரே ஆண்டில் (1999–2000) மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பட்டோம். நாங்கள் முதன் முதலாக கொல்கத்தாவில் சந்தித்தது எனக்கு பசுமையாக நினைவுக்கு வருகிறது. எனது மாவட்டம், நகரில் நடைபெற்ற GETS கூட்டத்தில் பங்கேற்க அவர் வந்திருந்தார். நாங்கள் நல்ல நண்பர்களானோம். அந்த உறவு ஆண்டாண்டு காலமாக நீடித்து வந்தது.

அப்போதைய ரோட்டரி தலைவர் கேப்டன் கார்லோ ரவிஸ்ஸாவின் குழுவில் இடம் பெற்ற நட்சத் திரங்களில் ரேகாவும் ஒருவராக இருந்தார். உலகில் மாற்றங்களை கொண்டு வருவதற்காக வித்தியாசமான சிந்தனை அவரிடம் இருந்தது. தலைமைப் பதவிகளை ஏற்று சிறப்பாகச் செயல்படும் குணம் அவரிடம் பிறவியிலேயே இருந்து வந்தது.

மாவட்ட ஆளுநர் பதவிக்குப் பின் ரேகாவின் சேவை அந்த பிராந்தியத்துக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் விரிவடைந்த்து. பெல்லோஷிப், ரோட்டரி செயல்குழு, பிராந்திய தலைமைப் பதவி, சர்வதேச குழுவின் உறுப்பினர் பதவிகளை வகித்துள்ளார். இந்தியா மற்றும் வெளிநாட்டு அளவில் மிகப் பிரபலமான ரோட்டேரியனாக அவர் திகழ்ந்தார்.

ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தின் ஆஷா கிரண் திட்டத்தில் ரேகாவுடன் சேர்ந்து பணியாற்றிய அனுபவம் எனக்கு உள்ளது. ஆஷா கிரண் திட்டத்துக்கான சின்னத்தை உருவாக்கி அதை சென்னையில் நடைபெற்ற

மாநாட்டில் வெளியிட்டார். தனது தலைமையின் கீழ் ரோட்டேரியன்களை ஊக்கப்படுத்தி இந்தியா முழுவதும் 50,000-த்துக்கும் மேலான குழந்தைகள் பள்ளி செல்ல அவர் காரணமாக இருந்தார்.

ஒரு முறை அவரை நாங்கள் விருந்துக்கு அழைத்திருந்தோம். எங்கள் வீட்டிற்கு வந்திருந்த அவர், எனது தயாரிடம் அன்புடன் பழகினார், பேசினார். எனது தயாரும் அவரை நேசித்தார். பொதுவாக எல்லோரையும் கவரும் வசீகர சக்தி அவரிடம் இருந்தது. சமூக வலைத்தளங்களில் அவருக்கு வந்து குவிந்த அஞ்சலி செய்திகளே ரோட்டேரியன்கள் மீது அவர் எப்படி அன்பு செலுத்தி பழகினார் என்பதற்கு சான்றாகும்.



PRIP *மேத்தா மற்றும் ராஷியுடன்* PDG *ரேகா.*

ரோட்டரிக்கு ரேகா அளித்த பங்களிப்புக்கு மேலாக ஒரு திறமையான எழுத்தாளராகவும் அவர் திகழ்ந்தார். அவர் எழுதிய The Ultimate Competitive Advantage and The Happiness Quotient ஆகிய புத்தகங்கள் வாசகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

ஒரு அர்ப்பணிப்புள்ள ரோட்டேரியனாக ரேகா இருந்தார். ரோட்டரியின் இலட்சியங்களை தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கையிலும் கடைப்பிடித்தவர். சேவையின் பாரம்பரியத்தை அவர் விட்டுச் செல்கிறார். வருங்கால சந்ததியினர் அவற்றை தொடர இது ஊக்கமளிக்கும். அவரது அன்பு, கருணை மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் அவரது ஆர்வத்தை ஒருபோதும் மறக்க முடியாது.

இந்த துயரமான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆன்மா சாந்தி அடையட்டும்.

எழுத்தாளர் ஒரு
முன்னாள் RI தலைவர்.

# RI தெற்காசிய அலுவலுகத்தின் செய்தி

**_Rotary.org_ வழியாகச் செய்யப்படும் ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) பங்களிப்புகளுக்கான வழிகாட்டுதல்கள்**

- மாற்று ID உருவாக்கத்தைத் தவிர்க்கவும், உங்கள் சங்கத்தின் கீழ் உங்கள் பங்களிப்புக்குச் சரியான நேரத்தில் அங்கீகாரம் பெறவும், என் ரோட்டரி உள்நுழைவைப் பயன்படுத்துங்கள்
- என் ரோட்டரி உள்நுழைவு இல்லாவிட்டால், அதை உருவாக்குங்கள், அல்லது, இணையத்தில் பங்களிக்கும்போது, உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துங்கள்
- குடும்ப அறக்கட்டளை/நிறுவனத்திலிருந்து பங்களிப்புகளைச் செய்யும்போது, RISAOக்குக் காசோலை/வங்கி வரைவோலை அனுப்புங்கள். என் ரோட்டரி வழியாக இந்தப் பங்களிப்புகளைச் செய்யவேண்டாம்
- சமர்ப்பித்தலைக் கிளிக் செய்யுமுன், உங்கள் PANI மீண்டும் உறுதிப்படுத்துங்கள் அப்போதுதான் உங்கள் 80G ரசீதில் PAN சரியாகக் குறிப்பிடப்படும்
- அனைத்து இணையப் பங்களிப்புகளுக்கும், பங்களிப்பைச் செய்ய யாருடைய என் ரோட்டரி உள்நுழைவு பயன்படுத்தப்பட்டதோ அவருடைய பெயரில்தான் 80G ரசீது உருவாக்கப்படும்.

**ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும்**

ரோட்டரியன்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆண்டும் ஆண்டு நிதிக்கு ஒரு தனிப்பட்ட பரிசை வழங்கவேண்டும், ஒவ்வோர் ஆண்டும் ஓர் அறக்கட்டளை நல்கை அல்லது திட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆண்டு நிதிதான் TRFன் செயல்பாடுகளுக்கான நிதிக்கு முதன்மை மூலம். ரோட்டரியன்கள் தங்களுடைய சமூகங்களை மேம்படுத்துவதற்கான பலவிதமான உள்ளூர் மற்றும் பன்னாட்டுத் திட்டங்களை நடத்த இந்தப் பங்களிப்புகள் உதவுகின்றன.

EREY சிற்றேட்டைத் தரவிறக்க, இந்த இணைப்பைப் பயன்படுத்துங்கள்: *https://my.rotary.org/en/document/every-rotarian-every-year-brochure*

ஒவ்வோர் ஆண்டும், EREYல் மிகச் சிறந்த வழங்குதலை (ஒவ்வொருவருடைய குறைந்தபட்ச ஆண்டு நிதிப் பங்களிப்பு 100, ஆண்டு நிதிக்கு ஒவ்வோர் உறுப்பினருடைய குறைந்தபட்சப் பங்களிப்பு 25) எட்டுகிற சங்கங்களுக்கு, “100% ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும்'' சங்கம் என்கிற பதாகை வழங்கப்படும். நடப்பு ரோட்டரி ஆண்டில் உங்கள் சங்கம் இந்தப் பதாகையைப் பெற உதவுங்கள். ■

# மும்பையில் பார்வையற்றோருக்கான ஒரு சினிமா விருந்து

**ரஷீதா பகத்**

ஊனமுற்றோருக்காக பணிபுரிபவர்களின் விடாமுயற்சியின் காரணமாக, பார்வையற்றவர்களுக்கு வாசிப்பு மற்றும் ஆடியோ உபசரிப்புகள் கிடைக்க பெற்றன, ஆனால் காட்சி விருந்துகள் அவர்களுக்கு மிகவும் குறைவாகவே உள்ளன. நமது நாட்டில் சமூக-பொருளாதாரத்தின் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் உட்பட மக்கள் அனைவருக்கும் அடிப்படையான பொழுதுபோக்கு திரைப்படங்களைப் பார்ப்பது. ஆனால் இந்த எளிய இன்பம் பார்வையற்றவர்களுக்கு பொதுவாக மறுக்கப்படுகிறது. தியேட்டருக்குச் செல்வது நம் சமூகத்தின் ஒரு அங்கமாகும், ஏனெனில் இது ஒரு வேடிக்கையான குழு நடவடிக்கையில் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பழகுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது, என்கிறார் RC நவி மும்பை சன்ரைஸ், RID 3142இன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சஞ்சய் பனிகிரஹி.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சங்கத்தின் முன்னாள் தலைவர் பிரகாஷ் கக்கடே, தனது பதவிக்காலத்தில் சில பார்வையற்ற இளைஞர்களை மும்பையில் உள்ள ஒரு திரையரங்கிற்கு அழைத்து சென்று சினிமா அனுபவத்தை வழங்க நினைத்தார். இதன் அடிப்படையில் சங்கம் ‘விஸ்பரிங் சினிமா’ என்ற தலைப்பில் ஒரு திட்டத்தைத் தொடங்கியது. சினிமா அனுபவத்திற்காகச் செல்லும் பார்வையற்றவர்களில் இரண்டு அல்லது மூன்று பேர் ஒரு கிசுகிசுப்பவருக்கு இடையில் அமர்த்தபடுவர், திரைப்படம் ஓட, திரையில் உள்ள காட்சிகளின் விவரங்களைத் தனது தோழர்களிடம் அவர்கள் கிசுகிசுப்பார்கள், இதனால் அவ்வாறு அது பெயரிடப்பட்டது.

ஆனால் அந்த அனுபவம், சுமார் 60 நபர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தாலும், இந்தப் அனுபவத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதனை முழுமையாக அனுபவித்தனர். சில மாதங்களுக்கு முன்பு, கக்கடே மற்றும் தற்போதைய சங்கத்தலைவர் மனோஜ் நாயக்கின் வழிகாட்டுதலின் படி, சங்கம் அதை பெரிதாக்க முடிவு செய்து, நவி மும்பையில் பாலாஜி மல்டிபிளெக்ஸில் அமிதாப்பச்சன் முக்கிய பாத்திரத்தில் நடிக்கும் ஊஞ்சாய் திரைப்படம் ஓடும் ஒரு முழு திரைப்பட அரங்கையும் முன்பதிவு செய்தது. பார்வையற்றோருக்கான முன்னணி கல்வி நிறுவனங்களான பார்வையற்றோருக்கான தேசிய சங்கம், ஹெலன் கெல்லர் மற்றும் ஆறு அறக்கட்டளைகள் மற்றும் தன்னார்வ தொண்டு

*இந்தி படம் ‘ஊஞ்சாய்’–யை பார்த்து ரசிக்க தயாராக உள்ள குழந்தைகள்.*





நிறுவனங்களைச் சேர்ந்த 167 பார்வையற்றவர்கள், அவர்களின் தன்னார்வலர்களுடன் சேர்ந்து, “விஸ்பரிங் சினிமா” அனுபவத் திற்காக ரோட்டேரியர்களால் அங்கு வரவழைக்கப்பட்டனர்.

இந்த குறிப்பிட்ட தியேட்டர் வளாகம் தேர்ந்தெடுக்கப்பட்டது ஏன் என்று பனிகிரஹி கூறுகையில், உரிமையாளர் எங்களுக்குத் தெரிந்தவர் மற்றும் நாங்கள் அதை ஒரு தொண்டு நிகழ்வுக்கு பயன் படுத்த விரும்பியதால், அதை எங்களுக்கு இலவசமாக வழங்க அவர் கருணையுடன் ஒப்புக்கொண்டார். பார்வை யற்றவர்களுக்கும், அவர்களின் நிறுவனங்களால் நியமிக்கப்பட்ட தன்னார்வலர் களுக்கும், அவர்களின் சொந்த ஆசிரியர்களுக்கும் ஆடம்பரமான காலை உணவு, பாப்கார்ன் மற்றும் குளிர்பானங்கள் போன்ற சிற்றுண்டிகளை வழங்க நாங்கள் சுமார் 60,000 ரூபாய் செலவிட்டோம்.

RID 3142 DG கைலாஷ் ஜெதானி உட்பட ரோட்டேரியர்கள் சங்கம் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு நலத் திட்டங்களைப் பற்றி பார்வையாளர்களுக்கு எடுத்துரைத்தார்கள் மேலும் பார்வையற்றவர்களுடன் சேர்ந்து திரைப்படத்தைப் பார்த்து ரசித்தனர். மேலும் 11–35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் எவ்வளவு பேர் பாலிவுட்டின் முன்னணி ஐகான் அமிதாப் பச்சன் ஹீரோவாக நடித்த அந்த திரைப்படத்தை ரசித்தார்கள் என்பதை அவர்கள் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். நிச்சயமாக அமிதாப் பச்சனின் நேர்த்தியான கணீர் குரல் ஒரு திரைப்படத்தைப் பார்க்கும் காட்சி இன்பத்தை சிறிதளவாவது ஈடு செய்திருக்கும்.

நிகழ்ச்சி முடிந்ததும் பார்வை யாளர்கள் அனைவருக்கும் மதிய உணவு பொட்டலம் வழங்கப்பட்டது. பார்வையற்றோருக்கான அவர்களின் திட்டமான, விஸ்பரிங் சினிமா நிகழ்வுக்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு, 80 உறுப்பினர்களைக் கொண்ட அந்த சங்கம், அதன் உறுப்பினர்களிடமிருந்து மேலும் நன்கொடை பெற்று, ரூ.3500 மதிப்பிலான 25 அலெக்சா சாதனங் களை 25 பார்வையற்றவர்களுக்கு பரிசாக அளித்தது.

திரைப்படத்திற்குப் பிறகு, மற்றவர்களுக்கு கணினி அறிவியலைக் கற்பிக்கும் பார்வையற்ற மூன்றாம் ஆண்டு பிஏ மாணவர் ரமேஷ், முழு அனுபவமும் தனக்கு மிகவும் பிடித்திருந்ததாக கூறினார். வெளிப்படையாகச் சொன்னால், நான் மற்ற பார்வையற்றவர்களுடன் விஸ்பரிங் சினிமா விருந்துக்காக அழைத்துச் செல்லப்பட உள்ளதாக அவர்கள் என்னிடம் சொன்னபோது, அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அதனால் நான் அதை ஆராய்ச்சி செய்தேன், பின்னர் திரைப்படத்திற்கு செல்ல ஆர்வமாக இருந்தேன். அதிர்ஷ்டவசமாக, எனக்கு காட்சி களை விளக்கிக் கொண்டிருந்தவர் என்னுடைய நல்ல நண்பர், மேலும் அவர் எனக்கு என்ன வகையான வர்ணனை கொடுக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தார். எனவே படத்தை முழுமையாக ரசிக்கத் தேவையானதை நான் சரியாகப் பெற்றேன். இந்த அனுபவத்தை எங்களுக்கு வழங்கிய பிரகாஷ் சாருக்கு எனது நன்றிகள் என்றார்.

DG ஜெதானி, RC நவி மும்பை சன்ரைஸை அதன் புதுமையான முயற்சிக்காகப் பாராட்டினார். இந்த முயற்சி சமூகத்தில் ஒற்றுமை தன்மையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கும், மேலும் இது RI-இன் DEI மந்திரத்தின் இன்றியமையாத அங்கமாக இருக்கும்.■

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரி அமைதிப் பணியில் கேரளத்திலிருந்து லடாக் வரை

கிரண் ஜெஹரா




இடமிருந்து: *லியோ ஜோஸ், பைஜு சாக்கோ, ஆனந்த் தெக்கேகரா, எல்தோ ஜேகப், சங்கத்தலைவர் டோஜோ ஜோஸ், ஜிம் ஜோஸ் மற்றும் சுனில் வர்கீஸ் ஆகியோர் லடாக்கில்.*

கதக்களி, சுவையான கறிமீன் மற்றும் எழுத்தறிவு அதிகம் உள்ள மாநிலம் என்ற வகையில் கேரளத்தைவிட சிறந்த இடம் ஏதுமில்லை என்ற எண்ணம் மலையாளி என்ற வகையில் என்னிடம் உண்டு என்கிறார் RID 3201-க்கு உட்பட்ட அங்கமல்லி ரோட்டரி சங்கத்தின் தலைவர் டோஜோ ஜோஸ். கேரளத்தின் அங்கமல்லியிலிருந்து லடாக்கில் லே வரையிலான 21 நாள் ரோட்டரி அமைதிப் பேரணியை ஜோஸ் மற்றும் ஏழுபேர் பூர்த்தி செய்துள்ளனர். இவர்களது பேரணியை DG ராஜ்மோகன் நாயர் கொடியசைத்து தொடங்கிவைத்தார். பேரணியின் இரண்டாவது நாளில், கர்நாடக எல்லைக்குள் சில மைல்கள் கடந்த நிலையில் பரந்த வயல்வெளிகள், தென்னந்தோப்புகள், கண்கவர் கிராமங்களை பார்வையிட்டோம். அவை எங்களது சொந்த ஊரைப்போலவே அழகாக இருந்தது. சாலையோர உணவு விடுதியில் நெய் மசால்தோசையை சாப்பிட்டோம். கறிமீனைவிட நல்ல சுவையுடன்

இருப்பது போல் உணர்ந்தோம். இந்த பேரணி எனது சார்பு நம்பிக்கைகளிலிருந்து என்னை அசைத்து மற்ற கலாசாரங்கள் மீது மரியாதையையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்தியது.

3,400 கி.மீ. தொலைவிலான பேரணிப் பாதையில் நெடுஞ்சாலைகளையும், ஊரகப்பகுதிகளையும் கடந்து சென்றோம். வழியில் புதிய நிலப்பரப்புகளையும், மக்களையும் பார்வையிட்டது புதிய அனுபவமாக இருந்த்து. நான்கு ரோட்டரி சங்கங்களுக்குச் சென்று கொடிகளை பரிமாறிக் கொண்டோம். ரோட்டரி நாடு முழுவதும் செய்து வரும் சேவைகளை நேரில் கண்டோம். அந்த திட்டங்களால் ஈர்க்கப்பட்ட நாங்கள், திரும்பி வந்ததும் சமூகத்துக்கு மேலும் உதவிகள் செய்ய முடிவு செய்தோம் என்றார் ஜோஸ்.



கோரக்பூரில்.

குஜராத்தில் சர்தார் வல்லபபாய் படேலின் சிலையை பார்வையிடச் சென்றோம். கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து கட்டப்பட்ட சர்தார் படேலின் மிக உயரமான சிலையைக் கண்டு நாங்கள் வியப்படைந்த போதிலும், சுற்றுப்புறங்கள் மற்றும் கழிவறைகள் பராமரிக்கப்படாமல் மிக மோசமாக இருந்தது எங்களுக்கு பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. சுற்றுலாப்பயணிகளும் பார்வையாளர்களும் அதிகம் வரும் இடம் முறையாக பராமரிக்கப்படாமல் இருப்பது வேதனை அளித்தது என்றார் ஜோஸ்.

ரோட்டேரியன்கள் மலபார் மசாலா தேநீருக்காக ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில் அமிருதசரஸின் புறநகர் பகுதியில் உள்ள ஒரு தாபாவில் எங்கள் கார் நின்றது. தாபா உரிமையாளர் மலபார் மசாலா தேநீர் தயாரிக்க எங்களை அனுமதித்ததுடன், அதை ரசித்துக் குடித்தார். உடனடியாக மசாலா தேநீரை எப்படி சுவையாக தயாரிப்பது என்று கேட்டு அதை தங்கள் மெனு பட்டியலில் சேர்த்துவிட்டார் என்று ஜோஸ் புன்னகையுடன் குறிப்பிட்டார்.

லடாக்கில் இந்திய-பாகிஸ்தான் எல்லை கட்டுப்பாட்டு கோட்டின் அருகே துர்டுக் அருகே உள்ள கிராமத்தில் மக்களின் வாழ்க்கை முறை எங்களை மிகவும் கவர்ந்தது. கார், நவீன வசதிகளுடன்கூடிய வீடுகளாக அவை இல்லாவிட்டாலும் சிறிய சமையலறை, தோட்டத்துடன் அமைந்திருந்தது. தன்னுடைய வாழ்க்கை முறைக்கும் அவர்களின் வாழ்க்கை முறைக்கும் உள்ள வித்தியாசத்தை அவர் பிரதிபலித்தார்.

அந்த கிராமத்திலுள்ள மிகப்பெரிய சவால்களில் ஒன்று குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பது. அவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் இல்லை. இங்கு எழுத்தறிவு திட்டத்தைச் செயல்படுத்தினால், அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் கிராம மக்களின் வாழ்க்கையிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ரோட்டரி அமைதிப் பேரணியானது தங்கள் சங்கத்தினர் சௌகரியமான வாழ்க்கையிலிருந்து வெளியே வந்து புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, மற்றவர்களின் நம்பிக்கையை பெறுவதற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்ததாக அவர் குறிப்பிட்டார். இந்த அனுபவம் எங்களிடம் நெருக்கத்தை ஏற்படுத்தியது என்றும் அவர் கூறினார்.■



ஹரியானாவில் ஒரு குருத்வாராவின் முன்.

# பொன்விழா கொண்டாடும் RC SPIC நகர்

V முத்துகுமரன்

RC SPIC நகர், RID 3212ன் பொன்விழா ஆண்டைக் கொண்டாடும்வகையில் நடைபெற்ற நிகழ்வுகளின்போது, DG VR முத்து, முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் முன்னிலையில் PRIP சேகர் மேத்தா கை, கால் அகற்றப்பட்ட 110 பேருக்குச் (பெரும்பாலும் நீரிழிவு நோயாளிகள், விபத்தால் பாதிக்கப் பட்டவர்கள்) செயற்கைக் கை, கால்கள், கேலிப்பர்கள், ஊன்று கோல்களை வழங்கினார். பின்னர், பலன் பெற்றோருடன் பேசிய மேத்தா, தமிழ் நாட்டின் தெற்குக் கடலோர மாவட்டமான தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களில் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப் பட்டவர்கள் கடினமான வாழ்வை எதிர்கொள்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு வருந்தினார்.

இந்தச் சங்கம் “2015லிருந்து செய்து வருகிற” இத்திட்டத்துக்கென கூட்டாளர் சங்கங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்குப்பதில், தாங்களே




**மேலே:** PRIP *சேகர் மேத்தா, ஒரு பெண்ணிற்கு செயற்கை கால் வழங்குகிறார். உடன்* PDGs S P *ஷேக் ஸலீம்,* B *ஆறுமுகப்பாண்டியன்,* SPIC *இயக்குனர்* S R *ராமகிருஷ்ணன் மற்றும்* RC SPIC *நகர் தலைவர் அருண் ஜெயகுமார் ஆகியோரும் உள்ளனர்.*

**கீழே:** *மாணவர்களுடன் (இடமிருந்து)* RC SPIC *நகர் செயலாளர்* A *சரவணகுமார்,* DG V R *முத்து,* PRIP *மேத்தா, சங்கத்தலைவர் ஜெயகுமார் மற்றும் துணை ஆளுநர்* R *ராதாகிருஷ்ணன்.*



செயற்கைக் கை, கால்களை உருவாக்கி வழங்கும் மையம் ஒன்றைத் தொடங்கவேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். “செயற்கைக் கை, கால்களைப் பெற்ற அனைவருக்கும் கேலிப்பர்கள் அல்லது ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டன” என்றார் சங்கத் தலைவர் அருண் ஜெயக்குமார். இந்தச் சங்கம் 1990லிருந்து கேலிப்பர்களைத் தொடர்ந்து வழங்கிவருகிறது என்றும் அவர் கூறினார். “நாங்கள் RC கோயம்பத்தூர் மிட்-டவுனுடன் இணைந்து நடத்திய சிறப்பு முகாம்களில் இதுவரை சுமார் 250 செயற்கைக் கை, கால்களை வழங்கியிருப்போம். இந்த ஆண்டு, நாங்கள் செயற்கைக் கை, கால் வழங்கலுக்கு RC திருப்பூர் ஈஸ்ட்-உடன் இணைந்துள்ளோம்.”

தூத்துக்குடியில் வயது வந்தோர் எழுத்தறிவுபற்றிய ஒரு கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று மேத்தா அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, “நாங்கள் மாவட்டக் கல்வி அலுவலர்களைத் தொடர்பு கொண்டுள்ளோம், வயது வந்த, எழுதப் படிக்கத் தெரியாத வர்களுடைய தரவுத்தளத்தை உருவாக்கும் எங்கள் முயற்சி களை ஆதரிப்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளார்கள்.”

### முதன்மைத் திட்டங்கள்

2012ல், இந்தச் சங்கம் மூன்று அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 30 கிராமப்புற மாணவர்களைத் தத்தெடுத்தது, உணவு, உடை, தூய்மைப் பொருட்கள், புத்தகங்கள், எழுது பொருட்கள், சீருடைகள் போன்ற பள்ளிப் பொருட்கள் உள்ளிட்ட அவர்களுடைய மாதாந்திரத் தேவைகளுக்கு உதவிவருகிறது. “தீபாவளி, பொங்கல் போன்ற திருவிழாக்களின்போது நாங்கள் அவர்களுக்குப் புதிய உடைகள், இனிப்புகள் அளிக்கிறோம், மகிழ்ச்சியான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்துகிறோம்.”

இவர்கள் சென்னை அப்போலோ சிறுவர் மருத்துவமனையுடன் இணைந்து நடத்துகிற தங்க இதய முகாம் திட்டத்தின்கீழ் இதுவரை 89 குழந்தை இதய அறுவைச் சிகிச்சைகள் இலவசமாகச் செய்யப் பட்டுள்ளன. “இதுவரை, 7 இதயப் பரிசோதனை முகாம்களில் 450 குழந்தைகள் பரிசோதிக்கப் பட்டுள்ளார்கள். இந்த ஆண்டு, 23 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது, இன்னும் 5 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படவுள்ளது. “10 உண்டுறை RYLAக்களின் மூலம் சுமார் 600 கல்லூரி மாணவர்கள் பலன் பெற்றுள்ளார்கள். மாணவர்கள் அவரவர் இடத்திலிருந்து பங்கு பெற்ற 80 RYLAக்கள் ஒவ்வொன்றிலும் 130லிருந்து 140 கல்லூரி மாணவர்கள் பலன் பெற்றுள்ளார்கள்.

ஸ்ரீகாமாட்சி வித்யாலயா மெட்ரிக் HS பள்ளி மற்றும் SPIC நகர் HS பள்ளியில் இரண்டு இன்டராக்ட் சங்கங்களும், SPIC நகர் ரோட்டராக்ட் சங்கமும் இந்தச் சங்கத்தால் ஆதரிக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞான ரதம் (5,000 மாணவர் களுக்குப் பலன் தந்த அறிவியல் கண்காட்சி வேன்), பஞ்ச் திட்டம் (740 B.Ed பயிற்சியாளர்களுக்கு ஆங்கிலப் பேச்சு கற்றுத்தர ஏழு பயிலகங்களை நடத்தப்பட்டன), கலாம் திட்டம் (இதுவரை, 10ம் வகுப்பிலிருந்து 12ம் வகுப்புவரை பயிலும் 1,400க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பணிவாழ்க்கை அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன) போன்ற மாவட்டத் திட்டங்களில் இச்சங்கம் பங்கேற்றுள்ளது. “யாதுமானவள் திட்டத்தின் முதல் நிகழ்வை நாங்கள் விரைவில் நடத்தவுள்ளோம்” என்கிறார் ஜெயக்குமார்.

மேத்தா, முத்து இருவரும் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், வழங்கினார்கள். ஆத்தூரில் உள்ள அரசு HS பள்ளிக்குக் கணினிகள் வழங்கப்பட்டன. அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஐந்து அங்கன்வாடிகளுக்கு அறைக்கலன்கள், சமையல் பாத்திரங்கள் கொடையளிக்கப் பட்டன. பொன்விழா நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக, ஆதரவற்றோர் இல்லங்கள் ஐந்துக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. PDGகள் V சண்முகம், ஆறுமுகப்பாண்டியன், சின்ன துரை அப்துல்லா, ஷேக் சலீம், PNB முருகதாஸ், K விஜயகுமார், DGE முத்தையா பிள்ளை மற்றும் DGND தினேஷ் பாபு ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள். SPIC குழு இயக்குநர் S R ராமகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

28 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சங்கம் 1974 ஜனவரி 21 அன்று பதிவு செய்யப்பட்டது.■



# எகிப்து: பாரோக்கள் மற்றும் பிரமிடுகளின் நாடு

ரஷீதா பகத்




எகிப்து, நாங்கள் பயணம் செய்ய விரும்பிய இடங்களின் பட்டியலில் நீண்ட காலமாக இருந்தது. மேலும் அந்த அழகான, வரலாற்று பெருமைமிக்க நாட்டைப் பார்வையிட நாங்கள் இவ்வளவு நேரம் காத்திருந்தது ஏனென்றால் கர்பலா மற்றும் நஜாஃப் யாத்திரைக்காக நாங்கள் 2002 முதல் ஒவ்வொரு தசாப்தமும் சென்று வரும் இஸ்ரேல் மற்றும் ஈராக் உடன் அதை இணைத்து காண முயற்சித்தோம். என் முதல் இரண்டு பயணங்களிலும் என்னில் இருந்த பத்திரிகையாளர் அப்பயணத்தை ஒரு வேலைப் பயணமாக மாற்றியது. நான் அப்போது பணிபுரிந்த இந்து பிசினஸ்லைன் வாசகர்களுக்கு, சதாம் ஹுசைனின் ஆட்சி அமெரிக்கர்களால் தகர்க்கப்பட்ட பின்னர் அந்த துரதிர்ஷ்டவசமான மற்றும் நெருக்கடியான நாட்டில் என்ன நடந்தது என்பதை நேரடியாகக் புகார் கூற அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கொண்டேன். ஈராக்கில் எனது சாகசங்களை இன்னொரு முறை பதிவு செய்கிறேன்.


முதல்முறை எகிப்தை, ஈராக் அல்லது இஸ்ரேலுடன் இணைக்கும் சில முயற்சிகள் விசா காரணமாக தோல்வியடைந்தது - ஷியா முஸ்லிம்களுக்கு ஈராக்கிற்குள் நுழைவதற்கான எளிதான வழி குழு விசாக்கள், ஆனால் குழுவில் குறைந்தபட்சம் 10 பேர் இருக்க வேண்டும். இரண்டாவது முறை, அடிஸ் அபாபாவில் 12-மணி நேர இடைவெளியுடன் கூடிய அலுப்பான விமான பயணம் மற்றும் சிரமமான நேரங்களில் நீண்ட கார் பயணங்களால் இந்த முறையும் தோல்வியடைந்தது. சர்வதேச பயணத்தை பொறுத்தவரை சென்னை விமானநிலையம் இன்னும் பின்தங்கியே உள்ளது, பெங்களூரு கூட சிறந்த விமான இணைப்புகளைக் கொண்டுள்ளது.

எனவே இந்த ஜனவரி, எகிப்து செல்ல முடிவு செய்தோம்! எட்டு பேர் கொண்ட குழுவாகத் பயணத்தை திட்டமிடத் தொடங்கினோம், ஆனால் மாய இலக்கான "எகிப்து" குறிப்பிடப்பட்ட அந்நிமிடமே பல நண்பர்கள் பயணத்தில் சேர விரும்பினர்! விரைவில் குழு 14 ஆக உயர்ந்தது, இதற்கு மேல் குழுவின் எண்ணிக்கை ஊயராமல் இருக்க நாங்கள் உறுதியாக இருக்க வேண்டியிருந்தது. சிறியது அழகு என்று கூறுவார்கள், ஆனால் நாங்கள் இனி ஒரு "சிறிய குழுவாக" இல்லை.

ஆனால் அது ஒரு வேடிக்கையான குழுவாக இருந்தது; வட இந்தியர்கள் மற்றும் தென்னிந்தியர்கள் கலந்த மிகவும் சுவாரஸ்யமான குழு; எங்கள் 10 நாள் பயணத்திலிருந்து நான் திரும்பக் கொண்டு வந்த மிக முக்கியமான நினைவு என்னவென்றால், ஒரு சில பெண்கள் - மூத்த குடிமக்கள் மற்றும் உத்வேகமான இளைஞர்களின்



*கிசாவின் பிரமிடுகள்.*



கெய்ரோவில்
ஒரு தேவாலயம்



கலவையானது – எங்கள் வேன் வேகமாகச் செல்ல இந்தி மற்றும் தமிழ் பாடல்களுக்கு நடனமாடியது. ஒரு இஸ்லாமிய நாட்டில், இந்த நிகழ்வால் சாலைகளில் உருவாகும் ஆர்வத்தை நன்கு காணமுடிந்தது. மீண்டும் நாடு திரும்ப விமானநிலையத்திற்கு நாங்கள் பயணித்தபோதும் அந்த நடனம் தொடர்ந்தது. எங்களைக் கடந்து சென்றவர்கள் சிரித்து, கைதட்டி, தம்ஸ் அப் சிக்னல்களை வழங்கி எங்களை பாராட்டினார்கள்!

எகிப்து என்ற பெயரை கேட்டாலே, கிசாவின் பிரமிடுகள் தான் நமக்கு முதலில் நினைவிற்கு வரும். உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக நியமிக்கப்பட்ட அந்த மூன்று பிரமிடுகள் மூன்று மன்னர்களுக்காக கட்டப்பட்டன; கிங் குஃபுவின் பிரமிடு பழமையானது மற்றும் பெரியது, அடிவாரத்தில் சராசரியாக 230 மீட்டர் நீளம் கொண்டது; இரண்டாவதின் நீளம் 216 மீட்டர் மற்றும் சிறியதின் நீளம் 109 மீட்டர். இந்த சமாதிகள், பண்டைய மன்னர்களின்



அலக்சான்டிரியாவில் ஒரு நூலகம்.




தங்க எழுத்துக்கள் கொண்ட ஒரு குரான்

வாழ்க்கைக்குப் பின் மற்றும் அடுத்த பிறப்பைப் பற்றிய நம்பிக்கையின்படி, இறப்பின் பிற்கால வாழ்க்கையில் பாரோக்களுக்குத் தேவைப்படும் தங்கம் மற்றும் பிற மதிப்புமிக்க பொக்கிஷங்களால் நிரப்பப்பட்டது. ஆனால் மூன்று பிரமிடுகளும் பண்டைய காலத்திலும் இடைக்காலத்திலும் பல முறை கொள்ளையடிக்கப்பட்டன, மேலும் அவைகளின் வெளிப்புறம் பூசப்பட்டிருந்த வெள்ளை சுண்ணாம்புக் கல் அகற்றப்பட்டதால் அவற்றின் அசல் உயரமும் அரிக்கப்பட்டுவிட்டது.

பெரிய பிரமிட்டின் மையப்பகுதி மஞ்சள் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டுள்ளது மற்றும் இந்த பிரமிடுகளின் கட்டுமானம் அவை கட்டப்பட்ட காலத்தின் (கிமு 2550 முதல் 2490 வரை) ஒரு பொறியியல் அற்புதம். பிரமிடுகள் எவ்வாறு சரியாகக் கட்டப்பட்டன, எத்தனை பேர் அதில் பணிபுரிந்தார்கள், எவ்வளவு காலத்தில் முடிவடைந்தன என்பது பற்றி பல வகையான கோட்பாடுகளும் உள்ளன. பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியர் ஹெரோடோடஸ் மதிப்பீட்டின்படி, பெரிய பிரமிட்டை கட்ட 20 ஆண்டுகள் ஆனது, மேலும் அதில் 100,000 விவசாயத் தொழிலாளர்கள் பணியாற்றினர். அவர்கள் நைல் நதியால் தங்கள் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி தங்கள் வயல்களில் வேலை இல்லாதபோது மட்டும் பிரமிடுகளில் வேலை செய்தனர்.

ஆனால், என்சைக்ளோபீடியா பிரிட்டானிகாவின் கூற்றுப்படி, “மிகவும் வரையறுக்கப்பட்ட பணியாளர்கள் - சுமார் 20,000 பேர் - பருவகால அடிப்படையில் அல்லாமல் நிரந்தரமாக அந்த இடத்தில் பணியாற்றி இருக்கலாம் என தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆதாரங்களைக் கண்டறிந்தனர்.

அடுத்த இயல்பான கேள்வி என்னவென்றால், இயந்திரமயமாக்கல் இல்லாத சகாப்தத்தில் இந்த பெரிய கட்டமைப்புகளை உருவாக்க பயன்படுத்தப்பட்ட முறை. பிரிட்டானிக்காவின் கூற்றுப்படி, எகிப்தியர்கள் “செங்கல், மண் மற்றும் மணல் ஆகியவற்றால் ஒரு சரிவான மற்றும் வட்டமான அணையை கட்டமைத்தனர், பிரமிடு உயர உயர அதன் உயரம் மற்றும் நீளம்

அதிகரிக்கப்பட்டது; சுமார் 2.5 டன் எடையுள்ள ஒவ்வொரு கல் தொகுதிகள் சறுக்குவண்டிகள், உருளைகள் மற்றும் நெம்பு கோல்கள் மூலம் சரிவில் இழுத்துச் செல்லப்பட்டன. உங்கள் கண்களை மூடிக்கொண்டு இதில் ஈடுபட்ட உடல் உழைப்பின் பிரம்மாண்டமான அளவை கற்பனை செய்து பாருங்கள்... அந்த எண்ணமே உங்களை மயக்கமடையச் செய்யும்!


இந்த கிரகத்தில் இதுவரை கட்டப்பட்ட மிகப்பெரிய மற்றும் பிரம்மாண்டமான இந்த கட்டமைப் பிற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் பற்றி பிரிட்டானிக்கா கூறுவது: தோராயமாக 23 லட்சம் கற்கள் வெட்டப்பட்டு, கொண்டு வரப்பட்டு, இந்த 57.5 லட்சம் டன் தொழில்நுட்ப திறன் மற்றும் பொறியியல் திறனின் தலை சிறந்த படைப்பு உருவாக்கப்பட்டது. இவற்றின் உட்புற சுவர்கள் மற்றும் இன்னும் அழியாமல் இருக்கும் சில வெளிப்புற உறை கற்களின் இணைப்புகள் பண்டைய எகிப்தில் கட்டப்பட்ட மற்ற கட்டிடங்களை விட நன்றாகக் இருக்கின்றன.

ஆனால் ஏதோ ஒரு மட்டத்தில், அந்த தூசி நிறைந்த நிலப்பரப்பில், பிரம்மாண்டமான பிரமிடுகள் அவற்றின் முந்தைய மகிமையையும், உள்ளே இருக்கும் அற்புதமான பொக்கிஷங்களையும், வழுவழுப்பான மற்றும் பளபளக்கும் வெள்ளை சுண்ணாம்புக் கல்லின் வெளிப்புறம் என இவை அனைத்தையும் கொண்டிருந்தாலும், நான் சற்று ஏமாற்றமே அடைந்தேன். கடுமையான பாலைவன வெயிலால் ஏற்பட்ட சோர்வு, முகத்தில் வீசுய புழுதி காற்று, நீண்ட நடைப்பயணம், எங்கு பார்த்தாலும் அப்பட்டமான பழுப்பு நிறத்தில் எகிப்தின் பழம்பெரும் பிரமிடுகள் ஆகியவற்றால் அந்த நிலத்திற்குச் செல்ல வேண்டும் என்ற எனது நீண்ட நாள் ஆசை திருப்திகரமாக அமையவில்லை.

ஆனால் எங்கள் குழு உறுப் பினர்களில் ஒருவர் மாலை நேரத்தில் பிரமிடுகளில் ஒலி மற்றும் ஒளி காட்சியை முன்பதிவு செய்ய வேண்டும் என்று நினைத்திருக்கிறார், அவருக்கு கோடி புண்ணியங்கள். இரவின் இருளில், போதுமான வெளிச்சம் மற்றும் வர்ணனையுடன் பண்டைய எகிப்தின் தேஜஸ், பிரமிடுகளின் மகத்துவம் மற்றும் இந்த அற்புதமான நிலத்தின் மனதைக் கவரும் வரலாறு ஆகியவை எங்களுக்காக மீண்டும் உருவாக்கப்பட்டன.

கெய்ரோவில் அடுத்த முக்கிய நிறுத்தம் அல் தஹ்ரீர் சதுக்கத்தில் உள்ள எகிப்திய அருங்காட்சியகம் ஆகும். ஆனால் எகிப்தின் பாரோக்கள் மற்றும் ராணிகளின் பொக்கிஷங்களைப் பற்றி பேசு வதற்கு முன், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அருங்காட்சியகங்களில் 42,000 எகிப்திய கலைப்பொருட்கள் இருப்பதை கவனித்தில் கொள்ளவும். நமது பழங்காலச் செல்வத்தின் பெரும்பகுதி பிரிட்டிஷ் அருங்காட்சியகங்களில் இருப்பதால், இது குறைந்தபட்சம் இந்தியர்களையாவது ஆச்சரியப் படுத்தக்கூடாது!

இந்த கெய்ரோ அருங்காட்சி யகத்தில் 120,000க்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் உள்ளன, இதில் ராமஸ்ஸஸ் ஐ இன் மகன் துட்டன்காமனின் கல்லறை மற்றும் 19ஆம் நூற்றாண்டிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட பெரும்பாலான மம்மிகள் ஆகியவை அடங்கும். பண்டைய எகிப்தின் பழைய ராஜ்ஜியத்தின் தொடக்கத்திலிருந்து (சுமார் கிமு 2700) கிரேக்க-ரோமன் காலம் வரையிலான கண் காட்சிகள் அங்கே உள்ளன. இங்குள்ள ஒரு சுவாரஸ்யமான



கல்வெட்டு, மேல் மற்றும் கீழ் எகிப்தை ஒருங்கிணைக்கும் அடையாளச் செயலில் கிங் நர்மர் ஈடுபட்டதை காட்டுகிறது. இது ஒரு நிகழ்வு அல்ல, தொடர்ச்சியான நிகழ்வுகளால் நடந்தேறிய ஒன்று. எகிப்திய வரலாற்றில் இரு நாடுகளின் ஒருங்கிணைப்பு மிகவும் முக்கியமானது.

அதேபோல் நன்கு அறியப்பட்ட ஒன்று, எகிப்திய பாரோக்கள் மற்றும் பிற அரச குடும்பங்கள் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையை உறுதியாக நம்பினர் மற்றும் அவர்களின் இறுதி அடக்கம் செய்யும் இடத்தை மிகுந்த கவனத்துடனும் விவரங்களுடனும் திட்டமிட்டனர். விலையுயர்ந்த நகைகள் மற்றும் பிற விலைமதிப்பற்ற கலைப்பொருட்கள் என அவர்கள் தங்கள் செல்வத்தின் பெரும்பகுதியை அவர்களுடன் எடுத்துச் சென்றனர். முன்னர் புதைக்கப்பட்ட இடங்கள் பெரும்பாலும் திருடர்களால் சூறையாடப்பட்டு, அவர்களின் செல்வங்கள் முற்றிலும் அகற்றப்பட்டன. எனவே, பிற்கால ஆட்சியாளர்கள் தங்கள் கல்லறைகளைப் பாதுகாப்பதில் மிகவும் கவனமாக இருந்தனர். நவம்பர் 2022இல் பாலக மன்னர் துட்டன்காமனின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டு சரியாக 100 ஆண்டுகள் நிறைவடைந்தன. அவர் நைல் நதியின் மேற்குக் கரையில் உள்ள மன்னர்களின் பள்ளத்தாக்கில் அடக்கம் செய்யப்பட்டார். இரண்டு திருட்டு முயற்சிகள் நடந்தபோதிலும், இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பாரோக்களின் கல்லறைகளில் இந்த கல்லறை கைப்படாத வண்ணமாகவே இருந்துள்ளது, மேலும் அதன் சிறப்பான கண்டுபிடிப்பு 1922-இல் ஹவர்ட் கார்டரால் நடத்தப்பட்டது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, துட்டன்காமனின் கல்லறை சபிக்கப்பட்ட ஒன்று என்றும் அதைத் தொடுபவர் அழிந்துவிடுவர் என்று புராணக்கதை கூறுகிறது. ஹவர்ட் கார்டர் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு மரணித்தது இதனுடன் தொடர்புப் படுத்தப்படுகிறது. இருப்பினும், யூகத்திலிருந்து உண்மைகளுக்கு நகருவோம், துட்டன்காமன் எகிப்தின் மிக முக்கியமான பாரோக்களில் ஒருவர். அவரது தந்தை ராமேஸ்ஸஸ் I-இன் மறைவுக்குப் பிறகு குழந்தையாக இருந்தபோதே ராஜாவானார். இந்த அருங்காட்சிய கத்தில் உள்ள ஒரு தகடு சுட்டிக் காட்டுவது போல், துட்டன்காமன் விரைவில் எகிப்து மரபின் அடையாளமாக மாறினார், அந்த மரபு உலகம் முழுவதும் கலாச்சாரம், பாணி மற்றும் அதிசயங்களை பாதித்தது. அவரின் கல்லறையில் 5,000க்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் இருந்தன, இவை அனைத்தும் கிசாவில் வரவிருக்கும் புதிய கிராண்ட் எகிப்திய அருங்காட்சி யகத்தில் காட்சிப்படுத்தப்பட உள்ளது. அவர் ஒரு விபத்துக்குப் பிறகு இறந்தார் மற்றும் நிறைய மதிப்புமிக்க பொக்கிஷங்களுடன் புதைக்கப்பட்டார்.

இந்த அருங்காட்சியகத்தில் எப்படி உள் உறுப்புகள் அடி வயிற்றில் இருந்து அகற்றப்பட்டு கொள்கலன்களில் பாதுகாக்கப்பட்டு இறந்தவர்களுடன் புதைக்கப்பட்டன என்பதைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அனால் இதயம் உடலிலேயே விடப்பட்டது. பின்னர் உறுப்புகள் நான்கு குவளைகளில் வைத்து ஒரு மரப்பெட்டிக்குள் வைக்கப்படும்.

நீங்கள் கெய்ரோவுக்குச் சென்றால் அலெக்ஸாண்ட்ரி யாவுக்குச் செல்லாமல் இருக்க முடியாது. எகிப்தின் தலைநகரில் இருந்து இரண்டு மணிநேர பயணத்தில் இருக்கும் நகரம் அது. கிமு 332இல் அலெக்சாண்டர் எகிப்தின் மீது படையெடுத்தபோது, எகிப்து ஹெலனிஸ்டிக் நாகரீகத்தின் ஒரு பகுதியாக மாறியது, பின்னர் அலெக்சாண்டரின் கீழ் முக்கிய தலைவரான டோலமி I-இன் ஆட்சியின் கீழ் வந்தது. கிமு 305-இல் அவர் நகரத்தை ஒரு சுதந்திர டோலமிக் ராஜ்ஜியமாக அறிவித்தார். கிமு 30-இல் ரோமானிய படையெடுப்பு வரை அது அப்படியே இருந்தது. அலெக்ஸாண்டிரியா எகிப்தின் தலைநகராக மாற்றப் பட்டதால், இந்த காலகட்டம்



பிரமிட் வளாகத்தில் ஒரு ஒளியும் ஒலியும் நிகழ்ச்சி.

பல கலாச்சார மாற்றங்களைக் கண்டது. அதன் நூலகம் மற்றும் அருங்காட்சியகம் மூலம் விரைவில் மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் அறிவியல், கலாச்சாரம் மற்றும் கலைகளின் உலகளாவிய மையமாக மாறியது. கட்டிடக்கலை மற்றும் விவசாயம் இரண்டும் செழித்தோங்கியது. நீர் சக்கரங்கள் மற்றும் நீர் டிரம்கள் போன்ற நவீன நீர்ப்பாசன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. எகிப்து மத்தியதரைக் கடல் நாடுகளின் உணவுக் களஞ்சியமாக மாறியது. அலெக்ஸாண்ட்ரியா அதன் திரையரங்குகள், உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் பொது குளியலறைகள் ஆகியவற்றிற்கும் பிரபலமானது.

எங்களின் அந்த நாள் பயணத்தின் முதல் நிறுத்தம் பாம்பேஸ் பில்லர் என்று பெயர் சூட்டப்பட்டிருந்த அலெக்ஸாண்டிரியாவில் உள்ள ரோமானிய வெற்றிக் தூண். கி.பி 298–302-க்கு இடையில் ரோமானியப் பேரரசர் டியோக்லெஷியனின் நினைவாக அமைக்கப்பட்ட மாபெரும் கொரிந்தியன் தூண் முன்னர் கவசத்துடன் இருந்த பேரரசரின் பிரம்மாண்டமான சிலையை தாங்கிக்கொண்டிருந்தது. மணற்கற்களால் ஆன இது ஒரு புகழ்பெற்ற அடையாளமாகும், இது இன்று வெறிச்சோடிய தோற்றத்தை அணிந்திருந்தாலும், 11,000 ஆண்டுகளுக்கும் மேலான மனித ஆக்கிரமிப்புக்கு இது ஒரு சிறந்த கண்காணிப்பு புள்ளியாக இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஆனால் அலெக்ஸாண்டிரியாவைக் குறிப்பிடும் போது நினைவுக்கு வரும் ஒரு கட்டிடம் அதன் புகழ்பெற்ற நூலகம். தி கிரேட் லைப்ரரி ஆஃப் அலெக்ஸாண்டிரியா, பண்டைய உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் பிரபலமான நூலகங்களில் ஒன்றாகும். இது மௌசியன் எனப்படும் ஒரு பெரிய ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு பகுதியாக இருந்தது, அது கலைகளின் ஒன்பது தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

டிமெட்ரியஸ் ஒரு கிரேக்க அரசியல்வாதி. ஏதென்ஸில் அதிகாரத்தில் இருந்து அவர் வீழ்ந்த பிறகு, அவர் முதலாம் டோலமியின் (கிமு 297) அரசவையில் தஞ்சம் புகுந்து மன்னரின் ஆலோசகரானார். டிமெட்ரியஸின் அபார அறிவை அறிந்த டோலமி, நூலகம் மற்றும் அருங்காட்சியகத்தை அமைக்கும் பணியை அவருக்கு வழங்கினார். கிரேக்க இலக்கியத்தின் பெரும்பகுதி இங்கு வைக்கப்பட்டது. அரிஸ்டாட்டிலின் புத்தகங்கள் இந்த நூலகத்தில் வைக்கப்பட்டன என பல கூற்றுக்களும் உண்டு. மேலும் அலெக்ஸாண்டிரியாவுக்குச் வரும் ஒவ்வொரு கப்பலையும் தேடுவது உட்பட, புத்தகங்களைத் தேடுவதில் டோலமிகள் செலுத்திய ஆர்வம் பற்றிய பலவிதமான கதைகள் அங்கே உள்ளன. ஒரு தகுதியான புத்தகம் கிடைத்தால், அவை சாம, தான, பேத, தண்டம் என்று ஏதாவது ஒரு வழியில் பெறப்பட்டது! இந்த நூலகத்தில் ஒரு காலத்தில் 500,000 புத்தகங்கள் இருந்ததாக கூறுப்படுகிறது. பெரும்பாலான புத்தகங்கள் கிரேக்க எழுத்து மற்றும் இலக்கியம், மற்றும் எகிப்திய வரலாற்றின் பதிவுகளை உள்ளடக்கியிருந்தாலும், டோலமிகள் உலகம் முழுவதிலுமிருந்து புத்தகங்களைப் பெற்றனர்.

அலெக்ஸாண்டிரியாவின் பெரிய நூலகம் எவ்வாறு அழிக்கப்பட்டது என்பது பற்றிய சர்ச்சைகள் ஏராளமாக உள்ளன-உண்மையில் இரண்டு நூலகங்கள் இருந்தன, தொடர்ந்து

எகிப்து நாட்டு பிரியாணி.





குனாஃபா.

வேனில் நடனம்.





சிக்கன் மற்றும் சாதம்.



சாலட், ஹம்மஸ் மற்றும் பாபா கனூஷ்.



வளர்ந்து வரும் புத்தகங்களை கூடுதல் இடத்தில் வைக்கப்பட வேண்டியிருந்தது. கி.பி 642க்குப் பிறகு, அரேபியத் தளபதி அம்ர் இபின் அல்-ஆஸ் எகிப்தைக் கைப்பற்றி அலெக்ஸாண்டிரியாவில் குடியேறியபோது நூலகத்தில் இருந்த புத்தகங்களை எரிக்க உத்தரவிட்டார் என்று ஒரு கூற்று இருக்கிறது. ஆனால் கைப்பற்றப்பட்ட ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக, அரேபியர்கள் அலெக்ஸாண்டிரியா நூலகத்தை எரித்ததாக ஒரு குறிப்பு கூட இல்லை என்று பிரிட்டானிக்கா சுட்டிக்காட்டுகிறது. ஆனால் திடீரென்று, 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அலெக்ஸாண்டிரியாவின் பண்டைய நூலகத்தின் புத்தகங்களை அம்ர் எவ்வாறு எரித்தார் என்பது பற்றிய தகவல்கள் வெளிவந்தன. “இந்த கதை ஒரு கற்பனையான சுவை கொண்டுள்ளது” என்று கூறி அந்த குறிப்பு முடிவடைகிறது.

எகிப்தில் உள்ள வழிகாட்டிகள் நிச்சயமாக முஸ்லிம்கள் நூலகத்தை அழிக்கவில்லை என்றும், அது “போரின் துரதிர்ஷ்டவசமான விபத்து” என்றும் உங்களிடம் சொல்வார்கள். கிமு 48-இல், எகிப்தில் கிளியோபாட்ராவிற்கும் அவரது சகோதரர் டோலமி XIII-க்கும் இடையே நடந்த உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட ஜூலியஸ் சீசர், கிளியோபாட்ராவின் பக்கம் நின்றார், மேலும் தரை மற்றும் கடல் வழியாக டோலமியின் படைகளால் முற்றுகையிடப்பட்ட போது, எதிரிகளின் கடற்படையை எரிக்க உத்தரவிட்டார். அந்த தீ மூண்டது மற்றும் பரவியது, இது உலகப் புகழ்பெற்ற நூலகம் உட்பட நகரத்தின் பெரும்பகுதியை அழித்தது.

ஆனால் உண்மை எதுவாக இருந்தாலும், இன்று அலெக்ஸாண்ட்ரியா நகர மையத்தில் உள்ள துறைமுகத்திற்கு அருகில் கட்டப்பட்ட அழகான மற்றும் அற்புதமான பிபிலியோதேகா அலெக்ஸாண்ட்ரினா நூலகத்தைக் குறிப்பிடுவது மகிழ்ச்சி அளிக்கிறது. 11 மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டிடத்தில் 80 லட்சம் புத்தகங்கள் வரை சேமிக்க முடியும் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இயற்கையான ஒளியை அதிக பட்சமாக அனுமதிக்கும் பிரமாண்ட மான கட்டிடத்தின் தனித்துவமான வடிவமைப்பு மற்றும் கட்டிடக் கலையை உள்வாங்கிக் கொண்டு, பிரமிப்புடனும் ஆச்சரியத்துடனும் அந்த பரந்து விரிந்த இடத்தைச் சுற்றி நடந்தோம். பிரதான வாசிப்பு கூடம் 220,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

1974இல், அலெக்ஸாண்ட்ரியா பல்கலைக்கழகம் நூலகத்தை புதுப்பிக்க முடிவு செய்தது, 1995இல் அதன் கட்டுமானம் தொடங்கி, வளாகம் அக்டோபர் 2002இல் திறக்கப்பட்டது; அதன் செலவு 220 மில்லியன். 2009இல், பிரான்ஸ் சுமார் 500,000 புத்தகங்களை நூலகத்திற்கு வழங்கியது.

பாரோக்கள், அருங்காட்சியகங்கள், நைல் கப்பல் ஓட்டங்கள் மற்றும் அபு சிம்பெல் கோயில் (விவரங்கள் அடுத்த இதழில்) ஆகியவற்றுடன் எகிப்து அதன் சுவையான உணவுக்காகவும் அறியப்படுகிறது. கெய்ரோவில் எங்கள் முதல் நாளில், எங்கள் வழிகாட்டிகளான மணால் மற்றும் ரமதான் ஆகியோருக்கு நன்றி, நாங்கள் இரவு உணவிற்காக சோபி கேபர் என்ற உணவகத்திற்கு சென்றோம், அது மிகவும் கூட்டமாக இருந்தது, மேலும் மக்கள் கூட்டம் கூட்டமாக ஒரு மேஜைக்காக வெளியே காத்திருந்தனர், அது பார்ப்பதற்கு அவர்கள் ஏதோ இலவச உணவு கொடுப்பது போல் தோன்றியது. ஆனால் இறுதியாக, உரிமையாளர்களுடனான ரமதானின் செல்வாக்குடன் எங்களுக்கு ஒரு மேஜை கிடைத்தது – 15 பேருக்கான மேஜை எந்த உணவகத்திலும் எளிதானது அல்ல!

அன்றைய மாலையும், அதன் பிறகு நாங்கள் தங்கியிருந்த எஞ்சிய



நாட்களும் வந்த சுவையான உணவுகளுக்கு நம் உயிரை கொடுக்கலாம். கோஃப்டாக்கள், கபாப்கள் மற்றும் ஷவர்மா ஆகியவை அங்கு ஏராளமாக இருந்தன. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், எங்கள் குழுவில் இருந்த இரண்டு சைவ உணவு உண்பவர்களுக்கு எப்போதும் போதுமான மற்றும் சுவாரஸ்யமான சைவ உணவுகளும் கிடைத்தன. பீட்டா ரொட்டிகள், ஹம்முஸ், ஃபாலாஃபெல், பாபா கனூஷ் மற்றும் சாலடுகள் அனைத்தும் சுவையாக இருந்தன. மிகவும் மணம் கொண்ட அரிசி உணவுகளில் ஒன்று அரிசி மற்றும் காய்கறிகள் திராட்சை இலைகளில் மூடப்பட்டு வேகவைக்கப்பட்டது (கிரேக்க சமையலில் டோல்மா என்று அழைக்கப்படுகிறது). மற்றொரு சுவையான உணவு பாஸ்தா, எகிப்திய ஃப்ரைடு ரைஸ், வெர்மிசெல்லி மற்றும் பிரவுன் பருப்பு ஆகியவற்றால் செய்யப்பட்டு மற்றும் சுவையான தக்காளி சாஸ், பூண்டு வினிகர், கொண்டைக்கடலை மற்றும் மிருதுவான வறுத்த வெங்காயத்தால் அலங்கரிக்கப்பட்ட பாரம்பரிய எகிப்திய உணவான கோஷரி. எகிப்தில் மதுபானம் சுலபமாக கிடைக்காது, ஆனால் உங்கள் உணவை செரிமானிக்க மிகவும் புத்துணர்ச்சியூட்டும் செம்பருத்தி மலர்கள் கொண்ட பானத்தை முயற்சிக்கவும், நிச்சயமாக புத்துணர்ச்சியூட்டும் பழச்சாறு களையும் முயற்சிக்கவும்!

இனிப்புக்காக, நாங்கள் பல்வேறு வகையான குனாஃபாவை முயற்சித்தோம், அவை சுவையாக இருந்தன. இதில் சிறந்த அம்சம் என்னவென்றால், உணவு இந்திய நாவிற்கும் மிகவும் பொருத்தமானதாக இருந்தது. இது காரமாகவும் மற்றும் ருசியானதாகவும் இருந்தது, முக்கியமாக மிக மலிவாகவும் இருந்தது. எகிப்திய பவுண்டில் சமீபத்திய பணமதிப்பு நீக்கத்தால், உணவு அல்லது ஷாப்பிங் என எதுவாக இருந்தாலும், இந்திய ரூபாய் அங்கு பெரிதும் பயன்படுகிறது!

நைல் கப்பல் பயணம் மற்றும் மூச்சடைக்கக்கூடிய அழகான அபு சிம்பெல் கோயில், லக்சரில் பலூன் சவாரி மற்றும் அற்புதமான மன்னர்களின் பள்ளத்தாக்கு ஆகியவற்றை பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்



**கெய்ரோவில் ஒரு கடை.**

Rotary PEOPLE OF ACTION

# சங்கங்களின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## மும்பை மருத்துவமனைக்குச் சோனோகிராஃபி இயந்திரம்



IPCA *லேபரேட்டரிஸ்* MD A K *ஜெயின் (இடது) மற்றும்* IPDG *ராஜேந்திர அகர்வால்.*

RC மும்பை கன்டிவ்லி வெஸ்ட், RID 3141, KHM மருத்துவ மனைக்கு IPCA லெபாரட்டரீஸின் CSR ஆதரவுடன் மீயொலி சோனோகிராஃபி இயந்திரம் (ரூ.29.5 லட்சம்) ஒன்றைக் கொடையளித்தது.

## கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிராகப் போராடும் ஜாம்நகர் சங்கம்




DGN நிஹிர் தவெ தலைமையில் RC செனோரஸ் ஜாம்நகர், RID 3060 தொடங்கியுள்ள கருப்பை வாய்ப் புற்றுநோயிலிருந்து சிறுமிகளையும் பெண்களையும் காக்கும் தடுப்பு மருந்து இயக்கம் மார்ச் மாதம் வரை 1,500 வளர் இளம் பருவப் பெண்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கியுள்ளது.

## RID கோட்பாகி பெருமைப்படுத்தப்பட்டார்



*லோக்சபா சபாநாயகர் ஓம் பிர்லா* IIS *பல்கலைகழக வேந்தர் அசோக் குப்தாவுடன்* RID *மகேஷ் கோட்பாகியிற்கு* D Lit *பட்டம் வழங்குகிறார்.*

RID மகேஷ் கோட்பாகி அவர்கள் நலப் பராமரிப்பு மற்றும் சமூக சேவைக்காக ஜெய்ப்பூர் IIS பல்கலைக்கழகம் அவருக்கு D Lit – ஹானரிஸ் காஸ்ஸா பட்டம் வழங்கி யுள்ளது. இந்த விருதை ஏற்றுக்கொண்டு பேசிய அவர், தன்னுடைய வாழ்க்கைச் சாதனைகளுக்குத் தன் குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்தார். குறிப்பாக, 75 வயதில் Ph D பட்டம் பெற்ற தன் தாயை அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

முப்பது ஆண்டுகளாகத் தொடரும் கோட்பாகியின் ரோட்டரி பயணத்தில், நலிந்த மக்களுக்குத் தூய குடிநீர், தூய்மை வசதிகள், கல்வி உள்ளிட்ட பல திட்டங்களில் அவர் பங்கேற்றார். ஆப்பிரிக்காவுக்குச் சென்ற ரோட்டரி மருத்துவப் பயணங்களில் அவர் பங்கேற்றுள்ளார், கிராமப்புற மருத்துவ முகாம்கள் நடத்தியுள்ளார். கோவிடின் போது, அவர் தன்னுடைய சொந்த மருத்துவமனையில் மருத்துவச் சேவை வழங்கியதுடன், கிராமப்புற மருத்துவ மனைகளில் ஆக்சிஜன் செறிவூட்டிகள் வழங்கவும் உதவினார்.

## சென்னை அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு



மாணவர் வருகையை மேம்படுத்துவதற்காக, ஐந்து அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 400 மாணவர்களுக்குக் காலை உணவு வழங்குகிறது RC சென்னை முகப்பேர், RID 3232. மாதந்தோறும் உணவுக்கான செலவைச் (ரூ.10,000) சங்க உறுப்பினர் அசோக்குமார் பங்களிக்கிறார். சங்கத்தின் RCC தலைவர் பழனி தன்னுடைய ஆட்டோ ரிக்ஷாவில் இந்த உணவைப் பள்ளிகளுக்கு வழங்குகிறார்.

# மாற்றுத்திறனாளி தம்பதிகளுக்கு திருமணம்

V முத்துகுமரன்

மனதை தொடும் வகையில், RID 3211 சார்பில், பரிணயம் திட்டத்தின்கீழ், ஆலப்புழையில் உள்ள கேம்லாட் கன்வென்ஷன் மையத்தில் 30 மாற்றுத்திறனாளி தம்பதிகளுக்கு மெகா சமூகத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இதன் மூலம் அவர்களது வாழ்க்கையில் நம்பிக்கை ஒளி ஏற்பட்டுள்ளது. இந்த சமூக நிகழ்வு கேரள பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக வெளியிடப் பட்டது. தொலைக்காட்சிகளிலும் இது ஒளிபரப்பானது.

ஒவ்வொரு தம்பதிக்கும் தங்கத் தாலி, ரூ.30,000 ரொக்கம் மற்றும் பயணப்படியாக ரூ.5,000 வழங்கப்பட்டது. ரோட்டரி சங்கங்களும், தனிப்பட்ட நபர்களும் வெட் கிரைண்டர், மிக்ஸி, பிரஷர் குக்கர் உள்ளிட்ட ரூ.30,000 மதிப்பிலான வீட்டு உபயோக பொருள்களும், புதுமண தம்பதிகளுக்கு 6 மாதங்களுக்குத் தேவையான மளிகைப் பொருள் களும் வழங்கப்பட்டன என்று அவர் கூறினார். அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், நகராட்சி அலுவலர்கள் என பலரும் சமூக திருமண விழாவில் கலந்து கொண்டனர். மணமக்களில் சிலர் சக்கர நாற்காலிகளில் அமர்ந்தும், சிலர் வாக்கர் மற்றும் ஊன்றுகோலுடன் வந்து மாலை மாற்றிக் கொண்டு தாலி கட்டியது பார்வையாளர்களை கண்கலங்க வைத்தது. பார்வையற்ற இரு தம்பதிகள் ரோட்டேரியன்கள் உதவியுடன் தாலி கட்டி மூன்று முடிச்சு போட்டனர் என்று நினைவுகூர்ந்தார் பாபுமோன்.

கௌரவ விருந்தினர்களில் ஒருவரான, கேரள மாநில மாற்றுத் திறனாளிகள் நலக் கழகத்தின் தலைவரான எம்.வி. ஜெயதாலி, சிறுவயதிலேயே போலியோவால் பாதிக்கப்பட்டவர். மாற்றுத்தினளாளி களான மணமக்களுக்கு இப்படி பெரிய அளவில் சமூகத் திருமணம் நடந்து இதுவரை நான் பார்த்ததும் இல்லை, பங்கேற்றதும் இல்லை என்றார் அவர்.

திருமண தம்பதிகளில் தகுதியான வர்களுக்கு ரோட்டேரியன்கள் வேலை வழங்கியுள்ளனர். இதன் மூலம் அவர்கள் நிலையான வாழ்வாதாரத்தை பெற முடியும். நிகழ்ச்சியில் திட்டத்தலைவர் பி.எஸ். ஸ்ரீதரன், மாவட்ட பயிற்சியாளர் PDG கே.பி.ராமச்சந்திரன் நாயர் மற்றும் முன்னாள் ஆளுநர்கள் பரிணயம் நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெற உதவினர். இது எனது விருப்பமான திட்டம். நான் DGN ஆக இருந்த நாட்களிலிருந்தே இந்த திட்டத்தை வளர்த்து வந்தேன் என்றார் DG.

*பார்வையற்ற ஒரு தம்பதியுடன் DG K பாபுமோன் அவர் மனைவி பீனா மற்றும் பரிணயம் திட்ட ஒருங்கிணைப்பாளர் K G பிள்ளை.*





*புதுமணத் தம்பதியருடன் DG K பாபுமோன், PDGs தாமஸ் வவணிக்குனல், E K லூக், K P ராமச்சந்திரன் நாயர், ஜான் டேனியல், ஸ்காரியா ஜோஸ், திட்டத்தலைவர் P S ஸ்ரீதரன் மற்றும் கேரள மாநில மாற்றுத்திறனாளி கழகத்தலைவர் M V ஜெயடாலி.*

**திட்டம் அமிர்தம்**

மற்றொரு தொலைநோக்கு முயற்சியான அமிர்தம் திட்டம் என்பது பள்ளி மாணவர்களுக்கான மருத்துவ முகாமாகும். கண், காது, பல் பரிசோதனை இதன் முக்கிய அம்சமாகும். இதுவரை தெற்கு கேரள வருவாய் மாவட்டங்களைச் சேர்ந்த 1200 அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 5 லட்சம் மாணவர்கள் இம்முகாமில் பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

மார்ச் நிலவரப்படி நாங்கள் இதுவரை பார்வைக்குறைபாடு உள்ளவர்களுக்கு 50,000 மூக்கு கண்ணாடிகளை விநியோகித் துள்ளோம். இதேபோல செவிக்குறை பாடுள்ள 100 பேருக்கு காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேல் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு தொடர் சிசிக்கைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 8 பேருக்கு கண்புரை மற்றும் குளூகோமா (கண் அழுத்த நோய்) அறுவைச்சிகிச்சை கள் செய்யப்பட்டுள்ளன என்று விளக்கினார் பாபுமோன்.

மேலும் அமிர்தம் திட்டத்தின் கீழ் போதைப் பொருள் துஷ்பிரயோகம் மற்றும் வாழ்க்கைக்கு வழிகாட்டி தொடர்பான பயிலரங்குகள் மற்றும் ஆலோசனை அமர்வுகளும் நடத்தப்பட்டன. பிப்ரவரி மாதம் வரை சங்கத்தின் மூலம் 700 அரசு பள்ளிகளில் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம் ஒரு லட்சம் மாணவர்கள் பயன்பெற்றனர். வரவிருக்கும் மாதங்களில் மேலும் 25,000 மாணவர்கள் பலன் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதுவரை அரசு பள்ளிகளில் 250 குடிநீர் சுத்திகரிப்பு பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. PRIP சேகர் மேத்தாவின் சிந்தினையில் உதித்த திட்டமான ரோட்டரி இந்தியா மனிதநேய அறக்கட்டளை மூலம் உஜ்வால் திருஷ்டி அப்யான், அமிர்தம் திட்டத்தின் கூட்டாளியாக உள்ளது. இத்திட்டத்துக்கு பெரும்பாலும் சங்கத்தினர் நிதியுதவி செய்து வருகின்றனர்.

மற்றொரு முன்னோடி திட்டம் “வல்சல்யம்” (கருணை). இத்திட்டத் தின் கீழ் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த 50 பெண்கள் ஐந்தாண்டு மருத்துவ படிப்பை தொடர்ந்து வருகின்றனர். அவர்களுக்கான கல்வி கட்டணம், விடுதிக் கட்டணம், உணவுக் கட்டணங்களை சங்கங்கள் செலுத்தி வருகின்றன. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.ஆர்.எஸ். போன்ற போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் 100 மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 75 சங்கங்களும் வல்சல்யம் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் இளைஞர்கள் தங்கள் கல்வி இலக்குகளை அடைந்து பிரகாசமான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள உதவுகிறது என்றார் பாபுமோன்.

மாற்றுத்திறனாளி குழந்தை களுக்கான அமிர்தஹஸ்தம் (உதவிக்கரம்) திட்டத்தின் கீழ் ரூ.1 கோடி மதிப்புக்கு காது கேட்கும் கருவிகள், சக்கர நாற்காலிகள், வாக்கிங் ஸ்டிக், அலைபேசிகள் வழங்கப் பட்டுள்ளன. இதன் மூலம் 1500 பேர் பயனடைந்துள்ளனர். மத்திய அரசின் தேசிய தொழில் சேவை மையத்துடன் இணைந்து கூட்டாக இத்திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. புதிய தலைமையின் கீழ் இந்த நான்கு முக்கிய திட்டங்களும் அடுத்த ஆண்டிலும் செயல்படுத்தப்படுமா என்று கேட்டபோது, இந்த முயற்சிகளைத் தொடர DGE சுமித்திரன் திட்டமிட்டுள்ளார். அவர் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தக்கூடும் என்று நம்புகிறேன் என்றார் பாபுமோன்.■

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





**N நந்தகுமார்**
மாக்ஸில்லோஃபேசியல் அறுவைச் சிகிச்சை வல்லுனர்,
RC மெட்ராஸ் வடபழனி, RID 3232

## பிரிந்தபின், நாங்கள் பெரிதாக வளர்வோம்

RID 3232ன் நிர்வாகத்தை எளிதாக்குவதற்கென, 2024ல் அது இரண்டாகப் பிரிக்கப்படவுள்ளது. “170க்கும் மேற்பட்ட சங்கங்கள், 7,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என சென்னை மாவட்டம் பெரிதாக வளர்ந்துவிட்டது. ஆனால், ஒரு மாவட்டம் பிரிக்கப்பட்டால், அங்கு புதிய சங்கங்கள், புதிய உறுப்பினர்கள் பெரிய அளவில் சேர்வது வழக்கம். அதேபோன்ற வளர்ச்சியை நாம் மீண்டும் பார்க்கலாம்’’ என்கிறார் N நந்தகுமார்.

இவர் 2000லேயே ரோட்டரியில் சேர்ந்து விட்டாலும், 2011ல் இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்தில் ஒரு மிகப் பெரிய மருத்துவ மறுவாழ்வு முகாமில் கலந்துகொண்ட போதுதான் “பெரிய மாற்றத்தை உணர்ந்தேன்,” என்றார். சக்தி திட்டம் (GG: 600,000) என்கிற இவருடைய முதன்மைத் திட்டம் 10 அரசு மற்றும் தொண்டு மருத்துவ மனைகளுக்கு மாமோகிராம்களைக் (மார்பக ஊடு கதிர்ப் படக் கருவிகளைக்) கொடையளித்துள்ளது.

$1 மில்லியன் மதிப்புள்ள 19 GG திட்டங்கள் இந்த மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில், PHCக்களில் நோயாளிகளைப் பரிசோதிக்கிற இதயப் பராமரிப்புப் பேருந்து (GG: ரூ.1 கோடி) ஒன்றைச் சென்னை மாநகராட்சி மற்றும் ஸ்ரீ ராமச்சந்திரா கல்லூரியுடன் இணைந்து தொடங்கி வைத்தது RC மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா. RCக்கள் மெட்ராஸ் வடபழனி மற்றும் மெட்ராஸ் வெஸ்ட் இணைந்து புற்றுநோய்ப் பரிசோதனைக்கான இன்னொரு பேருந்தையும் (ரூ.1.4 கோடி) தயாராகியுள்ளன.

TRFக்கு $2.2 மில்லியன் திரட்ட இவர் இலக்கு அமைத்துள்ளார். இவருடைய மனைவி சுமேதாவும் 15 ஆண்டுகளாக ரோட்டரியனாகச் செயல்பட்டு வருகிறார்.■

**B இளங்குமரன்**
கல்வியாளர், RC திருப்பூர் சவுத், RID 3203

## திருப்பூரில் ரூ.90 கோடி செலவில் புற்றுநோய்ப் பராமரிப்பு மையம்

பள்ளி நாட்களில் இவர் ரோட்டரி சங்கத்தைக் கடந்து சென்றதுண்டு. அப்போதெல்லாம், “எப்போதும் செயல்பாடுகளால் நிரம்பி வழிகிற, நகரின் பெரிய ஆட்கள் அனைவரையும் ஈர்க்கிற இந்தச் சங்கத்தில் சேரவேண்டும் என்று பெரிய ஆசையை வளர்த்துக் கொண்டேன்’’ என்று நினைவுகூர்கிறார் இளங்குமரன். 2008ல் இவர் தன்னுடைய இல்லச் சங்கத்தில் சேர்ந்தார், “அதன் மூலம் என் நீண்ட நாள் ஆசை ஒன்று நிறைவேறியது.’’

இப்போது, தமிழ் நாடு அரசின் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் அமையும் இணை முயற்சியாகிய புற்றுநோய்ப் பராமரிப்பு மையத்துக்கு ரூ.90 கோடி திரட்டுவதற்கென உருவாக்கப்பட்ட, ரோட்டரி திருப்பூர் மற்றும் பொது நல அறக்கட்டளையின் செயலாளராக இவர் பணியாற்றிவருகிறார். “இந்தப் புற்றுநோய் மையத்தின் கட்டுமானப் பணி 2 ஆண்டுகளில் நிறைவடையும். நான்கு மாடிகளில் 75,000 சதுர அடி பரப்பில் எல்லா வசதிகளுடன் அமையும் இந்த மருத்துவமனை திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு வழங்கப்படும்’’ என்று விளக்குகிறார் இவர். இந்தத் திட்டத்துக்குத் தேவையான தொகையில் ரூ.30 கோடியை ரோட்டரி திரட்டும். அரசாங்கம் ரூ.60 கோடி வழங்கும். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $1 மில்லியன்.■

# RID 3120 மாவட்ட மாநாட்டை ஒளிரச்செய்த சிறப்பு பேச்சாளர்கள்

### ரோட்டரி செய்திக்குழு

RID 3120-சார்பில் ‘சமகம்’ என்னும் தலைப்பில் பிப். 3 முதல் 5 ஆம் தேதி வரை மூன்று நாள் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் முக்கியப் பேச்சாளர்கள் தலைமைப்பண்பு, குழுப்பணி மற்றும் சமூக சேவை உள்ளிட்ட ரோட்டரி தலைப்புகளில் உரையாற்றினர். இந்த அமர்வு மற்றும் பயிலரங்குகளில் 1,000-த்துக்கும் மேலான ரோட்டேரியன்கள் பங்கேற்றனர்.

DG அனில் அகர்வால், மாநாட்டுக்கு சிறப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்த அனைத்து மகளிர் அலகாபாத் ராயல்ஸ் ரோட்டரி சங்கத்தை வெகுவாக பாராட்டினார். தொடக்க நிகழ்ச்சியில் ஐ.ஐ.டி.யில் சேர விரும்பும் ஆர்வலர்களுக்கு பயிற்சி அளிக்கும் சூப்பர்-30 நிறுவனத்தின் நிறுவனரும் பத்மஸ்ரீ விருதுபெற்றவருமான ஆனந்த் குமார் பேசுகையில், தமது வெற்றிக்கான பயணத்தை விவரித்தார். மேலும் ரோட்டரியின் சேவைகளைப் பாராட்டினார்.



*DG அனில் அகர்வால், அவர் மனைவி கவிதா, PDG சமீர் ஹரியானி மற்றும் அவர் மனைவி ரூபா மாவட்ட மாநாட்டில்.*

மாநாட்டின் தலைவர் பூனம் குலாதி, மாநாட்டில் கலந்துகொண்ட அனைத்து பிரதிநிதிகளையும் வரவேற்றார். மாநாட்டுக்கு ஏற்பாடு செய்த சங்கத்தின் தலைவர் வினிதா அகர்வால், சங்கத்தின் செயல்பாடுகளை விரிவாக எடுத்துக் கூறினார். RIPR PDG சமீர் ஹரியானி, DG அனில் அகர்வால் மற்றும் மாநாட்டுக் குழுவினரை சிறப்பான ஏற்பாடுகளுக்காக பாராட்டினார். ரூபா ஹரியானி பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் குறித்து உரையாற்றினார்.

DGND அசுதோஷ் அகர்வால், ஆதரவுக்கரம் நீட்டிய அனை வருக்கும் நன்றி தெரிவித்ததுடன், வரும் ரோட்டரி ஆண்டில் சங்கத்தின் செயல்பாடுகள் பற்றிய தமது கண்ணோட்டத்தை விவரித்தார்.■

# RNT-யின் 2023–24 ஆண்டு நிர்வாகக் குழு உறுப்பினர்கள்



**இடமிருந்து:** RID 3212 DGE *முத்தையா பிள்ளை (பொருளாளர்)*, RID 3132 DGE *ஸ்வாதி ஹெர்கல் (தலைவர்)*, RID 3291 DGE *ஹீராலால் யாதவ் (செயலாளர்) மற்றும்* RID 3142 DGE *மிலிந்த் குல்கர்னி (ஆலோசகர்).*

# வெப்பத்தை வெல்ல குளுமையான வழிகள்

ப்ரீதி மேஹரா

அடுத்த சில மாதங்களுக்கு அதிகளவிலான வெப்பமான வானிலை இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, வரவிருக்கும் ஆண்டுகளில் தீவிர வானிலை நிகழ்வுகள் இந்தியாவின் பல பகுதிகளில் கோடைகால வெப்பநிலை தாங்கக்கூடிய வரம்புகளுக்கு அப்பால் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

குளிரூட்டிகளை நிறுவுவது அதை வாங்க முடிந்தவர்களின் வழக்கமான பதில். இருப்பினும், குளிரூட்டிகள் வளிமண்டலத்தில் நச்சு உமிழ்வை வெளியேற்றுகின்றன, அதிக சக்தியை உட்கொள்கின்றன மற்றும் சுற்றுச்சூழலை மேலும் வெப்பமாக்குகின்றன, இதனால் ஒரு தீய சுழற்சியை உருவாக்குகிறது. இன்றைய உலகில் ஆற்றலைச் சேமிப்பதும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும் ஒரு அவசரப் பொறுப்பாக இருக்க, நாம் ஒவ்வொருவரும் நமது கிரகத்தின் மீது சுமத்தும் சுமையைக் குறைப்பதை உறுதிசெய்ய நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். இயற்கையின் மீதான பாதிப்பைக் குறைக்கவும் அதே வேளையில் நம்மை வசதியாக வைத்திருக்கவும் நாம் எடுக்கக் கூடிய சில எளிய வழிமுறைகள் இங்கே:

தொடக்கமாக, நம் வீடுகளுக்குள் வெப்பநிலையைக் குறைக்கவும், குளிரூட்டிகளின் மேல் நாம் செலுத்தும் சுமையை எளிதாக்கவும் கலப்பின தீர்வுகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். உங்கள் வீடு குளிர்ச்சியாக இருந்தால், மின்சாரத்தின் சுமை குறையும், உங்கள் கார்பன் தடமும் குறையும். வீட்டிற்குள்ளும் வெளியேயும் செடிகளை வளர்ப்பதால் ஏற்படும் வித்தியாசத்தை கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

சுற்றுச்சூழல் நிபுணர்களின் கூற்றுப்படி, மூலோபாய ரீதியாக நடவு செய்யும் போது பசுமையானது வீட்டின் உட்புற வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க குறைப்பைக் கொண்டுவரும். ஒரு வீட்டின் கிழக்கு மற்றும் மேற்குப் பக்கத்தில் வளர்க்கப்படும் மரங்கள் சூரியனைத் தடுக்கவும், உட்புறத்தை குளிர்ச்சியாகவும் வைத்திருக்க உதவுகின்றன. எனவே, நீங்கள் ஆண்டின் பெரும்பகுதி வெப்பமான நகர்ப்புற சூழலில் வாழ்கிறீர்கள் என்றால், பெரிய மற்றும் இலைகள் கொண்ட மரங்களை நடவு செய்வது நல்லது. இதனால் வரும் ஆண்டுகளில் அவை மிகவும் விரும்பிய நிழலை வழங்கும்.

சிறிய தாவரங்களும் குளிர்ச்சியான விளைவைக் கொண்டுள்ளன. சில குளிர்ந்த வீடுகள் அவற்றின் வெளிப்புற சுவர்களில் படரும் கொடிகளை வளர்க்கின்றன. பூக்கும் பருவத்தில் பச்சை மற்றும் வண்ணமயமான தோற்றத்தைத் தருவதை தவிர, அவை உள்ளே வெப்பநிலையைக் குறைக்கின்றன. கொடிகளை



படிக்கட்டின் கைபிடிகள், வேலிகள் மற்றும் பால்கனி மதில்சுவர்கள் ஆகியவற்றில் படரச்செய்யலாம். அவை பழம் அல்லது காய்கறியை விளைவித்தால், மேலும் நன்மையே. சுவர்களுக்கு எதிராக செங்குத்தாக செடிகளை வளர்ப்பதும் இதேபோன்ற நல்ல விளைவைக் கொண்டுள்ளது.

வெப்பத்தைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்குமாறு கூரைகளை மாற்றலாம். பலர் கான்கிரீட் கூரைகளால் உறிஞ்சப்படும் வெப்பத்தின் அளவைக் குறைக்கும் பிரதிபலிப்பு வெள்ளை வண்ணப்பூச்சுகளைப் பயன்படுத்துகின்றனர். எனது நண்பர்கள் சிலருக்கு கூரை தோட்டம் உள்ளது. இது கூரை இடத்தை எடுத்துக்கொண்டாலும், வெப்பத்தை குறைக்க பெரிதும் உதவுகிறது.

ஜன்னல்களை அலங்கரிப்பது குளிர்ச்சியை சேர்க்கக்கூடிய மற்றொரு தீர்வாகும். நேரடியாக சூரிய ஒளியில் இருந்து வீட்டைக் காப்பாற்ற, நீங்கள் பிரதிபலிப்பு சாயல் சாளரத்தை பயன்படுத்தலாம் அல்லது ஜன்னல் வெளிப்புறத்தில் பந்தல்களை அமைக்கலாம். அல்லது வெள்ளை நிற பிரதிபலிப்பு கொண்ட இருண்ட திரைச்சீலைகளைப் பயன்படுத்தலாம். இது அதிக வெப்பத்தைத் தடுக்கிறது.



பின்னர் மற்ற வழக்கமான பசுமை தீர்வுகளும் உள்ளன. சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் மின் சேமிப்பு மின்விசிறிகளில் முதலீடு செய்யலாம். இவை அதிவேக, தூசி இல்லாத மின் விசிறிகள், அவற்றின் ஆற்றல் திறனுக்காக சான்றளிக்கப் பட்டுள்ளன. இந்த ஆண்டு ஜனவரி முதல் மின்விசிறிகளுக்கான ஆற்றல் திறன் மதிப்பீட்டை மின் உற்பத்தியாளர்கள் கட்டாயம் பெறவேண்டும். மதிப்பீடு என்பது ஒரு வாட்டேஜ் ஆற்றலுக்கு பெறப்படும் காற்றின் அளவைக் குறிக்கிறது. எளிமையாகச் சொன்னால், ஒவ்வொரு வாட் நுகர்வுக்கும் மின்விசிறி எவ்வளவு காற்று விநியோகம் செய்யும் என்பதை இது காட்டுகிறது. அதிக சேவை மதிப்பு என்பது காற்று சுழற்சியில் சமரசம் செய்யாமல் விசிறி அதிக ஆற்றல் திறன் கொண்டிருப்பதாகும்.

டிஹைமிடிஃபையரை வாங்குவதும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு யோச னையாகும், குறிப்பாக நீங்கள் கடலோர நகரத்தில் வசிக்கிறீர்கள் என்றால். இங்கே வெப்பத்தைப் போலவே ஈரப்பதமும் உங்களை மிகவும் சங்கடப்படுத்தும். ஒரு டிஹைமிடிஃபையர் காற்றில் இருந்து அதிகப்படியான நீரை உறிஞ்சி, உங்களை குளிர்ச்சியாக உணர வைக்கிறது. கூடுதல் நன்மையாக, வீட்டை புஞ்சை இல்லாமல் வைத்திருக்க உதவுகிறது.

குளிரூட்டிகளை நீங்கள் அவசியம் என்று நினைத்தால் சுற்றுச்சூழல் நட்பு மற்றும் ஆற்றல் திறன் கொண்ட ஒரு பொருளை அடையாளம் காண்பது புத்திசாலித்தனமாக இருக்கும். உங்கள் குளிரூட்டிகளின் ஆற்றலை எவ்வாறு சேமிப்பது என்பதற்கான சில குறிப்புகள் இங்கே:

குறைந்த செயல்திறன் கொண்ட மாடல்களை விட ஆரம்பச் செலவு அதிகமாக இருந்தாலும், ஆற்றல் திறன் பணியகத்தால் வழங்கப்படும் மிக உயர்ந்த நட்சத்திர மதிப்பீட்டைக் கொண்ட குளிரூட்டிகளில் முதலீடு செய்வதே உங்களுக்கு சிறந்ததாகும். அவற்றின் நட்சத்திர மதிப்பீடு அதன் குளிர்ச்சித் திறனைக் குறிக்கிறது. அதிகபட்ச மதிப்பீடு 5-நட்சத் திரங்கள் பெற்ற சாதனம் குறைந்த சக்தியைப் பயன்படுத்தி வேகமாக குளிர்ச்சியடைய செய்யும். இந்த செயல்திறன் நிலை ஒன்று, இரண்டு, மூன்று அல்லது நான்கு நட்சத்திரங்கள் என சான்றளிக்கப்பட்ட அலகுகளுடன் குறைகிறது.

உங்கள் குளிரூட்டிகளை தேர்வு செய்தபின், அதை நிறுவுவதில் கவனமாக இருக்க வேண்டும். உள்ளூர் எலக்ட்ரீஷியன்களை விட உற்பத்தியாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட தகுதி வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களின் சேவைகளைப் பயன்படுத்துவது புத்திசாலித்தனமானது. குளிரூட்டியின் வெளிப்புற அலகு அதிக நேரடி சூரிய ஒளியில் நிறுவப்படாததை உறுதிசெய்ய வேண்டும். எந்த கசிவுகளும் இல்லாத கதவுகள் மற்றும் ஜன்னல்கள் கொண்ட அறை உங்கள் குளிரூட்டிகளின் சுமையைக் குறைக்கவும் உதவுகிறது.

உங்கள் தெர்மோஸ்டாட்டை 20–25 டிகிரி செல்சியஸ் இடையே வசதியான வெப்பநிலையில் அமைக்கவும். குளிரூட்டி ஆற்றல் திறன் கொண்டதாகவும், உங்கள் அறையை சுற்றுப்புற மற்றும் குளிர் வெப்பநிலையில் வைத்திருக்க 24 டிகிரி சிறந்த வெப்பநிலை என்று சில நிபுணர்கள் கருதுகின்றனர்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

இசை & மெல்லிசை

# ஷங்கர்–ஜெய்கிஷன்: பாலிவுட் இசையில் தடம் பதித்தவர்கள்

SR மது

இந்தி திரைப்பட இசை தேசிய வெறியாக மாறியது எப்போது? 1949இன் ஒப்பற்ற பர்சாத்துக்குப் பிறகுதான். ஷங்கர்-ஜெய்கிஷன் (SJ) ஏழு லதா மங்கேஷ்கரின் தனிப்பாடல்கள் உட்பட 11 இனிமையான பாடல்களை இப்படம் மூலம் உலகுக்கு வழங்கினார். பர்சாத்துக்குப் பிறகு இந்தியாவின் மொத்த இசை விற்பனையில் 70 சதவீதத்தை ஹிந்தித் திரைப்பட இசை பெறத் தொடங்கியது.

1950கள் மற்றும் 60களில், இந்த “ராம்-லக்ஷ்மண் ஜோடி” வணிக வெற்றியின் உச்சமாக இருந்தது. இசையமைப்பாளர் OP நய்யார் ஷங்கரை “திரைப்படங்களில் மிகவும் முழுமையான இசை மேஸ்ட்ரோ” என்று புகழ்ந்துள்ளார். இசையமைப்பாளர் பியாரேலால், தோஸ்திக்காக 1964ஆம் ஆண்டின் சிறந்த இசைக்கான பிலிம்பேர் விருதை தானும் லக்ஷ்மிகாந்தும் வென்றிருந்தாலும், அதே ஆண்டில் வெளிவந்த SJவின் சங்கம் தோஸ்தியை விட இசையில் சிறந்ததாக கருதுவதாக கூறினார்.

பர்சாத் போன்ற ஒரு அற்புதமான பிளாக்பஸ்டர் மூலம் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கிய முதல் இசையமைப்பாளர்கள் S J தான். நௌஷத், SD பர்மன் மற்றும் O P நய்யார் போன்ற பிற ஜாம்பவான்கள் வெற்றிப் படத்தை வழங்குவதற்கு முன்பு சில தோல்விகளைச் சந்தித்தனர். பர்சாத் மூலம் வேறு சில முதல்களையும் S J செய்துள்ளனர். அப்படம் பாலிவுட்டுக்கு அதன் முதல் பிரபலமான மழைப் பாடல் (பர்சாத் மே ஹம்சே மைல்), அதன் முதல் பிரபலமான காபரே பாடல் (பாட்லி கமர் ஹை) மற்றும் அதன் முதல் தலைப்புப் பாடலை வழங்கியது.

SJ பாலிவுட்டுக்கு அதன் முதல் பிரபலமான கனவு காட்சியை ஆவாரா (தேரே பினா ஆக் யே சாந்தினி) மூலமும், அதன் முதல் சர்வதேச அளவில் பிரபலமான பாடல் — ஆவாரா ஹூன் ஆகியவற்றையும் வழங்கினர். ஒரு படத்திற்கு 5 லட்சம் சம்பளம் வாங்கிய முதல் இசையமைப்பாளர்கள் S J.

அவர்கள் தரம் மற்றும் அளவு இரண்டிலும் தனித்து நிற்கிறார்கள் என்று ஜாவேத் அக்தர் குறிப்பிட்டுள்ளார். அவர்களின் இசை வெகுஜன பொழுதுபோக்கை புதிய நிலைக்கு கொண்டு சென்றிருந்த போதும், அவர்கள் இடைவிடாத பெரும்

*ஷங்கர் சிங் ரகுவன்ஷி மற்றும் ஜெய்கிஷன் தயாபாய் பஞ்சல்.*



பிளாக்பஸ்டர்களை உருவாக்கினர், ஒவ்வொரு பிளாக்பஸ்டரும் ஒன்றல்ல பல வெற்றிப் பாடல் களைக் கொண்டிருந்தது, இது அவர்களின் தொழில் வாழ்க்கையின் தனித்துவமான அம்சமாகும். அவர்களின் இசையின் வரம்பு மற்றும் விதங்கள் குறிப்பிடத்தக்கது.

இருவரும் சுமார் 170 படங் களுக்கு இசையமைத்துள்ளனர்; அதில் 75 சதவிகிதம் மாபெரும் வெற்றிகள். அவர்களின் பல படங்கள் பொன்/வெள்ளி விழாவைக் கொண்டாடியுள்ளது

அவர்களின் வெற்றி பல இயக்குனர்கள், நட்சத்திரங்கள் மற்றும் பாடகர்கள், மற்றும் ஏற்பாட்டாளர்கள், வாத்தியக் காரர்கள், தாள கலைஞர்களின் என ஒட்டுமொத்த இசைத் துறையையும் மூழ்கடித்தது. இந்த ஜோடி வெற்றியின் பிரகாசமான தாயத்து என்று கருதப்பட்டதில் ஆச்சரியமில்லை. நடிகர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் இசையமைத்தால் ஒரு படத்திற்கான நிதி உறுதி செய்யப்பட்டது.

இந்த ஜோடி ஒன்பது பிலிம்பேர் விருதுகளை வென்றுள்ளது — சோரி சோரி (1956), அனாரி (1959), தில் அப்னா பரீத் பராய் (1960), ப்ரொஃபசர் (1962) சூரஜ் (1966), பிரம்மச்சாரி (1968), பெச்சான் (1970), மேரா நாம் ஜோக்கர் (1971) மற்றும் பெய்மான் (1972). இவர்களுக்கு 1968இல் பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டது.

S Jவின் சாதனைகளில் ஒன்று ராகா ஜாஸ் ஸ்டைல் என்ற தலைப்பில் ஆல்பம் ஒன்றை வெளியிட்டது, அதில் அவர்கள் 11 ராகங்களை ஜாஸ் வடிவத்தில் வழங்கினர்.



### ஷங்கர் வெர்சஸ் ஜெய்கிஷன்

சங்கரும் ஜெய்கிஷனும் மாறுபட்ட ஆளுமைகளையும் பாணிகளையும் கொண்டிருந்தனர். ஜெய்கிஷனை விட ஏறக்குறைய 10 வயது மூத்த ஷங்கர், குடிப்பழக்கம் இல்லாத பழமைவாத குணம் கொண்டவர். அவர் வழக்கமாக வேலைக்கு சீக்கிரம் வந்து மாலை வரை தங்கியிருந்தார், சில சமயங்களில் இந்திய கிரிக்கெட் கிளப்புக்கு சென்று தேநீர் அருந்துவார். ஜெய்கிஷன் பரவச மான புதுமைவாதி, அவர் வாழ்க்கையை ராஜா போல வாழ்ந்து பேஷன் ஐகானாக திகழ்ந்தார். ஸ்காட்ச், ஆடம்பரமான கார்கள் மற்றும் உயர்மட்ட உணவகங்களை நேசித்தார் மற்றும் எந்த விருந்திலும் சுவாரசியம் ஊட்டுபவராக இருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில், கெய்லார்ட்ஸில் ஆடம்பரமான பாலிவுட் பார்ட்டி ஒன்று நடைபெற்றது. இந்திய சினிமாவின் தலைசிறந்த மூவர் – ராஜ் கபூர், திலீப் குமார், தேவ் ஆனந்த் அதில் கலந்து கொண்டனர், அவர்களை ரசிகர்கள் கும்பலாகச் சூழ்ந்தனர். திடீரென்று ஒரு சலசலப்பு ஏற்பட்டது — ஜெய்கிஷன் உள்ளே வந்தார். ரசிகர் கூட்டம் அந்த மூவரையும் விட்டுவிட்டு ஆட்டோகிராஃப்களுக்காக அவரை நோக்கி சென்றது. “மூவரும் அதிர்ச்சியடைந்தனர், ஆனால் சிரித்தனர்,” என்கிறார் நடிகர் அன்னு கபூர்.

பல வாத்தியகங்கள், இந்திய பாரம்பரிய இசை மற்றும் நடன வடிவங்களில் தேர்ச்சி பெற்ற ஷங்கர் இருவரில் பல்துறை திறன் கொண்டவர். ஜெய்கிஷன் பின்னணி இசை மற்றும் காதல் பாடல்களில் ஒரு மேதை. ஷங்கருக்கு பைரவி ராகமும், ஜெய்கிஷனுக்கு சிவரஞ்சினி ராகமும் பிடிக்கும். ஷங்கர் வலது கையால் பியானோவை டியூன் செய்தார், ஜெய்கிஷன் இடது கையால் அதை செய்தார். ஷங்கர் வழக்கமாக சைலேந்திரா எழுதிய பாடல்களுக்கு இசையமைத்தார், ஜெய்கிஷன் ஹஸ்ரத்— ஜெய்பூரியின் வரிகளுக்கு இசையமைத்தார்.

1963இல், ஜெய்கிஷன் ஒரு தொழிலதிபரின் மகளான பல்லவியை மணந்தார். இந்த உறவுக்கு அப்பெண்ணின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். மணப்பெண்ணுக்கு அவளது தந்தை இல்லாததால் ஷங்கர் அவருக்கு கன்யாதானம் செய்து வைத்தார்.

### S Jவின் வாழ்க்கையின் பரிணாமம்

ஷங்கர் சிங் ரகுவன்ஷி மத்தியப் பிரதேசத்தில் பிறந்த பஞ்சாபி, ஆனால் வளர்ந்தது ஆந்திராவில். அவர் ஒரு சிறந்த தபேலா



1. S J, *ரீபி மற்றும் இசையமைப்பாளர்கள்*
2. *ஷங்கர் ஆஷா போன்ஸ்லே மற்றும் லதா மங்கேஷ்கருடன்*
3. *நூதனுடன் ஷங்கர் ஜெய்கிஷன்*
4. *பேகுனா படத்தில் ஜெய்கிஷன்*
5. *ஷங்கர், லதா மங்கேஷ்கர் ஜெய்கிஷன் மற்றும் முகேஷ்*
6. *ஷங்கர், ஜெய்கிஷன் ப்ரித்விராஜ் கபூருடன்.*
7. *சாரதாவுடன் சூரஜ் படத்திற்கான விருது வாங்கியப்பின்*
8. *நர்கிஸ் மற்றும் ராஜ்கபூர் ஸ்ரீ 420 படத்தில்*



1





2





3

வாசிப்பாளர், சிறந்த மல்யுத்த வீரர் மற்றும் கதக் நடனத்தில் பயிற்சி பெற்றவர். பம்பாய்க்குச் சென்ற அவர், சித்தார், துருத்தி போன்ற வாத்தியங்களில் தேர்ச்சி பெற முயன்றார். பிருத்விராஜ் கபூர் நிறுவிய பிருத்வி தியேட்டரிலும் சிறு வேடங்களில் நடித்தார்.

1929ஆம் ஆண்டு குஜராத்தின் பல்சாரில் பிறந்த ஜெய்கிஷன் பஞ்சால், ஹார்மோனியம் வாசிப்பதில் வல்லவர், மேலும் பம்பாய்க்குச் செல்வதற்கு முன், நல்ல குருக்களிடம் ஹார்மோனியம் மற்றும் இசை இரண்டிலும் பாடங்களைக் கற்றார்.

ஷங்கரும் ஜெய்கிஷனும் பம்பாயில் சந்தித்து நல்ல நண்பர்கள் ஆனார்கள். ஜெய்கிஷனுக்கு பிருத்வியுடன் ஹார்மோனியம் வாசிக்கும் வேலையை ஷங்கர் வாங்கித் தந்தார். பின்னர் ராஜ்கபூர் தனது முதல் படமான ஆக் படத்திற்காக இருவரையும் இசையமைப்பாளர் ராம் கங்குலியிடம் உதவியாளர்களாக சேர்த்தார்; இசை மிதமான வெற்றியைப் பெற்றாலும், படம் தோல்வியடைந்தது.

அண்தாஸில் நௌஷத்தின் இசையால் ராஜ் கபூர் ஈர்க்கப் பட்டார், மேலும் பர்சாத் அண்தாஸை மிஞ்ச வேண்டும் என்று விரும்பினார். சில கருத்து வேறுபாடுகளுக்குப் பிறகு பர்சாத்தின் இசையமைப்பாளராக கங்குலியை நீக்கிவிட்டு ஷங்கரை நியமனம் செய்தார்.

ஷங்கரின் வற்புறுத்தலின் பேரில், ஜெய்கிஷன் அவருடன் இசையமைப்பாளராக இணைந்தார். குழுவில் பாடலா சிரியர்கள் ஷைலேந்திரா மற்றும் ஹஸ்ரத்-ஜெய்புரி ஆகியோர் இணைந்தனர். பாடல்கள் அபாரமான வெற்றி பெற்றது.

S Jஇன் வளமான வாழ்க் கையை மூன்று கட்டங்களாக


4


5


8



6


7

பிரிக்கலாம்; பர்சாத், ஆவரா, ஆஹ், ஸ்ரீ 420, பூட் பாலிஷ், சோரி சோரி-பாலிவுட் இசையை மறு வரையறை செய்த இந்த படங்கள் உட்கொண்ட இளம் ராஜ் கபூர் காலம். இந்த ஆறு படங்களும் பாலிவுட்டுக்கு 50 மெல்லிசை களைக் கொடுத்தன, அவற்றில் பெரும்பாலானவை உன்னதமான விருந்துகள்.

முஜே கிசிஸே பியார் ஹோ கயா (பர்சாத்தில் லதா), ஆவாரா ஹூன் (ஆவாராவில் முகேஷ், சர்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்திய பாடல்); மேரா ஜூதா ஹை ஜப்பானி (ஸ்ரீ 420 இல் முகேஷ்); பியார் ஹுவா இக்ரர் ஹுவா (ஸ்ரீ 420 இல் லதா மற்றும் மன்னா டே); ரசிக் பால்மா (சோரி சோரியில் லதா) போன்ற பாடல்களால் இளைஞர் பெரியவர் யாராக இருந்தாலும் இந்தியா முழுவதும் வசீகரம் செய்தது.

இரண்டாம் கட்டம் பாரம்பரிய இசையிலான அவர்களின் திறமையை வெளிப்படுத்தியது. இது 1956இல் சீமா உடன் தொடங்கியது. S Jவிற்காக லதாவின் பரவசமூட்டும் மன் மோகனா இந்தி சினிமாவில் மிகவும் கடினமான கிளாசி க்கல் இசையமைப்பாக கருதப்படுகிறது. மன்னா டேயின் அழியா ரத்தினமான தூ பியார் கா சாகர் ஹையையும் இப்படம் கொண்டிருந்தது.

அதை தொடர்ந்து வந்தது பசந்த் பஹார், மன்னா டே (சுர் நா சஜே) மற்றும் முகமது ரஃபி (துனியா நா பாயே) ஆகிய இருவரும் பாடிய முத்துக்கள் அதில் இடம்பெற்றன. ஆனால் அவர்களின் மைல்கல் பாடல் கேதகி குலாப் ஜூஹி, மன்னா டே மற்றும் இந்துஸ்தானி இசையின் மேதை பண்டிட் பீம்சென் ஜோஷிக்கும் இடையேயான போட்டியாக திரைப்படத்தில் காட்டப்பட்டது. பீம்சென் ஜோஷியை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதற்காக மன்னா டே பம்பாயை விட்டு வெளியேற விருந்தார், ஆனால் அவரது மனைவியால் மனமாற்றம் அடைந்தார். இப்பாடல் சினிமாவில் கிளாசிக்கல் இசையின் வெற்றியாகப் போற்றப்பட்டது.

பாலிவுட்டின் சிறந்த தசாப்தமான 1960s உற்சாகமான, உணர்சிபுர்வமான, கிளர்ச்சியூட்டும் பாடல்களை - நாட்டுப்புறம், கிளாசிக்கல், ராக் அண்ட் ரோல், பஜன்கள் மற்றும் கவாலிகள் - கொண்டிருந்தது. பாடல்களுடன், தயாரிப்பாளர்கள் காதல் படங்களை மலைவாச ஸ்தலங்களில் மற்றும் உலகின் கவர்ச்சி தலைநகரங்களான



*சங்கர், ஜெய்கிஷன், திலீப்குமார் மற்றும் ராஜ்கபூருடன் ஒரு விருந்தில்.*

பாரிஸ், டோக்கியோ, லண்டன், ரோம் ஆகிய இடங்களிலும் படம்பிடித்தனர்.

S Jவின் மூன்றாம் கட்டம் இந்த தசாப்தத்தில் தொடங்கியது, சூரஜ், அஸ்லி நக்லி, ஜுக் கயா ஆஸ்மான், பிரின்ஸ், ஹரியாலி அவுர் ரஸ்தா, அன் ஈவினிங் இன் பாரிஸ், சங்கம், லவ் இன் டோக்கியோ, ப்ரொஃபசர், ஜிந்தகி, ஆயி மிலன் கி பேலா, துனியா, தில் ஏக் மந்திர், ராஜ்குமார், தும்சே அச்சா கவுன் ஹை, தில் அப்னா அவுர் ப்ரீத் பராய், பிரம்மச்சாரி, கும்ரா, தீஸ்ரீ கசம் போன்ற படங்கள் மூலம் இருவரும் வணிகரீதியாக ஆட்சி செய்தனர்.

அஜீப் தஸ்தான் ஹை யே (லதா, தில் அப்னா அவுர் ப்ரீத் பராய்,1960); தேரா மேரா பியார் அமர் (லதா, அஸ்லி நக்லி,1962); யாத் நா ஜாயே பீட் டினோன் கி (ரஃபி, தில் ஏக் மந்திர்,1963); தோஸ்த் தோஸ்த் நா ரஹா (முகேஷ், சங்கம்,1964); பஹாரோன் பூல் பர்சாவோ (ரஃபி, சூரஜ்,1966); பான் கயே சயான் ஹமாரோ (ஆஷா போஸ்லே, தீஸ்ரீ கசம்,1966); படன் பெ சிதாரே (ரஃபி, பிரின்ஸ்,1969) ஆகியவற்றை உங்களுக்கு நினைவிருக்கிறதா?

## S Jஇன் வழிமுறை

இரண்டு தசாப்தங்களாக பொதுமக்களை ஆட்டிப்படைத்த S J வெறிக்கு என்ன காரணம்? இருவரின் தனிப்பட்ட திறமைகள் ஒருவருக்கொருவர் வலுப்பெற துணைபுரிந்தன. அவர்களின் மெய்மறக்க செய்யும் மெல்லிசைகள் சிறந்த பாடகர்களால் பாடப்பட்டது. மற்றொரு காரணி: 60 பாடகர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் துணைக் கலைஞர்களைக் கொண்ட அவர்களின் மாபெரும் ஆர்கெஸ்ட்ரா இசைக்கு ஒரு புதிய ஆர்வத்தையும் புத்துணர்வையும் அளித்தது. அதன் இறுதி முடிவை பொதுமக்கள் விரும்பினர்.

## உறவில் விரிசல்

துரதிர்ஷ்டவசமாக, 1960களில்



**இடமிருந்து:** *மனோஜ் குமார், சங்கர், ராஜேந்திர குமார், ராஜ்கபூர், ஜெய்கிஷன் மற்றும் திலீப்குமார்.*

S J உறவில் விரிசல்கள் வர ஆரம்பித்தன. தொழில் துறையிலும் பொதுமக்களிடமும் ஜெய்கிஷனின் பிரபலத்தைக் கண்டு ஷங்கர் பொறாமைப் பட்டதாக கூறப்படுகிறது. அவர்கள் 1960களில் தனித் தனியாக இசையமைக்கத் தொடங்கினர் (ஆனால் எப்போதும் S J பெயரின் கீழ்தான்) இது படிப்படியாக இசையின் தரத்தை பாதித்தது. சங்கம் படத்தின் பாடலான யே மேரா பிரேம் பத்ரா பத்கர் பாடலுக்கு தான் இசையமைத்ததாக ஃபிலிம்பேரில் ஜெய்கிஷன் வெளியிட்ட கட்டுரை ஷங்கரை வருத்தப்படுத்தியது. இருவரில் யார் ஒரு குறிப்பிட்ட பாடலை இயற்றினார்கள் என்பதை ஒருபோதும் வெளியிடக்கூடாது என்ற அவர்களின் ரகசிய புரிதலை இது மீறியது. மேலும், பினாகா கீத்மாலா (இசை பிரபலத்தின் சோதனையாகக் கருதப்பட்ட வானொலி நிகழ்ச்சி) ஜெய்கிஷன் இசையமைத்த யே மேரா பிரேம் பத்ரா பட்கருக்கு முதலிடத்தை அளித்தது, ஷங்கர் அதே படத்திற்கு இசையமைத்த தோஸ்த் தோஸ்த் நா ரஹாவிற்கு இரண்டவது இடத்தை அளித்தது. இதில் முறைகேடு நடந்ததாக ஷங்கர் முகாம் குற்றம் சாட்டியுள்ளது.



இடமிருந்து: *ஹஸ்ரத் ஜெய்புரி, ஜெய்கிஷன், ராஜ்கபூர் சங்கர் மற்றும் சைலேந்திரா.*

சாரதாவை ஷங்கர் ஊக்கு வித்ததும், அவரது குரலைப் பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தியதும் பிரிவினையை மோசமாக்கியது. (லதாவின் காதல் மனிதர்களை குருடாக்கும் என கேள்விப்பட்டுள்ளேன், ஆனால் அது அவர்களை காது கேளாதவர்களாக ஆக்கும் என்று எனக்குத் தெரியாது என்ற கிண்டல் இசைத்துறையில் பிரபலமாக பேசப்பட்டது ஷங்கருக்கு மனக்கவலையை ஏற்படுத்தியது.

**இறப்பு மற்றும் சரிவு**

செப்டம்பர் 12, 1971இல், ஜெய்கிஷன் கல்லீரல் இழைநார் வளர்ச்சியால் காலமானார். அவருக்கு வயது 42. ஷங்கர் இடிந்து போனார், ஆனால் தொடர்ந்து S J பெயரின் கீழே பணிபுரிந்தார். இருப்பினும், RK மற்றும் பிற பெரிய திரைப்படத்தயாரிப்பாளர்கள் மற்ற இசையமைப்பாளர்களைத் பயன்படுத்த ஆரம்பித்தனர். மேலும் அவர்கள் ஷங்கரை சிறிய இசைக்குழுவைப் பயன் படுத்தவும் செய்தார்கள். 1973இல் ராஜ், லக்ஷ்மிகாந்த்-பியாரேலாலை பாபி திரைப்படத்திற்கு ஒப்பந்தம் செய்தது அவருக்கு பெருத்த அடியாக இருந்தது. ஷங்கர் தொடர்ந்து உழைத்து, சில நல்ல பாடல்களை உருவாக்கினார். ஆனால் ஜெய்கிஷன் இல்லாமல், மறைந்த பாடலாசிரியர் ஷைலேந்திராவும் இல்லாமல், லதாவின் ஆதரவும் இல்லாமல், அவர் தனது முன்னாள் சுயத்தின் நிழலாக இருந்தார். அப்படி உடைந்திருந்த ஷங்கர் ஏப்ரல் 26, 1987 அன்று காலமானார்.



எழுத்தாளர்
மூத்த பத்திரிகையாளர்
மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப்
மெட்ராஸ் சவுத் உறுப்பினர்

# குடல் சீராக இருந்தால்தான் உடல் ஆரோக்கியமாக இருக்கும்

பரத் — ஷலன் சவூர்

நம்மிடையே இரண்டு சக்திவாய்ந்த கூட்டாளிகள் உள்ளனர். ஒன்று நமது மனது. மற்றொன்று குடல் இயக்கம். இந்த இரண்டும் இருந்தால் நாம் மீண்டும் படுகுழியில் விழாமல் விழிப்புணர்வுடன் நேராக நிமிர்ந்து நிற்க உதவும்.

மருந்துகள் மரத்துப்போகச் செய்யும். ஆனால், காலம்தான் குணப்படுத்தும். எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும் அது மனதில் சிறகடித்து பறக்கிறது. நம்மை கீழே தள்ளும் விஷயங்களை மறக்கச் செய்கிறது. அதனால் நாம் தொடர்ந்து பறக்க முடியும்.



## நாம் யார்?

நம்மை புரிந்துகொண்டால் எதையும் சமாளிக்கலாம். வாழ்க்கையில் 15 சதவீத மனநிறைவு என்பது வெளிப்புற சூழ்நிலைகளால் ஏற்படுகிறது. அதாவது நிதி மற்றும் சமூக அந்தஸ்து, கல்வி, பொழுது போக்கு, இனவெளிப்பாடு மற்றும் வயது இவற்றை குறிப்பிடலாம். 25 சதவீதம் மரபணுக்களால் தீர்மானிக்கப்படுகிறது. 60 சதவீதம் நாம் எப்படி சிந்தித்து செயல்படுகிறோம், எப்படி நடந்துகொள்கிறோம், நமது வாழ்க்கை முறை இவைகளை பொறுத்தது. நமது மரபணுக்கள் ஒரு ப்ளூபிரிண்ட் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவை நம் எண்ணத்தாலும் வாழ்க்கை முறையாலும் தூண்டப்படுகின்றன. இது கவர்ச்சியானது. அதாவது சரியான வாழ்க்கை முறை மூலம் எதிர்மறையான மரபணுக்களை நேர்மறையாக மாற்றி செயல்படுத்த முடியும்.

இந்த கண்டுபிடிப்பு மனநல மருத்துவர்களை விரிவாக சிந்திக்க வைத்தது. மேலும் சில அறிவார்ந்த மற்றும் பயனுள்ள முடிவுகளுக்கு வர புள்ளிகளை இணைக்கிறது. நமது குடலியக்கத்தில் 39 டிரில்லியன் நுண்ணுயிரிகள் உள்ளன. அவற்றில் குறிப்பிட்ட அளவு மரபணு பொருள்களும் உள்ளதால் மகிழ்ச்சிக்கான தூண்டுதல்கள் குடலில் உள்ளனவா? அவற்றை நாம் எவ்வாறு செயல்படுத்துகிறோம்?

சுவாரஸ்யமாக ஆராய்ச்சியாளர்கள் ஒன்றை கண்டுபிடித்தனர். அதாவது FMT என்ற நடைமுறை மூலம் மனச்சோர்வில்லாத நபரின் ஆரோக்கியமான பாக்டீரியாவை மனச்சோர்வுடைய நோயாளியின் இரைப்பை குழாயில் அறிமுகப்படுத்துவதன் மூலம் அவரின் மனநிலை கணிசமாக மேம்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனவே நமது குடலுக்கும், மனச்சோர்வுக்கும் என்ன தொடர்பு? நமது குடலும் மூளையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்கின்றன என்பதுதான் அது.

நாம் உணவு சாப்பிடும்போது இந்த நுண்ணுயிரிகள் பயனுள்ள இரசாயனங்களை உற்பத்தி செய்கின்றன. அவை மூளை முதல் குடல் வரையில் உள்ள வாகஸ் நரம்பு மூலம் செய்தியை கொண்டு செல்கின்றன. இந்த நரம்பு மூளையின் தண்டுகளில் தொடங்கி நுரையீரல்,

தமனி வழியாக மார்புக்குச் செல்கிறது. பின்னர் அங்கிருந்து கிளையாக குடல் உட்பட பிற உறுப்புகளுக்குச் செல்கிறது. இந்த நரம்பு செரிமானத்தின் போது குடல் சுருக்கத்தை கட்டுப்படுத்துகிறது. மேலும் இதயத்துடிப்பையும் கட்டுப்படுத்துகிறது.

**குடல் மூளை சலசலப்பு**

தொடர்பு என்பது இருவழிப்பாதை. நாம் உண்ணும் உணவால் குடலுக்கு தொந்தரவு ஏற்பட்டால் அது மூளைக்கு துயரமான சமிக்ஞைகளை அனுப்பும். கவலை அல்லது சோகத்தால் அழுத்தப்படும் மூளை குடலுக்கு துன்பமான சமிக்ஞைகளை அனுப்பும். இந்த இரு வழி சமிக்ஞைகள் எதிர்மறையாக இருக்கும் போது குடலில் கெட்ட பாக்டீரியாக் களை அதிகரிக்கும். கெட்ட பாக்டீரியா அழற்சியான இரசாயனங்களை உற்பத்தி செய்து மூளைக்கு அனுப்பும். இதனால் குடல் அழற்சி என்பது மனச் சோர்வை ஏற்படுத்தலாம். இதை நாம் ஏதாவது ஒரு சமயத்தில் உணர்ந்திருக்கிறோம். பதற்றத்தால் வயிற்றில் பட்டாம் பூச்சிகள் பறப்பது போல் இருக்கும். அப்போது நமக்கு குமட்டல் ஏற்படும். இந்த சூழலில் மூளையை தளர்வாக வைத்துக் கொள்ளுங்கள் என்று மனநல மருத்துவர் ஆலோச னை கூறுவார்.

**நல்ல பாக்டீரியா, கெட்ட பாக்டீரியா**

நல்ல பாக்டீரியாவும் கெட்ட பாக்டீரியாவும் சமநிலையில் இருக்கும் போது நல்ல நிலையில் இருப்பது போல் நாம் உணர்கிறோம். நல்ல பாக்டீரியா செரிமானத்துக்கு உதவுவதுடன் கெட்ட பாக்டீரியாவை கட்டுக்குள் வைக்கிறது. எனவே நல்ல பாக்டீரியா அதிக அளவில் இருக்க வேண்டுமானால், நாம் உணவு சாப்பிடுவதிலும், மருந்து உட்கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். ஆன்டி பயாடிக்ஸ் (கிருமிநாசினி) உள்ளிட்ட பல மருந்துகள் நமது குடலில் உள்ள பாக்டீரியாவை மோசமாக்கிவிடும். சில பாக்டீரியாக்கள் மறைந்து விடும். சில பாக்டீரியாக்கள் ஆரோக்கியமான அளவுக்கு அப்பால் அதிகரிக்கும். புதிய சமநிலையில் மருந்துகளை எதிர்க்கக்கூடிய பாக்டீரியாக்களை பெறுகிறோம். இந்த நேரத்தில் வயதும் ஒரு காரணியாக இருக்கும். நமக்கு வயது ஆக ஆக பாக்டீரியாக்களின் பன்முகத்தன்மை குறைகிறது. அதனால், நாம் மருந்துகளை நாடவேண்டிய சூழல் உருவாகிறது. எப்படியிருந்தாலும் நமது வயது என்னவாக இருந்தாலும் குடல் மற்றும் மூளை இரண்டையும் சரியான செயல்பாட்டில் வைத்திருந்தால் தான் ஆரோக்கிய மான வாழ்க்கையை வாழமுடியும். இங்கே நடை முறைக்குத் தேவையான பயனுள்ள யோசனைகள் கூறப்பட்டுள்ளன.

நமக்கு ஏதுவான உணவு முறையை பின்பற்றுங்கள்: பதப்படுத்தப்பட்ட உணவுகள், சர்க்கரை மற்றும் சிவப்பு இறைச்சி உணவுகளை தவிர்த்திடுங்கள். இது குடல் விரைவில் குணமடைய நியாயமான வாய்ப்பை வழங்கு கிறது. ஆன்டி பயாடிக்ஸ் அதாவது நோய் எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்ளுபவர்கள் மீண்டும் ஆரோக்கியமான நிலைக்குத் திரும்ப குறைந்தது இரண்டு மாதங்களாகும். ஆரோக்கியமற்ற நபர்களுக்கு உடலியக்கம் சரியாக 1 முதல் 2 ஆண்டுகள் வரையகலாம்.

**குடலில் நல்ல பாக்டீரியாக்களை அதிகரிக்க:** நார்ச்சத்து, இன்சுலின், சர்க்கரை கலந்த பழச்சாறுகள் உள்ளன. இவை குடலுக்கு ஊட்ட மளித்து நல்ல பாக்டீரி யாக்களை சுறு சுறுப்பாக வைத் திருக்கும். ஊட்டச்சத்து நிபுணர்கள் வெங்காயம், பூண்டு, வாழைப் பழங்கள், அக்ரூட் பருப்புகள், திராட்சைகள், மீன் எண்ணெய் மற்றும் ஓட்ஸ் உள்ளிட்ட வற்றை பரிந்துரைக்கின்றனர்.

நம்மை ஆரோக்கியமாக வைத்திருக்கும் பாக்டீரியாக்களை அதிகரிக்க உதவும் உணவு வகை களையும் சாப்பிடலாம். அதாவது தயிர், இட்லி, பனீர், பச்சை பட்டாணி, ஆப்பிள் போன்றவற்றை சாப்பிட்டால் நல்ல பாக்டீரியாவின் அளவு அதிகரிக்கும். சாப்பாட்டிற்கு முன்பு வயிறு காலியாக இருக்கும் போது சிலவற்றை சாப்பிடலாம். இவை வயிற்றில் அமிலத்தை தக்கவைக்க உதவுகின்றன. ஒரு கிண்ணத்தில் கறுப்பு திராட்சை களை போட்டு அதில் பால் ஊற்றி நன்றாக கிளறி, பின் அவற்றுடன் தயிர் சேர்க்க வேண்டும். இந்த கலவையானது பற்கள், ஈருகள், எலும்புகள், மூட்டுகள் வலுப்பெற நல்லது. மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கிறது. கொழுப்பை கட்டுப் படுத்துகிறது. இரத்த அழுத்தத்தை குறைக்கிறது மற்றும் எடை இழப்பை ஊக்குவிக்கிறது. நீங்கள் மாறுபாட்டை விரும்பினால் திராட்சைக்கு பதில் பேரிச்சையை பயன்படுத்தலாம்.

**நடைப்பயிற்சி:** நீங்கள் நடக்கும் போது அமைதியாகவும் நிதான மாகவும் உணர்கிறீர்கள். ஒரு குளியலுக்குப் பின் இந்த உணர்வு இன்னும் அதிகரிக்கும். இதில் ஒரு நல்ல செய்தி என்னவென்றால் எந்த ஒரு உடற்பயிற்சியும் உங்களின் குடலியக்கத்தை மேம்படுத்துகிறது. வாரத்தில் 5 நாட்கள் 30 நிமிட விறுவிறுப்பான நடை அல்லது 15 நிமிட ஓட்டம் தேவை என்கின்றனர் நிபுணர்கள்.

**பழக்க வழக்கங்களை ஒழுங்கு படுத்துங்கள்:** தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி எழும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங் கள். தினமும் ஒரே நேரத்தில் உணவு சாப்பிட வேண்டும். வார இறுதி நாட்களிலும் இதில் ஒரு சீரான நடைமுறையை பின்பற்ற வேண்டும். இப்படிச் செய்வது மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. குடல் வீக்கத்தை குறைக்கிறது. குடலை சீராக வைத்திருக்க உதவுகிறது.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# போர் காலக் கதைகள்



சந்தியா ராவ்


சமீபத்தில் நான் சுத்தம் செய்துகொண்டிருந்த கைப்பையில் இருந்து கீழே விழுந்த காகிதத்தில் கீறப்பட்ட வார்த்தைகள், சில ஆண்டுகளுக்கு முன்பு அட்லாண்டிக் கடலில் பறந்த போது சக பயணியுடன் நடந்த உரையாடலை நினைவூட்டியது. அவர் லண்டனில் ஒரு பெரிய ஹோட்டலுடன் தொடர்புடையவர்; அவருடைய குடும்பம் இஸ்ரேலிலிருந்து குடிபெயர்ந்தது; அவருக்கு மூன்று குழந்தைகள்; மற்றும் அவரது மனைவி ஒரு எழுத்தாளர்.

குறிப்பாக அவரது புத்தகம் ஒன்று பெரும் அலைகளை உருவாக்கியது. அதுதான் காகிதத்தில் கிறுக்கப்பட்டிருந்தது: டூ ப்ரேயர்ஸ் பிஃபோர் பெட்டைம்... நாடின் வோஜகோவ்ஸ்கி. வழக்கம்போல் புத்தகம் ஆர்டர் செய்யப்பட்டது, ஆனால் அது வந்தவுடன், நேராக புத்தக அலமாரிக்கு சென்றது, படிக்காமல், இதுவரை.

டூ ப்ரேயர்ஸ் பிஃபோர் பெட்டைம் பின் அட்டையானது, இது 11 வயதுக்கு மேற்பட்ட வாசகர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றிருந்தது. இந்த 'போர்க்கால ஆம்ஸ்டர்டாமில் காதல் மற்றும் இழப்பின் நினைவுக்குறிப்பு மற்றும் கதையான' இது, அந்த கூற்றின்படி 11 மற்றும் அனைத்து வயதினருக்கான புத்தகமாக இருந்தது. 'போர்க்கால ஆம்ஸ்டர்டாம்' எதைக் குறிக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம், மேலும் நம்மில் பலர் ஹோலோகாஸ்ட் விஷயங் களைச் சுற்றி எழுதப்பட்ட பல புத்தகங்களைப் படித்திருக்கிறோம். இதில் மிகவும் பிரபலமானது தி டைரி ஆப் ஆன் ஃபிராங்க். இது ஃபிராங்க் மரணத்திற்குப் பின் அவரின் தந்தை ஓட்டோ ஃபிராங்க்கினால் வெளியிடப்பட்டது. அன் ஃபிராங்க், தனது தாய் மற்றும் சகோதரியுடன் 1945இல் ஒரு வதை முகாமில் இறந்தார்; அப்போது அவருக்கு வெறும் 16 வயது. நெதர்லாந்தின் நாஜி ஆக்கிரமிப்பின் போது ஆம்ஸ்டர்டாமில் பதுங்கியிருந்த காலத்தில் அவள் வைத்திருந்த நாட்குறிப்பு தான் அந்த புத்தகம்.

மெக் வெயிட் கிளேட்டனின் தி லாஸ்ட் ட்ரெயின் டு லண்டன் என்ற நாவல், ஐரோப்பாவில் இருந்து ஆயிரக்கணக்கான யூதக் குழந்தைகள் கடத்தப்பட்டு பாது காப்பான நாடுகளுக்கு இடம்பெயர்ந்த கதையை அடிப்படையாகக் கொண்டது. அச்செயலுக்கு, ட்ரூஸ் விஜ்ஸ்முல்லர் அல்லது டான்டே ட்ரூஸ் என்று அழைக்கப்பட்ட ஒரு டச்சுப் பெண்மணியின் தைரியம் தான் காரணம். நாடுகள் தங்கள் எல்லைகளை மூடமூட இந்த நடவடிக்கை மேலும் மேலும் ஆபத்தானது — தற்போது பல நாடுகள் சிரிய அகதிகளுக்கு தங்கள் எல்லைகளை மூடியது போல அல்லது சிரியாவில் நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவ மறுத்தது போல அல்லது எப்படி உள்நாட்டு போர் மற்றும் துன்புறுத்தலால் காரணமாக தங்கள் தாயகத்தை விட்டு வெளியேறும் மக்களுக்கு உலகெங்கிலும் உள்ள நாடுகள் புகலிடம் மறுக்கும் கொள்கையை உருவாக்கியது போல. ட்ரூஸ் விஜ்ஸ்முல்லருக்கு சொந்தக் குழந்தைகள் இல்லை, ஆனால் அவர் யூதக் குழந்தைகளை பாதுகாப்பிற்குக் கொண்டுவர துணிச்சலான பல முயற்சிகளைச் செய்தார். ஒரு கட்டத்தில், இரண்டாம் உலகப் போரின்போது யூதர்களின் இனப்படுகொலைக்கான "இறுதி தீர்வு" திட்டத்தின் காரணியான அடால்ஃப் எய்ச்மானிடம் உதவிக்காக அவர் அணுகினார். இந்த புத்தகத்தைப் பற்றி நீங்கள் ஜனவரி 2021இல் படிக்கலாம்.

டூ ப்ரேயர்ஸ் பிஃபோர் பெட்டைம் கிளேட்டனின் சக்தி அல்லது இலக்கிய நுணுக்கத்திற்கு சற்றும் அருகில் வரமுடியாது; மற்ற ஹோலோகாஸ்ட் எழுத்துக்கள் இன்னும் சோகமான கதைகளைப் பதிவு செய்கின்றன என்று கூட நாம் கூறலாம். அப்படியிருந்தும், இது இதயத்திலிருந்து சொல்லப் பட்டது, ஒரு இளம் விமர்சகர் கூறியது போல், இது போரைப் பற்றி நிறைய கற்பிக்கிறது. தனது பாட்டி சில்லி பிட்டர்மேனும், தாத்தா யூஜினும், இரண்டாம் உலகப் போரின் போது தங்கள் மகளை (தன் அம்மா) ரெனாட்டாவையும் மகன் ஆர்தரையும் எப்படி மறைத்து வெளியேற்றினார்கள் என்ற உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டது என்று ஆசிரியர் கூறுகிறார். நாஜி ஆக் கிரமிக்கப்பட்ட ஹாலந்தில் ஒரு யூதக் குழந்தையை மறைக்க தங்கள் உயிரைப் பணயம் வைத்த வி மற்றும் ஆர்ட் வெர்ஸ்னெல் ஆகியோரின் வீர முயற்சிகளையும் இது சொல்கிறது. புத்தகத்தின் முடிவில் உள்ள புகைப்படங்கள் அனுபவத்தை நம் இதயத்திற்கு நெருக்கமாகக் ஆக்குகின்றன. முக்கியமாக, இந்தப் புத்தகம் போரின் மனமற்ற தன்மையையும், வெறுப்பு மற்றும் பாகுபாட்டின் விளைவுகளையும் மீண்டுமொருமுறை நினைவூட்டுகிறது. தனிமனிதர்களால் நிகழ்த்தப்பட்டாலும் அல்லது



அரசால் தூண்டப்பட்டாலும், மனிதாபிமானமற்ற செயல்களுக்கு மேலாக உயர்ந்து தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் மனித ஆன்மாவிற்கு இது ஒரு சான்றாகும். மனித ஆன்மா எப்போதும் மேலோங்கும் என்ற நம்பிக்கையை இது மீண்டும் வலியுறுத்துகிறது.

சில்லா, கதாநாயகி மற்றும் அவரது கணவர் எட்மண்ட் ஆகியோரின் கதாபாத்திரங்கள் மூலம் வாழ்ந்த அனுபவங்களை புத்தகம் கற்பனையாக்குகிறது. அதில் தங்களுடைய ஆறு வயதுடைய ஆண் குழந்தையையும், இரண்டு வயதுடைய பெண் குழந்தையையும், எதிர்ப்புப் படைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பான இல்லங்களுக்கு கட்டாயமாக அனுப்ப வேண்டியிருந்தது. நாஜி போலீஸ் என்ற கெஸ்டபோவிடமிருந்து தப்பிக்க, அவர்களே வெவ்வேறு நகரங்களுக்கு தலைமறைவாகவும், மறைந்திருக்கவும், செல்ல வேண்டியிருந்தது. இருண்ட, நெரிசலான தங்குமிடங்கள், கழிப்பறை வசதிகளுக்கான மிகக் குறைந்த அணுகல், சிறிதளவு உணவு மற்றும் சுத்தமான காற்று இல்லாமை என பல இன்னல்களுடன் வாழ வேண்டியிருந்தாலும் அவர்கள் எப்படியோ உயிர் பிழைக்கின்றனர். போர் முடிவுக்கு வராமல் நாட்கள், வாரங்கள், மாதங்கள் கடந்து செல்கின்றன. இதில் மிகவும் மோசமான தண்டனை அவர்களின் சிறு குழந்தை களிடமிருந்து பிரிக்கப்பட்டது; அவர்களைப் பற்றிய செய்திகளுக்காக ஏங்குகிறார்கள்.

அவர்கள் ஹான்ஸ் மற்றும் எல்லா போக்கின் வீட்டில் உள்ள மாடியில் ஒளிந்துகொண்டபோது போல, எப்போதாவது, ஒருமுறை சிறிது ஓய்வு பெறுகிறார்கள்: 'அட்டிக் ஒரு பெரிய இடமாக இருந்தது, அதை போக் குடும்பம் சேமிப்பிற்காக பயன்படுத்தியது. இது இரண்டாவது மாடியின் கூரையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது, ஏணி மூலம் மட்டுமே அணுக முடியும். அந்த அறையை மிகவும் வசதியாக மாற்ற போக் தம்பதியினர் அயராது உழைத்தார்கள். அவர்கள் உடை மாற்றும் அறையாகப் பணியாற்றுவதற்காக ஒரு பகுதியைப் பிரித்து, பழைய தரைவிரிப்புகளை விரித்து, சிறிய மாட ஜன்னல்களில் திரைகளைத் தொங்கவிட்டு, ஒரு மேஜை, நாற்காலிகள் மற்றும் பல புத்தகங்களைக் அங்கே கொண்டு வந்தார்கள்.




'பல புத்தகங்கள்'! தனிமை மற்றும் துன்புறுத்தலின் பயம் கொண்ட அந்த மிகவும் கடினமான காலங்களில், வாசிப்பு மற்றும் எழுதுதல் அவர்கள் நேரத்தை கடக்க உதவியது. அவர்கள் படித்தார்கள் அல்லது எழுதினார்கள்; சில நேரங்களில் அவர்கள் படித்து எழுதினார்கள். ஆன் ஃபிராங்க் ஒரு நாட்குறிப்பை வைத்திருந்தார், ஜவஹர்லால் நேரு சிறையில் இருந்தபோது அவரது சிறந்த புத்தகங்களில் சிலவற்றை எழுதினார், ஜெஃப்ரி ஆர்ச்சர் "ஒரு சிறை டைரி" என்ற மூன்று தொகுதி நினைவுக் குறிப்பை எழுதினார் (நான் இப்போது படிக்கத் தொடங்கியுள்ளேன்). கொரோனா வைரஸால் தூண்டப்பட்ட பூட்டுதல் போது புத்தகங்கள் ஒரு சக்தி வாய்ந்த, நேர்மறையான மாற்று மருந்தாக இருந்தன..

பொலிவியாவில் உள்ள கைதிகள் புத்தகங்களைப் படித்தால் சிறைவாச காலம் குறைக்கபடுமாம். "புக்ஸ் பிஹைண்ட் பார்ஸ்" என்ற இந்த திட்டம், பிரேசிலில் இதேபோன்ற முயற்சியின் முன்மாதிரியாக வைத்து ஆரம்பிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் தி ஸ்டோரி ஆஃப் மை எக்ஸ்பெரிமென்ட்ஸ் வித் ட்ரூத் என்ற புத்தகம் டெல்லி திஹார் சிறையில் அதிகம் தேடப்பட்ட புத்தகம்: "ஒவ்வொரு வாரமும் குறைந்தது 10 கைதிகள் இந்த புத்தகத்தை கடன் வாங்குகிறார்கள்" என்று ஒரு செய்தித்தாள் அறிக்கை கூறுகிறது. எரவாடா சிறையில் காந்தி தானே கைதியாக இருந்தபோது அது எழுதப்பட்டது என்ற உண்மை அதன் பிரபலத்தைக் கூட் டுகிறது.

சில்லாவைப் பொறுத்தவரை, எல்லா மறைவிடங்களும் நன்கு அமைக்கப் பட்டவை அல்ல. மேலும் போரின் முடிவில், சில்லாவும் எட்மண்டும் 900 நாட்களுக்கு மேல் தலைமறைவாக இருந்தனர்; அவர்கள் கிட்டத்தட்ட 1000 நாட்களாக தங்கள் குழந்தைகளை விட்டு பிரிந்திருந்தார்கள்!

அவர்கள் அதிர்ஷ்ட சாலிகள், ஏனென்றால் பல உறவினர்களை இழந்தாலும், இறுதியில் அவர்கள் குடும்பம் மீண்டும் இணைந்தது. அவர்களும் மற்றவர்களைப் போலவே, அந்த அதிர்ச்சியின் பின் விளைவுகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. 'மனைவி இல்லாத ஒரு மனிதன், கணவன் இல்லாத மனைவி, குழந்தைகள் இல்லாத பெற்றோர், பெற்றோர் இல்லாத குழந்தைகள், யாரும் இல்லாத குழந்தை என்று நினைவூட்டல்கள் எப்போதும் அழியாமல் இருந்தன. காலி இருக்கைகள், காலி வீடுகள், வெறுமையான ஆன்மாக்கள். அக்காலத்தின் அறிகுறிகள் எப்பொழுதும் இருந்தன-குறிப்பாக கோடையில் ஆஷ்விட்ஸ்ஸில் உயிர் பிழைத்தவர்களின் கரங்களில் இருண்ட மையால் பொறிக்கப்பட்ட மரண எண்கள் வெளிப்பட்டபோது' என நாடின் எழுதுகிறார்.

அனுமானமாகப் பேசினால், இனிமேல் இதுபோன்ற எண்கள் மையால் பொறிக்கப்படாமல் உலகத்தை இயங்கச்செய்யலாம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

## RC பாண்டிச்சேரி லெகசி — RID 2981



இந்தச் சங்கம் ரூ.4.5 லட்சம் மதிப்புள்ள 3 CPAP, 4 BIPAP இயந்திரங்களைப் புதுச்சேரி இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆய்வுக்கல்வி அமைப்புக்குக் கொடையளித்தது.

## RC கசியாபாத் நார்த் — RID 3012



விஜய்நகர் அரசுப் பெண்கள் இடைநிலைக் கல்லூரியின் சேதமடைந்த சுற்றுச் சுவர் ரூ.2 லட்சம் செலவில் மீண்டும் கட்டப்பட்டது.

## RC சேலம் ஃபீனிக்ஸ் — RID 2982



23 புதிய உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட, கண் பார்வைக் குறைபாடு கொண்டோருக்கான RAC ஃபீனிக்ஸ் விழிகள், மாற்றுத் திறனாளி ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி கொடையளித்தது.

## RC வைசாக் கப்புள்ஸ் — RID 3020




துர்காநகர் BVK உயர்நிலைப் பள்ளியில், 2ம் வகுப்பிலிருந்து 8ம் வகுப்பு வரை பயிலும் திறமையுள்ள மாணவர்கள் 8 பேரை இந்தச் சங்கம் ஆதரிக்கிறது.

## RC திருச்சிராப்பள்ளி மிட்-டவுன் — RID 3000



இந்தச் சங்கம் சங்கரா நல அறக்கட்டளையுடன் இணைந்து, திருச்சி இந்து மிஷன் மருத்துவ மனையில், மாற்றுத் திறனாளிகளுக்குச் செயற்கைக் கால்களை வழங்கியது.

## RC மில்க் சிட்டி சங்கம் சலிஸ்காவ்ன் — RID 3030



அரசு பள்ளி மாணவர்கள் உதவியுடன், கன்னன் காட் ஜுனோனெ கிராமத்தில் 1,000க்கும் மேற்பட்ட மரங்கள், விதைப் பந்துகள் நடப்பட்டன.

# செய்திகள்

## RC பர்கன்பூர் — RID 3040



சுபாஷ் சந்திர போஸ் பழங்குடியினச் சிறுவர் விடுதியில், 65 மாணவர்களுக்கு விளையாட்டு உடைகள், காலணிகள், கிரிக்கெட் பொதிகள் வழங்கப்பட்டன.

## RC சிக்லி ரிவர்ஃப்ரன்ட் — RID 3060

நவ்சாரி ரோட்டரி கண் கல்வி அமைப்பு உதவியுடன் கொர்காம் கிராமத்தில் நடைபெற்ற 2 கண் பரிசோதனை முகாம்களில் சுமார் 500 நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டார்கள்.



## RC ஜோத்பூர் பத்மினி — RID 3053



ரூ.15.5 லட்சம் மதிப்புள்ள 595 மேசை-இருக்கைகள் அரசுப் பள்ளிகளுக்குக் கொடையளிக்கப் பட்டன. மேலும் 150 இருக்கைகள் கொடையளிக்கப் படவுள்ளன.

## RC பட்டியாலா மிட் டவுன் — RID 3090

ஹெல்ப்பிங் ஹேன்ட்ஸ் இந்தியா ஆதரவில் 12 சக்கர நாற்காலிகள், நடக்கும் தடிகள் ரௌங்க்ளா ஆசிரமத்தில் உள்ளோருக்கு வழங்கப்பட்டன.



## RC ஸ்ரீ மாதோபூர் சன்ரைஸ் — RID 3054



ஜெய்ப்பூர் சங்கரா கண் மருத்துவமனையில் 40 நோயாளிகளுக்குக் கண் புரை சிகிச்சை வழங்கப்பட்டது. இதுவரை 947 நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

## RC அலகாபாத் மிட்-டவுன் — RID 3120

உதய்பூர் நாராயண சேவா சன்ஸ்தான் ஆதரவுடன் நடைபெற்ற செயற்கைக் கை, கால் பொருத்தல் முகாமில் சுமார் 360 பேர் பலன் பெற்றார்கள்.



## RC கரட் — RID 3132



கண் பார்வை இழப்பு இல்லாத கிராமம் திட்டத்தின்கீழ், சன்ஸ்கார் நேத்ரா ருக்னலய் ஆதரவுடன் பதர்வாடி கிராமத்தில் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

## RC சாவந்த்வாடி — RID 3170

RC தானே இம்பீரியலுடன் இணைந்து நடத்தப்பட்ட RYLAல் 300 ரோட்டராக்டர்கள் பங்கேற்றார்கள். இதில் விநாடி வினா, பொழுது போக்கு, ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகள் நிறைந்திருந்தன.



## RC மிரா ரோட் — RID 3141



மிரா காவ்ன் கிராமின் வித்யாலயா-வில் ஒரு நூலகம் அமைக்கப் பட்டது. ஆனந்த் பட்கல் அலமாரி யையும், உதய் குல்கர்ணி நூல்களையும் கொடையளித்தார்கள்.

## RC நீலமங்களா — RID 3190

நாகெனஹள்ளியைச் சேர்ந்த 3 மாற்றுத் திறனாளிக் குழந்தை களுக்குச் சக்கர நாற்காலிகள் கொடை யளிக்கப்பட்டன.



## RC மங்களகிரி — RID 3150



RCகள் ஹைதராபாத் டெக்கான் மற்றும் லேக் டிஸ்ட்ரிக்ட் மோய்னாபாத் இணைந்து 200 ஏழை விற்பனை யாளர்களுக்குச் தள்ளு வண்டிகள் வழங்கப்பட்டன.

## RC பெரும்பாவூர் சென்ட்ரல் — RID 3201

பார்ப்பிடம் திட்டத்தின்கீழ், சங்க உறுப் பினர்கள் முன்னிலையில், புதிய வீட்டுக் கான சாவி களை DG ராஜ்மோகன் நாயர் பலன்பெறுபவருக்கு வழங்கினார்.



# செய்திகள்

## RC ஈரோடு நார்த் — RID 3203



ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைப் பணியாளர்கள் நடத்திய உலக TV பேரணியைத் தொடர்ந்து, DG B இளங்குமரன் மருத்துவர்கள், தன்னார்வலர்களைப் பெருமைப்படுத்தினார்.

## RC தூத்துக்குடி டிரெயில்பிளேஜர்ஸ் — RID 3212

பல் பரிசோதனை முகாம் ஒன்றில், தூத்துக்குடி நடுநிலைப் பள்ளி மாணவர்கள் சுமார் 40 பேருக்குப் பரிசோதனை நடத்தப்பட்டது.



## RC பிளத்தாரா — RID 3204



DG பிரமோத் நாயனார் முன்னிலையில் சங்கத் தலைவர் K ரவீந்திரன் செருதவழம் அரசு உயர் நிலைப் பள்ளி மாணவிகளுக்கு மிதிவண்டிகளைக் கொடையளித்தார்.

## RC மெட்ராஸ் சவுத் — RID 3232

இந்தச் சங்கம் ஃபோர்ட் நிறுவனத்துடன் இணைந்து நடத்திய டிஜிட்டல் அறிவு முன்னெடுப்பின் கீழ், 17,000 மடிக்கணினிகள், கல்வி அமைப்புகளுக்குக் கொடையளிக்கப்பட்டன.



## RC ஆலப்பி கிரேட்டர் — RID 3211



சங்கத் தலைவர் விஜயகுமார் முன்னிலையில், ஆலப்பி அரசுப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனைக்கு ஆடைகள் கொடையளிக்கப்பட்டன.

## RC புபனேஸ்வர் மீடோஸ் — RID 3262

சங்கச் செயலாளர் பிகாஷ், உறுப்பினர் பிஜய்லக்ஷ்மி கர் ஏற்பாட்டில் நடைபெற்ற பரிசோதனை முகாமில் பலர் பரிசோதிக்கப் பட்டார்கள்.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# கோடை மனச்சோர்வு

**TCA ஸ்ரீனிவாசராகவன்**

இந்த ஆண்டு வட இந்தியாவில் ஒரு அற்புதமான வசந்த காலமாக இருந்தது. மார்ச் மாதம் முழுவதும் வெப்பநிலை 15 முதல் 30 டிகிரி செல்சியஸ் வரையே இருந்தது. வழக்கமாக, இது 33–35 வரை செல்லும். அவ்வப்போது மழையும் பெய்தது. மேலும் அவ்வப்போது பலத்த காற்றும் வீசியது. இவை அனைத்தும் ஒன்றாக மாசுபாட்டை ஓரம்கட்டியது. பறவைகள் நல்ல நேரங்களை உணர்ந்து அந்திமாலை வரை பாடின. பூக்கள் சற்று தாமதமாக வந்தன, ஆனால் அவை இறுதியாக மார்ச் இரண்டாவது வாரத்தில் பூக்கும் போது அது பார்ப்பதற்கு ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மெய்யாக, ஒரு கவிஞர் சொல்வது போல், வானம்பாடிகள் பறந்தது, நத்தைகள் முள்ளின் மேல் நகர்ந்தது, உலகில் அனைத்தும் சரியாக இருந்தது.

ஏப்ரல் முதல் வாரத்திலும் நல்ல நேரம் தொடர்ந்தது, இதை நான் எழுது கையில், நாம் இரண்டாவது வாரத்தின் நடுவில் இருக்கிறோம். இருப்பினும் வானிலை இன்னும் இனிமையாகவே இருக்கிறது. ஆனால், இரவைத் தொடர்ந்து பகல் வருவதைப் போல, கோடை காலம் நெருங்கி வருவதை என்னால் உணர முடிகிறது, மூக்குத் துவாரங்கள் இப்போது சிறிது சிறிதாக விரிகின்றன, இறுதியில் அவைகளில் நெருப்பு வீசும்.

ஏப்ரல் தொடக்கத்தில் ஒரு மதியம், நானும் ஒரு நண்பரும் மதிய உணவிற்குச் சென்றோம். வரவிருக்கும் வெப்பத்தின் முதல் அறிகுறி சாலையில் இருந்த சிறிய புழுதிச் சுழல்களின் வழியாக எங்களால் உணரமுடிந்தது. கேரளாவில் மேற்குத் தொடர்ச்சி மலையில் வளர்ந்த என் தோழி, சென்னையில் ஒரு கல்லூரியில் படித்த தனது முதல் மாதத்தைப் பற்றி பேச ஆரம்பித்தார். அந்த கடுமையான வெப்பம் அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. அத்தகைய வெப்பம் சாத்தியம் என்பதை தன்னால் நம்ப முடியவில்லை என்று அவர் சொன்னார். இரவில் அவர் குளிர்ச்சியாக இருக்க மெத்தையில் தண்ணீர் ஊற்றினாராம்.

ஆனால், சென்னையில் மாலை 4 மணிக்கு மேல் கடல் காற்று வீசத் தொடங்கும் போது குளிர்ந்து விடுமே என்றேன். தனது ஹாஸ்டல் அறைகளில் மேற்கு நோக்கி ஜன்னல்கள் இருந்தன மற்றும் மின்விசிறிகள் இல்லை எனவே அறைகள் ஒரு கேக் சுடப்பட்ட பிறகு அடுப்புகளின் உட்புறம் போல் இருக்கும் என அவர் கூறினார். பெண்கள் பயன் படுத்திய அனைத்து வாசனை திரவியங்களால் நறுமணமாக இருக்கும் அதேசமயம் நரகத்தைப் போல சூடாகவும் இருக்கும். அதனால் ஒரு மாதத்திற்குப் பிறகு அவருடைய தந்தை பார்க்க வந்தபோது அவர் தேம்பிஅழுதிருக்கிறார். அவர் உடனடியாக தலைமை ஆசிரியரிடம் சென்று முழு பிரிவிற்கும் மின்விசிறிகளை நிறுவ முன்வந்தார்.

எனக்கு அத்தகைய அதிர்ஷ்டம் இல்லை என்று நான் அவரிடம் சொன்னேன். நான் டெல்லி பல்கலைக்கழகத்தின் விடுதியில் இருந்தபோது என் தந்தை ஒருமுறை கூட வந்ததில்லை. எங்களுக்கும் மின்விசிறிகள் இல்லை, டேபிள் ஃபேன்களை மாதம் ரூ.10க்கு வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்தது. பிரச்சனை என்னவென்றால், அறையில் ஒரே ஒரு பவர் சாக்கெட் மட்டுமே இருந்தது, நாங்கள் மின்விசிறி அல்லது மேசையில் உள்ள விளக்கை இரண்டில் ஒன்றை மட்டுமே இயக்கமுடியும். இதில் மின் விசிறியே வென்றது. டெல்லியைப் பற்றி அறிமுகமில்லாதவர்களுக்கு, அது 42 டிகிரி செல்சியஸுக்கு மேல் அதிக வெப்பமாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். நானும் என் நண்பர்களும் படுக்கைகள் மற்றும் திரைச்சீலைகள் மீது தண்ணீரை வீசுவோம், அறைகளை குளிர்விப்போம். ஆனால் சென்னையில் போலல்லாமல், டெல்லியில் மிகவும் வறண்ட வெப்பம் இருக்கும், அதனால் ஈரப்பதம் ஒரு மணி நேரத்தில் ஆவியாகிவிடும்.

சில சமயங்களில் நானும் என் நண்பர்களும் புல்வெளியில் கூட தூங்கினோம். அந்த நாட்களில் டெல்லியில் தாவரங்கள் குறைவாக இருந்ததால் கொசுக்கள் இல்லை. இப்போது நம்மிடம் கொசுக்கள் மற்றும் குளிர்சாதனங்கள் இரண்டும் உள்ளன, இது நல்லது. ஆனால் கொசுக்களும் குளிர்சாதனங்களை விரும்புகின்றது. இது மழைக்கால மாதங்களில் நடக்கும். அதனால் அந்த நச்சு கொசு விரட்டிகளை நாம் பயன்படுத்துவோம். பதினைந்து வருடங்களுக்கு முன்பு அந்த சுருள்களை எரித்து அறையை புகையால் நிரப்பி, அந்த புகைமூட்டம் தாளாமல் ஜன்னல்களைத் திறந்து இன்னும் அதிக கொசுக்களை குடியேற்றினோம். சூடான ஈரப்பத காற்று வீசியதால், குளிர்சாதனங்களை அணைக்க வேண்டியிருந்தது. இவை வெல்லக்கூடிய போர்கள் அல்ல என்று எனது நண்பரிடம் கூறினேன். நாம் இப்போது ஐந்து மாத தீவிர அசௌகரியத் திற்கு நம்மைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது நாம் கொண்டிருக்கும் நீல வானமும் குளிர்ந்த காற்றும் பரந்த வட இந்திய சமவெளியின் மெல்லிய தூசியால் அலங்கரிக்கப்பட்ட தொலைதூர நினைவகமாக மாறும்.■


ADVT.
Rtn. Jennifer E.Jones
R.I.Preisident
Rtn. AKS. V.R.Muthu
District Governor
Rotary
IMAGINE ROTARY
END POLIO NOW
More than 2.5 billion Children saved from Polio
Thank you so much for your Donation towards Polio
YOUR MONEY WILL BE SPENT ON
• Raising Awareness
• Vaccines
• Getting vaccine to the children
• Detecting disease
• Remuneration to Epidemiologists
• Research
Contact :
Dr.Chinnadurai Abdullah
EPNC - Zone 5
98424 21334
Now is our chance to change the world. To Make sure no child is disabled by polio ever again. Join in. Speak out. Donate. Be a part of history.
endpolionow.org
We Are This Close To Ending Polio
To reach a Polio free World...
Donate Rs.1 Lakh
(as one time payment)
Get recognized as
END POLIO FELLOW
Donate 100 USD
and give a pledge to donate
100 USD every year till polio is eradicated.
Get recognized as Polio Plus Society Member
A.R.Rahman
LEKHA ads/Apr 2023/R.I/03
COURTESY
IDHAYAM Mantra
SAY IDHAYAM • SPELL HEALTH

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month. Posted at Egmore RMS Patrika channel.

